24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 | கதிர் 142 | சித்திரை 06ஆம் நாள் | வெள்ளிக்கிழமை | 19 ஏப்ரல் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050



## தமிழ் மக்களுக்கு நன்மை நடக்குமென்றால் எந்த எல்லைகளுக்கும் செல்வதற்குத் தயார்

### வடக்கு ஆளுநர் ராகவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 19

தாய் மண்ணுக்கும் தமிழ் மக்களுக்கும் நன்மை நடக்கும் என்றால் எந்த எல்லைகளுக்கும் அப்பால் சென்று சேவை புரியத் தயாராக உள்ளேன் என்று ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார். முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற தமிழ் - சிங்கள புத்தாண்டு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

30 ஆண்டுகள் போருக்கு பின் ஒரு சகாப்தம் முடிந்திருக்கின்றது. ஒரு தலைமுறையே எங்கள் தேசத்தை விட்டு போகவேண்டிய கட்டா 19



## விண்ணில் பாய்ந்தது ராவணா-1

கொழும்பு, ஏப். 19

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக இலங்கையர்கள் இருவரின் முயற்சியில் நிர்மாணிக்கப்பட்ட 'ராவணா 1' செயற்கைக் கோள் நேற்று 19

## ஐ.தே.கவுக்குள் மோதல் உக்கிரம்

# களத்தில் இறங்கிய ரணில் சஜித், ரவிக்கு வாய்ப்பூட்டு!



கொழும்பு, ஏப்ரல் 19

பொது வெளியில் கருத்து மோதலில் ஈடுபடுவதை உடன் நிறுத்துமாறு அமைச்சர்களான சஜித் பிரேமதாச, ரவி கருணாநாயக்க ஆகியோருக்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார் என்று அமைச்சர் நவீன் திசாநாயக்க தெரிவித்தார். 19

## பேரணிக்கு மொட்டு தயார்நிலை

கொழும்பு, ஏப். 19

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இந்த அரசுக்கு எதிராக மிகப்பெரும் பேரணியொன்று ஏற்பாடு 19

## வேறுபாடுகளைக் களைந்து ஐ.தே. முன்னணி வெல்லும்!

### சம்பிக்க சொல்கின்றார்

கொழும்பு, ஏப். 19

ஐக்கிய தேசிய முன்னணிக்குள் வெவ்வேறுபட்ட கருத்து வேறுபாடுகள், கருத்துக்கள் உள்ள போதிலும் ஐக்கிய தேசிய முன்னணியாக அரசதலைவர் 19

## மன். வண்ணாங்குளத்தில் இடிக்கு இரையானது வீடு

மன்னார், ஏப். 19

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வண்ணாங்குளம் கிராமத்தில் 19

## மக்களின் விருப்பம் இல்லாமல் எந்தவொரு பதவியும் ஏற்கேன்!

### சஜித் பிரேமதாச தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 19

மக்களின் விரும்பம் இன்றி வேறு எந்தவொரு வழிமுறையின் கீழும் பதவிகளை பெறும் நோக் 19

## 10 பேரின் சடலங்களும் கண்ணீருடன் அடக்கம்

கொழும்பு, ஏப். 19

மகியங்கனையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கோர விபத்தில் உயிரிழந்த மூன்று குடும்பங்களைச் சேர்ந்த உறவுகளான 10 பேரினதும்இறுதிக்கிரி 19

## 18 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை!

கொழும்பு, ஏப். 19

அதிக மழை வீழ்ச்சி பதிவாகக் கூடிய 18 மாவட்டங்களுக்கு இலங்கை வளிமண்டலவியல் 19

## காணிகளில் இருந்து மீண்டும் வெளியேறினர் கரந்தாய் மக்கள்

கிளிநொச்சி ஏப். 19

அரச அதிகாரத்தால் அத்துமீறி கையகப்படுத்தப்பட்டது என்று சொல்லப்படும் கரந்தாய் 19



## உலகக்கிண்ணத் தொடர் இலங்கையணி அறிவிப்பு

### கருணாரத்ன தலைவரானார்

இங்கிலாந்தில் அடுத்த மாதம் 30ஆம் திகதி நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடருக்கான இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட்டது. மலிங்க தலைமைப் பதவியில் இருந்து நீக்கப்பட்டு கருணாரத்ன பதில் தலைவராகப் பெயரிடப்பட்டார். அவர் ஒரு நாள் தொடரில் கடந்த நான்கு வருடங்களாக விளையாடவில்லை. இவ்வாறிருக்க மீண்டும் அணியில் சேர்க்கப்பட்ட கருணாரத்னவுக்கு தற்போது தலைமைத்துவமும் கொடுக்கப்பட்டுள்ளது.

(தொடர்புடைய செய்தி பக்கம் 23)



# விகாரி வருட தமிழ்ப் புத்தாண்டு பொதுப் பலன்கள் 2019

**மன்னிக்கும் மனப்பான்மை கொண்டவர்களே!**

உங்கள் ராசிக்கு 11இல் சந்திரன் இருக்கும்போது தமிழ்ப்புத்தாண்டு பிறப்பதால், சோம்பல் நீங்கி சுறுசுறுப்படைவீர்கள். முகமலர்ச்சியுடன் காணப்படுவீர்கள். குடும்பத்தில் அன்பும் மகிழ்ச்சியும் நிலவும். கணவன் - மனைவிக்கு இடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். அடிப்படை வசதிகள் பெருகும். பிரபலங்களின் நட்பும் கிடைக்கும். பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். வீட்டில் விருந்தினர் எண்ணிக்கை அதிகரிக்கும். ராசிநாதன் புதன் ராசியைப் பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்த ஆண்டு பிறப்பதால் உங்கள் இரசனை மாறும். உறவினர்களால் அனுகூலம் உண்டு.

வருடம் பிறக்கும்போது 6ஆம் வீட்டில் சுக்கிரன் மறைந்திருப்பதால் குடும்பத்தில் அவ்வப்போது சலசலப்பு இருக்கும். வீண் சந்தேகம் வேண்டாம். வாழ்க்கைத்துணைவழி உறவினருடன் மனக்கசப்பு வரும்.

வருடம் முழுவதும் சனியும், கேதுவும் 4ஆம் வீட்டிலேயே நீடிப்பதால் வேலைச் சுமை அதிகரிக்கும். வீட்டிலும் மனைவி, பிள்ளைகளுடன் இருக்கும் நேரம் குறையும். வீடு கட்ட அரச அனுமதி தாமதமாக கிடைக்கும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. பழைய வாகனத்தை வாங்குவதைத் தவிர்ப்பது நல்லது. தாயாருக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படும். தாய்வழி உறவினர்களுடன் மோதல்கள் வரக்கூடும். தாய்வழி சொத்துகளில் சிக்கல்கள் வரக்கூடும். மறதியால் பணம், விலை உயர்ந்த நகையை இழக்க நேரிடும்.

பழைய கசப்பான அனுபவங்கள் நினைவுக்கு வரும். தேவையற்ற பழக்கங்களைத் தவிர்க்கவும்.

வருடம் முழுவதும் ராகு 10இல் தொடர்




வதால், சிறுசிறு அவமானம், மறைமுக எதிர்ப்புகள், வேலைச்சுமை வந்து செல்லும். தாழ்வுமனப்பான்மை தலைதூக்கும். அநாவசியமாக யாருக்காகவும் எந்த உறுதிமொழியும் வழங்க வேண்டாம். இந்த வருடம் முழுவதும் குருபகவான் சரியில்லாததால் சில காரியங்களை இரண்டு, மூன்று முறை முயன்று முடிக்க வேண்டி வரும். உங்கள் இயல்புக்கு மாறான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம். தோலில் எரிச்சல், நரம்புச் சுளுக்கு வந்து செல்லும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். வீடு கட்டும் பணி தாமதமாகும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாய்வழி உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். மற்றவர்களின் ஆலோசனைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல், பலமுறை யோசித்து ஏற்பது நல்லது. சொத்து வாங்கும்போது ஆவணங்களை கவனமாகப் பரிசீலித்து வாங்கவும். உணவு விடயத்தில் நேரம் தவறாமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.


10.1.2020 முதல் 3.2.2020 வரை உள்ள காலகட்டத்தில் சுக்கிரன் 6இல் மறைவதால் குடும்பத்தில் சின்னச் சின்ன பிரச்சினைகள் ஏற்படும். நீங்கள் எதைப் பேசினாலும் அதை மற்றவர்கள் தவறாகப் புரிந்து கொள்வார்கள். பண விரயம் உண்டாகும் என்பதால் கவனம் தேவை. மாணவர்கள் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறவேண்டும் என்பதற்காகச் சிரத்தை எடுத்துப் படிப்பீர்கள்.

வியாபாரத்தில் இதுவரை ஏற்பட்ட இழப்புக்கள் நீங்கும். விளம்பர யுக்திகளைக் கையாண்டு இலாபத்தைப் பெருக்குவீர்கள். கடையை நவீனப்படுத்துவீர்கள். தை மாதத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். கொடுக்கல் வாங்கல் சுமுகமாக நடைபெறும். பங்குதாரர்கள் இணக்கமாக நடந்துகொள்வார்கள். உத்தியோகத்தில் ஒருபக்கம் வேலைச்சுமை இருந்தாலும் மற்றொரு பக்கம் தலைமைக்கு நெருக்கமாவீர்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள். வெகுநாள்க்ளாக எதிர்பார்த்திருந்த பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும்.

ராகு ராசிக்கு 10ஆம் வீட்டில் இருப்பதால் உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் ஏற்பட்டு நீங்கும்.

கலைஞர்களுக்கு மூத்த கலைஞர்களால் ஆதாயம் உண்டாகும். இந்தத் தமிழ்ப் புத்தாண்டு வசதி வாய்ப்புகளை அதிகரிப்பதுடன், பதவி, புகழ் போன்றவற்றை வழங்குவதாகவும் அமையும்.

**பரிகாரம்** : *வியாழக்கிழமைகளில் குரு பகவானுக்கு மஞ்சள் வஸ்திரம் சாத்தி, நெய்தீபம் ஏற்றி வழிபடுவதுடன், பசுவுக்கு ஊறவைத்த கொண்டைக் கடலையை உண்ணக் கொடுப்பது அளவற்ற நன்மைகளைத் தரும்.*



# உங்கள் முகராசி எப்படி?

சமுத்திர தேவனாகிய வருணனின் மைந்தன் பிருகுமுனிவர். இவர், உலகமனிதர்கள்மேன்மை அடையும்பொருட்டு, தன் தந்தையிடம் இருந்து, 'சாமுத்ரிகா லட்சண சாஸ்திரம்' எனும் மனித அங்க லட்சண சாஸ்திரத்தைக் கேட்டறிந்தார்.

மனிதர்களின் அங்க லட்சணங்கள் குறித்தும், அவற்றின் அமைப்புக்கு ஏற்ப உருவாகும் பலாபலன்கள் குறித்தும் விரிவாக விளக்கும் இந்த சாமுத்ரிகா லட்சணம், முக அமைப்பின் அடிப்படையில் சுவாரஸ்யமான சில பலாபயன்களை விளக்குகிறது. அதுகுறித்து நாமும் அறிந்து கொள்வோம்.


**உருண்டை வடிவமான முக அமைப்பு**

நிலவு போன்ற அழகிய முக அமைப்பு இது. இப்படியான முக அமைப்பு பெற்றவர்கள் ஆழ்ந்த கடவுள் நம்பிக்கை கொண்டவர்களாகத் திகழ்வார்கள். ஒரு பெண் இது போன்ற முக வடிவைப் பெற்றிருந்தால், அவள் லட்சியப் பெண்ணாகத் திகழ்வாள். உயர்ந்த மனோபாவத்துடனும், சிறந்த குணத்துடனும் இருப்பாள். இவர்களில் ஒருசிலர் பசுத்தோல் போர்த்திய புலியாக இருப்பார்கள். பார்ப்பதற்குச் சாதுவாகத் தோன்றினாலும், இக்கட்டான சூழலில் புலிப்பாய்ச்சலாக இவர்களுடைய செயல்பாடுகள் அமையும்.

**சதுர முக அமைப்பு**

இத்தகைய முக அமைப்புடைய ஆண்கள் வீரம் மிகுந்தவர்களாகத் திகழ்வார்கள். எனினும், எளிதில் ஆவேசப்படுவது இவர்களது குறையாக அமையும். எந்தப் பிரச்சினையையும் தேக வலிமையைக் கொண்டு தீர்க்க முயற்சிப்பார்கள்.

இவர்களுக்குக் காதல் திருமணம் ஏற்படும். இவர்கள் எந்த விடயத்திலும் எளிதில் பணிந்து போகமாட்டார்கள்



**நீள் சதுர முக அமைப்பு**

இத்தகைய முக அமைப்புப் பெற்றவர்கள் அடக்கமும், அமைதியும் நிறைந்தவர்களாக விளங்குவார்கள். எதிலும் மெதுவாகச் செயல்படுவார்கள். எந்த விஷயத்திலும் ஒரு தடவைக்குப் பல தடவை யோசித்தே செயற்படுவார்கள். மற்றவர்கள் சொல்லும் அறிவுரைகளை ஏற்றுக்கொண்டாலும், இவர்கள் நிதானமாக யோசித்தே முடிவெடுப்பார்கள். அச்சமற்றவர்கள். தங்கள் கருத்தைத் தைரியமாக முன்வைக்கக்கூடியவர்கள்.

**முக்கோண வடிவ முக அமைப்பு**

இத்தகைய முக அமைப்பைப் பெற்றிருக்கும் ஆண்கள், மிகுந்த தந்திரசாலியாக இருப்பார்கள். இந்த நபர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று எவராலும் கண்டுபிடிக்க முடியாது.

எந்தவித பிரச்சினைகளையும் ராஜ தந்திரத்துடன் செயல்பட்டு வெல்வார்கள். எளிதில் எவரையும் நம்பமாட்டார்கள். இவர்களது வாழ்வில் உயர்வும், வீழ்ச்சியும் சர்வ சாதாரணமாக இருக்கும். புரட்சிகரமானவர்கள்.

**முட்டை வடிவ முக அமைப்பு**

நடுநிலை இயல்பு படைத்தவர்கள். வீண் பயமும், சுயநலமும் இவர்களிடம் இருக்கும். எல்லோரையும் குறை கூறிக்கொண்டே இருப்பார்கள். நீண்ட ஆயுள் உடையவர்கள். ஆனாலும், வாழ்நாள் முழுவதும் ஏதேனும் பிணிகளுடன் வாழ்க்கையை நடத்துவர்.




# சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்
## சீரணி, சண்டிலிப்பாய்
# இரதோற்சவ சிறப்பிதழ் – 2019

### மஹோற்சவ குருவின் ஆசிச் செய்தி



யாழ்ப்பாணத்தின் திவ்விய தேசமாய் விளங்கும் சண்டிலிப்பாய் சீரணி என்னும் அருட்பதியில் ஆனந்த அருள் ஆட்சி புரியும் தாய்க்கு இன்று தேர்த் திருவிழா பல ஊர் பக்தர்கள் பக்தியோடு நேர்த்தி செய்யும் புண்ணிய தலமாகிய இத்தலத்தில் சிறப்பு தனித்துவமானது அன்னை இன்று சித்திரா பௌர்ணமி நன்நாளில் தன் சிங்கரதத்தில் தேர் ஏறி அடியார்களுக்கு அருள் புரியும் பெரு நோக்கோடு இன்று தேர் வலம் வருகின்றாள். தேர்த்திருவிழா இனிதே சிறக்க மன நிறைவுடன் ஆசி கூறுகின்றேன்.

**பிரம்மஸ்ரீ கு. சோமாஸ்கந்தக்குருக்கள்**
**(தேவஸ்தான குரு)**

### அம்பிகையின் அருள் பெருகட்டும்

சீரணி அம்பாள் அருள் புரிய உன் பாதத்தில் என் மனதை கொடுத்தேன் அம்மா. இசை மழை பொழிய இன்புற்ற மக்கள் எல்லாம் துன்பத்தை மறந்து இன்பத்தில் அலை மோதுகிறார்கள். கண்கொள்ளாக் காட்சியெல்லாம் அடியார் சந்நிதியில் ஆரணி பூரணி அபிராமித் தாயே உன் கடைக்கண் பாராயோ நீதான் சரணம் என்று வந்தவர்க்கு அருள் கொடுக்கும் தாயே எங்களது இதயக் கதவை துறந்து விட்டாய் அம்மா உன் பற்றை மறந்து தவிக்கும் புழுக்கள் போல் துடிதுடித்து இறப்பதைக் கண்ணால் காண்பதற்கு கருணை உள்ளம் பிறக்குதம்மா எங்கள் கனவுகளை நினைவாக்கிக் கொள்பவளே உன் நாமத்தை சொல்ல சொல்ல என் மேனி சிலிர்க்குதம்மா உன் பற்றை அறியாத மானிடர்க்கு உன் பற்றை புகட்டுகிறாய் அம்மா உன் காலடியில் வந்தாலே என் கவலை தீர்ந்துவிடும் அம்மா. தேன் அருவியில் உன் இன்பத்தை காண்பதற்கு வீழ்ந்தேன் அம்மா. இது போல் உலக மக்களுக்கும் பாக்கியம் கிடைக்க வேண்டும் அம்மா என்றும் உன் காலடியில் சரணம் அடைந்தேன் அம்மா .இறைவனின் இதயத்தை தொடுவதற்கு நாங்கள் செய்யும் தொண்டினால் தான் இறைவனின் இதயத்தைத் தொட முடியும். இத்தொண்டு செய்பவர்களுக்கு ஒரு கையால் கொடுத்தால் மறு கைக்கு தெரியாமல் இருக்க வேண்டும்.

***ஆதீன கர்த்தா***
***முருகேசு தம்பையா பரஞ்சோதி குடும்பத்தினர்***

### ஆலய வரலாறு

இலங்கையில் புகழ்பெற்ற யாழ்ப்பாண நகரத்தில் அமைந்துள்ள பதியில் வாழ் மணியகாரன் உடையார் பரம்பரையினராகிய இராமன் சீரணி என்னும் மண்ணில் சிறப்புற்று வாழ்ந்து வந்தார். அவர் மகன் இராமர் அவர் மகன் முருகேசு. முத்தர் இனசன வழியில் பெரிய சாஸ்திரியார் தெய்வானைப்பிள்ளை. அன்னப்பிள்ளை. நன்னிப்பிள்ளை. மயில்வாகனம். பெரிய பிள்ளை. சின்னப்பிள்ளை. வேலர் ஆகியோருடன் இசைந்து வாழ்ந்து வந்தார். நாகபூஷணி அம்பாள் வாலாயம் பெற்ற முருகேசுவிடம் சோமவாரநாள் ஒன்றிலே நாகபூஷணி அம்பாள் கனவில் தோன்றி தான் இவ்விடத்தில் சீரணியில் எழுந்தருள வேண்டும் என்றும் தனக்கொரு கோயில் அமைக்கும்படி கேட்டதற்கு அமைய சைவ முறைப்படி ஒரு கொட்டகை அமைத்து அதில் பூசை செய்துவர வைத்திலிங்கம் அவர்களிடம் ஒப்படைத்தார். இம்முறைப்படி இனசன மக்கள் எல்லோரும் சேர்ந்து வழிபட்டு வந்தார்கள். காலம் காலமாக முருகேசு பரம்பரையினர் பரிபாலித்து வருகின்றனர்.



**தங்கரத தேரேறி........**
சித்தர்கள் கூடி வாழும்
சீரணியாம் பதியினிலே
பக்தர்கள் புடை சூழ
பவனி வரும் நாயகியே
முப்பொழுதும் நமைக்காக்க
முத்துரதத் தேரேறி
சொர்ப்பணமாய் வலம் வருவாள்
சுந்தரி எம் நாகபூசணியே......

**இ.சிறிதரன் - தலைவர்**
**இந்து இளைஞர் மன்றம்.**

### வாழ்த்துச் செய்தி



ஈழவளத்திருநாட்டின் வடபாலமைந்த யாழ் நகரின் வலிதென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவானது பல புகழ்பெற்ற சமய வழிபாட்டுத் தலங்களை தன்னகத்தே கொண்ட ஓர் பிரிவாகத் திகழ்கின்றது. அவ்வகையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு அண்மையில் சீரணி சந்திக்கு அருகாமையில் சண்டிலிப்பாய் அருள்மிகு சீரணி நாகபூசணி அம்பாள் ஆலயம் அமைந்துள்ளதுடன் இங்கு வீற்றிருக்கும் அருள்மிகு சீரணி நாகபூசணி அம்பாள் தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு நல்லாசியும் அருளும் வழங்கி வருகின்றமை சிறப்பம்சமாகும்.

இவ் ஆலயத்தின் வருடாந்த உற்சவமானது ஆண்டுதோறும் 18 தினங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றமை முக்கிய அம்சமாகும். அவ்வகையில் இவ்வருட உற்சவமானது விளம்பி வருஷம் பங்குனி மாதம் 20ஆம் நாள் (03.04.2019) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி விகாரி வருஷம் சித்திரை மாதம் 07ஆம் நாள் (20.04.2019) கொடியிறக்கத்துடன் நிறைவடைகின்றது.

இவ் ஆலயத்தின் தேர்த்திருவிழாவினை முன்னிட்டு ஆண்டுதோறும் தேர்த்திருவிழா சிறப்பு மலர் வெளியிடப்படுகின்றமை சிறப்பம்சமாகும். அவ்வகையில் இவ்வருடத் தேர்த் திருவிழாவானது இன்று (19.04.2019) சிறப்பாக நடைபெறும் இவ்வேளையில் வெளியிடப்படும் தேர்த்திருவிழா சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வடைவதுடன். அருள்மிகு சீரணி நாகபூசணி அம்பாளின் அருளும். ஆசியும் அனைவருக்கும் கிடைக்க நாகபூசணி அம்பாளை வேண்டுகின்றேன்.

**உ. யசோதரா**
**பிரதேச செயலர், பிரதேச செயலகம்**
**சண்டிலிப்பாய்.**

### செஞ்சொற் செல்வரின் ஆசிச் செய்தி



அம்பிகையை சரணடைந்தால் அதிக வரம் பெறலாம். சண்டிலிப்பாய் திருவூரில் எழுந்தருளி அருள்பாலிக்கும் சீரணி நாக பூஷணி அம்பாள் தேர் ஏறிவரும் திரு நாள் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்த மடைகின்றேன். அருள் வளம் நிறைந்த அம்பாளின். திருத்தேர் விழாக் காண்பதற்கு பலவூர் மக்களும் பக்தியோடு ஒன்று கூடும் நன் நாள் இன்று ஆடுவோர்கள் அடியளித்துக் கும்பிடுவார்கள் பாடிப் பரவசமாக பக்தர் கூட்டம் வீதியெல்லாம் மெய்யுருகி நிற்கும் காட்சியை இவ்வாலயத்தில் இந் நாளில் காணலாம். சீரணி அம்பாளுக்கு நேர்த்தி வைத்து காவடி எடுப்பவர் தொகை எல்லையில்லை. தனித்துவச் சிறப்பு மிக்க இத்திருநாள் சிறக்க வேண்டி எனது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

கலாநிதி. ஆறு. திருமுருகன்.
தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

### அன்னையவளின் இரதோற்சவ வாழ்த்துச் செய்தி



சைவமும் தமிழும் கமழும் யாழ். மண்ணில் செழிப்பு மிக்க சண்டிலிப்பாயின் சீரணிப் பதியில் நாகபூசணி அம்பிகையாக வீற்றிருந்து அருள்பாலிக்கின்ற அன்னையவள் இயற்கை எழில் சூழ்ந்த அமைதியான சூழலில் புதுப்பொழிவுடன் புனரமைப்பு பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் வேண்டுவோருக்கு வேண்டும் வரமளிக்கும் அன்னையின் மகோற்சவம் சிறப்பாக நடைபெற்று நாடி வரும் பக்தருக்கு வேண்டிய வரமளிப்பதற்காக இன்று தங்கரதத்திலே பக்தர்கள் புடைசூழ வீதியுலா வந்து காட்சிதரும் நன்நாளாகும் இந்த நாளில் வெம்மை தணித்து துன்பம் நீக்கி அனைவரின் குறைகளையும் தீர்த்தருள் வேண்டி உளமார பிரார்த்திக்கின்றேன். அன்னையின் தேர்த்திருவிழாவிற்கான வாழ்த்துச்செய்தி வழங்குவதற்கு அடியேனுக்கு வாய்ப்பு கிடைத்தமையினையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

குணசிங்கம் சற்குணராசா செயலாளர், வலிகாமம்தென்மேற்கு
பிரதேசசபை, மானிப்பாய்.

**MANIYAM IMPEX**
இல.121A
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222819,
077 3632963

**மொடேண் மற்ஸ் அக்கடமி**
MODERN MATHS ACADEMY
பிரதேச செயலகம் அருகில், சண்டிலிப்பாய்.
தரம் 3 முதல் ஆங்கில மொழி மூல வகுப்புக்களும்
நடைபெறுகின்றன. நிர்வாகி : B. குகா

**அம்பாள் அரிசி ஆலை**
காரைநகர் வீதி,
சண்டிலிப்பாய்.
072 7850 550

**ஐங்கரன் மோட்டோர்ஸ்**
சந்தை வீதி யாழ். றோட்,
மானிப்பாய்.
021 225 5150

**சுந்தர்சன்**
பிரதான வீதி,
மானிப்பாய்.
021 225 5136

**கணபதி ஹாட்வெயார்**
துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள், மின்சார
உபகரணங்கள் மற்றும் கட்டட பொருள்கள் என்பவற்
றையும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.
தொட்டிலடி, சங்கானை. 077 6365 983

**சக்தி எலக்ரோனிக்கல்ஸ்**
ஓட்டக்கரை வீதி, சங்கானை.

**பாக்கியரத்தினம் ஹாட்வெயார்**
இல. 163, 165, பிரதான வீதி,
சங்கானை. 021 321 2713
Elephant house ஏகவிநியோகஸ்தர்

**மணி & ஈசன் ஜுவல்லர்ஸ்**
22 கரட் தங்க நகைகளை ஓடருக்கு உத்தரவாத்துடன் செய்து கொடுக்கப்படும்.
பிரதான வீதி, சங்கானை.
021 791 2677

## துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூசணி அம்பாள்

வெள்ளவத்தையில் அமைந்துள்ள நாகபூசணி அம்மன் ஆலயத்தில்
அருள்வாக்கு கூறும் ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள்
சனிக்கிழமை 20 ஆம் திகதி மாலையிலிருந்து
21. 22 ஆகிய திகதிகளில் ஞானவைரவர் ஆலயம்
கலாசாலை வீதி. 2 ஆம் ஒழுங்கை. திருநெல்வேலி வடக்கு
யாழ்ப்பாணத்தில் அருள்வாக்கு கூறுவார்.
**22.04.2019** அன்னதானம் வழங்கப்படும்.
அடியவர்கள் வந்து இறையருள் பெற்றுச்செல்க.
**அருள்வாக்கின் மூலம் திருமணத்தடை, கல்வித்தடை,
வெளிநாட்டு பயணத்தடை, குழந்தை பேறு, குடும்பப்பிரச்சினை
ஆகியவற்றுக்கு தீர்வினை பெற்றுத்தருவார்.**

**பூஜை நேரம் - காலை 10.00 மணி, மாலை 5.00 மணி**

குறிப்பு - கலாசார உடையுடன் வருகை தரவும்.
தொடர்பு - 021 221 9127, 077 801 2226


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 . 05 . 1976



மறைவு 03 . 05 . 2015

திதி: சதுர்த்தசி (19.04.2019)

### அமரர் தியாகராஜா சசிக்குமார்

நான்காண்டுகள் சென்றாலும் நாளாக நாளாக தீராது
உங்கள் பிரிவின் வலி கால்நூற்றாண்டு கடந்தாலும் உங்கள்
கருணைமுகம் காணாது அடங்காது நாம் கதறி அழும் ஒலி
வானுறையும் தெய்வ சந்நிதியில் ஆன்ம ஈடேற்றம் பெற

**உங்கள் பிரிவினாலும் துயரத்தாலும் வாடும்**
பெற்றோர்கள், சகோதரர்கள்,
அப்பா (தியாகராஜா), அம்மா புஸ்பராணி,
தம்பி: (மதனமோகன், பிரதீபன், ஜெயரூபன்),
தங்கை: சுஜந்தா, சியமளா,
மச்சாள் - சுதர்சினி, துளசி, மச்சான் - கரன், யசிகரன்
பெரியப்பா - டிசாந், தனுஷியா, மருமகன் - அக்ஷயன்
**முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

(CS/24794(11.17)

## கட்டடம் வாடகைக்குக் கோரல்/ குத்தகைக்குக் கோரல்

வடக்கு மாகாண கால்நடை வைத்தியசாலையினை இயக்குவதற்கும் கால்நடைகளுக்கான வைத்திய சிகிச்சைகளை மேற்கொள்வதற்கும் பின்வரும் வசதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் கட்டடமும் காணியும் வாடகைக்கு / குத்தகைக்கு வழங்க விரும்புபவர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

**வசதிகள் மற்றும் நிபந்தனைகள்**

01) கால்நடைகளுக்கும் செல்லப்பிராணிகளுக்கும் வைத்திய சிகிச்சை மேற்கொள்ளக்கூடிய வகையில் குறைந்தது 1600 சதுர அடிகள் கொண்ட (நான்கு அறைகள் 14x12) கட்டடமும். வாகனத் தரிப்பிடத்துக்கு 1000 சதுர அடிகள் வரையான நிலப்பகுதியையும் கொண்டிருக்க வேண்டும்.

02)யாழ். - காங்கேசன்துறை வீதியில் கொக்குவிலுக்கும் இணுவிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் பிரதான வீதியில் அல்லது அண்மித்த பகுதியில் அமைந்திருத்தல் வேண்டும். (போக்குவரத்து மார்க்கங்கள் அண்மித்த கட்டடம் விரும்பப்படும்)

03)மின்சாரவசதி (3 Phase). நீர்வசதிகள் மற்றும் கழிப்பறை வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

04) குறைந்தது 02 வருடங்களுக்கு ஒருதடவை புதுப்பிக்கக் கூடிய வகையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

05) முற்பணம் வழங்கப்பட மாட்டாது.

06) மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை வழங்கப்படும்.

மேற்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டதான விண்ணப்பத்தில் வீட்டு உரிமையாளரின் முழுப்பெயர், தொடர்பு முகவரி, தொலைபேசி இலக்கம், எதிர்பார்க்கும் மாதாந்த வாடகை, தொகை ஆகிய விவரங்களுடன் ஏனைய தகவல்களையும் உள்ளடக்கி தங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் கட்டடம் வாடகைக்கு / குத்தகைக்கு எனக் குறிப்பிட்டு **பிரதிப் பணிப்பாளர், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், யாழ். மாவட்டம், திருநெல்வேலி** என்னும் முகவரிக்கு 05.05.2019 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவகையில் நேரடியாகவோ பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**பிரதிப்பணிப்பாளர்,
கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்,
யாழ்.மாவட்டம்.
021 222 2387**

(IN/9979)(11)

# பரமார்த்த குருவும் சீடர்களும்

"ஙொய்ய்ய்..." என்ற சப்தம் பரமார்த்தரின் காதைத் துளைத்தது. படுத்துக் கொண்டு இருந்தவர், எழுந்து மேலே பார்த்தார். அவர் தலையைச் சுற்றிலும் சில கொசுக்கள் பறந்து கொண்டு இருந்தன. உடனே தம் சீடர்களைக் கூப்பிட்டார்.

"குருதேவா! இதென்ன விசித்திரமாக இருக்கிறது? இது மாதிரிச் சின்னச் சின்னப் பறவைகளை இதற்கு முன்பு நாம் பார்த்ததே இல்லையே!" என்றான் மட்டி.

அப்போது. குருவையும் சீடர்களையும் சில கொசுக்கள் கடித்தன.

வலி தாங்காத குரு. கத்தினார், சீடர்களும் அவருடன் சேர்ந்து கூச்சல் போட்டனர்.

"குருநாதா! இந்தப் பறவைகள் ஏன் நம்மைக் கடிக்கின்றன?" எனக் கேட்டான், மடையன்.

அவை கொசுக்கள் என்பது பரமார்த்தருக்குத் தெரியாது. உண்மையைச் சொன்னால் சீடர்கள் கேலி செய்வார்கள் என்று நினைத்தார். அதனால், "ஒரு சமயம் நான் வேட்டையாட காட்டுக்குப் போயிருந்தேன். அப்போது ஒரு மரத்தில் நூறு பறவைகள் இருந்தன. எல்லாவற்றையும் அம்பு விட்டுக் கொன்று விட்டேன்.

அதன் ஆவிகள்தான் இப்போது வந்து தொல்லை கொடுக்கின்றன" என்று புளுகினார்.

உடனே சிஷ்யர்கள், "அன்புள்ள ஆவியே, எங்கள் குருவின் குற்றத்தை மன்னித்து, எங்களுக்குத் தொல்லை தராமல் இருங்கள்" என்று ஒவ்வொரு கொசுவிடமும் வேண்டினார்கள்.

"உஸ்ஸ்... சத்தம் போடாதே... ஆவிகளுக்கு நாம் பேசுவது கேட்கும். அதனால் எல்லாப் பறவைளையும் தந்திரமாகத்தான் பிடிக்க வேண்டும்" என்று மெல்லக் கூறினான், முட்டாள்.

"குருவே! ஒவ்வொரு பறவையாகப் பிடித்துத் தூக்கில் தொங்க விட வேண்டும்!" என்று குதித்தான், மூடன்.

"அதைவிட, அதற்குக் "கிச்சு கிச்சு" மூட்டி, அது சிரித்துக் கொண்டு இருக்கும்போதே, ஊசியால் குத்திக் கொலை செய்து விடலாம்!" என்றான் மண்டு.

"சரி...சரி... முதலில் ஒவ்வொரு பறவையாகப் பிடியுங்கள்" என்று கட்டளை இட்டார் குரு. மண்டுவின் மொட்டைத் தலையில் உட்கார்ந்திருந்த ஒரு கொசுவை அடிக்க நினைத்தான் முட்டாள். தன் தலையில் இருந்த கொள்ளிக் கட்டையால் அவன் தலையில் ஓங்கி ஒரு அடி அடித்தான்.

மண்டையில நெருப்புப் பட்டதும், "ஐயோ..." என்று கதறினான் மண்டு.

மெல்ல ஒரு கொசுவைப் பிடித்தான், மட்டி. அதற்குக் கிச்சு கிச்சு காட்டினான், மடையன். பரமார்த்தரோ, தம் கைத்தடியால் அந்தக் கொசுவை நசுக்கப் பார்த்தார். அதற்குள் அது பறந்து போய் விட்டது.

சற்று நேரத்தில் எல்லா கொசுக்களும் வேறு எங்கோ பறந்து சென்று விட்டன. "குருவே" இந்தப் பறவைகளுக்கு மந்திரம் தெரியும் போலிருக்கிறது. நம் திட்டத்தைத் தெரிந்து கொண்டு மாயமாய் மறைந்து விட்டன" என்றான்.

"வேறு வழியில்தான் பிடிக்க வேண்டும்" என்றான், மண்டு.

"குருவே! எனக்கு ஓர் அற்புதமான யோசனை தோன்றி விட்டது. "மூட்டைப் பூச்சிக்குப் பயந்து கொண்டு வீட்டைக் கொளுத்தினானாம்" என்று சொல்கிறார்களே! அதைச் செய்து பார்த்தால் என்ன? என்று கேட்டான் மட்டி.

"ஆமாம் குருவே! நாம் பயப்படாமல் வீரத்துடன் கொளுத்துவோம்!" என்றான் மடையன்.

"குருவே! அப்படியே இன்னொரு திட்டத்தையும் செயல்படுத்துவோம்! எரிகிற மடத்தோடு சேர்ந்து

(5ஆம் பக்கம் பார்க்கவும்)


## வேலைவாய்ப்பு

**எமது நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கு உடன் விண்ணப்பிக்கலாம்**

- மனிதவள முகாமையாளர் (HR Manager)
- கணக்குப் பதிவாளர் / உதவியாளர்
- வரவேற்பாளர்
- காசாளர்
- பார்மசி அனுபவமுள்ளவர்கள் (முன் அனுபவம் உள்ளோர்க்கு ரூபா 20000/= இற்கு மேல் வழங்கப்படும்)
- சாரதி

**நேர்முகத்தேர்வுக்கு வருகையில் சுயவிவரக் கோவையுடன் வரவும்**

நேர்முகத் தேர்வுக்கு வரமுடியாதவர்கள் பின்வரும் மின் அஞ்சலுக்கு சுயவிவரக்கோவையை அனுப்பலாம்.

**yarlhospital@yahoo.com**

திகதி - 21. 04. 2019
நேரம் - முற்பகல் 10 மணி
இடம் - யாழ்வைத்தியசாலை
315, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.


## மரண அறிவித்தல்

மலர்வு 17 . 01 . 1919



உதிர்வு 18 . 04 . 2019

### திருமதி சின்னம்மா பொன்னு

சிறுப்பிட்டி மேற்கு ஜனசக்தியைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா பொன்னு நேற்று (18.04.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மூத்தான் பொன்னுவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணபதி - வெள்ளைச்சி ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்வன், காணிக்கை மற்றும் சிவப்பியம்மா, சின்னாச்சியம்மா (கனடா) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் சோதி, தங்கம்மா, சின்னத்துரை, பூமணி, இராசமணி, செல்லத்துரை, செல்வராசா (பொது முகாமையாளர் - வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம்), யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாலசிங்கம், குணசிங்கம், காலஞ்சென்ற சண்முகனாதன், மற்றும் றஞ்சிதமலர், செல்வம், காலஞ்சென்ற இராசதுரை மற்றும்யோகோஸ்வரி, இராதாலட்சுமி, வசந்தராசா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2019) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 4.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை உப்புவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். **தகவல்: குடும்பத்தினர்.**


## பணிப்பெண் தேவை

வீட்டுவேலை செய்வதற்குப் பணிப்பெண் தேவை.
**076 879 7369** (CS/24796) (11.17)

## விற்பனைக்குண்டு

**30 ஸ்ரீ - XXXX ஜெனனி மினிபஸ்** விற்பனைக்குண்டு.
**077 968 4186**
(cs.24790)(11.17)

## விற்பனைக்கு

திருநெல்வேலியில் பலாலி றோட்டுக்கு அண்மையில் 1½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
**நேரடித் தொடர்புகளுக்கு - 077 866 6932**

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை, கிளிநொச்சியில் இயங்கும் விற்பனை நிலையங்களுக்கு விற்பனை உதவியாளர், சிட்டை எழுதுநர் தேவை.
**- 076 159 2322**

## வேலைக்கு ஆள் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் லவ்லி கூல் பாரிற்கு

1. **சமையலாளர்**
2. **உணவு பரிமாறுபவர்**
3. **சிற்றூழியர் தேவை.**

உடன் நேரில் வரவும்.

**லவ்லி கூல்பார்,
A9 வீதி, சாவகச்சேரி. 077 863 0268**

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாமும் எரிவோம்!" என்றான் மூடன்.

"அப்படிச் செய்தால் செத்துப் போய் விடுவோமே?" என்றான் மண்டு.

"செத்தால்தான் ஆவியாகலாம். ஆவியாக மாறினால் நமக்குத் தொல்லை தருகிற சின்னப் பறவைகளை எல்லாம் சுலபமாகப் பிடிக்கலாம்!" என்றான் மூடன்.

"பலே மூடா!" என்று அவனைப் பாராட்டினார் பரமார்த்தர்.

அவன் திட்டப்படி, மடத்துக்குக் கொள்ளி வைத்துவிட்டு, எல்லோரும் உள்ளே சென்று நின்றனர். "திகு, திகு" என்று நெருப்பு பிடித்துக் கொண்டு எரிய ஆரம்பித்ததும், காட்டுக் கத்தலாய்க் கூச்சல் போடத் தொடங்கினார்கள்.

சப்தம் கேட்டு, அக்கம் பக்கம் இருந்தவர்கள் ஓடிவந்து பார்த்தனர். நெருப்பை அணைத்துடன், குருவையும் சீடர்களையும் தீயிலிருந்து காப்பாற்றினார்கள்.

அப்போதும் "சே! இந்த அறிவு கெட்ட மக்கள் நம் அருமையான திட்டத்தைப் பாழாக்கி விட்டார்களே!" என்று முணு முணுத்துக் கொண்டார், பரமார்த்தர்!

## 16 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 15 . 04 . 1944

விண்ணில் 19 . 04 . 2003

### திருமதி கந்தசாமி சிவநாயகி (கிளி)

(திருநெல்வேலி, கிழக்கு)

திதி : 22.04.2019 திருதியை

ஆண்டுகள் பதினாறு ஓடியே மறைந்தன
ஆயிரம் விடயங்கள் நடந்தேறின
ஆனாலும் உங்கள் நினைவுகள் பசுமையானது
இன்னும் பல ஆண்டுகள் கழிந்தாலும்
உங்கள் அன்பும் பாசமும் எம்முள் - நீங்காது அம்மா

இல.20, முதலாம் ஒழுங்கை,
சின்னப்புதுகுளம், வவுனியா.

குடும்பத்தினர்.

021 492 5686

## மரண அறிவித்தல்



### திருமதி சின்னம்மா சுப்பிரமணியம்

கைதடி தெற்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா சுப்பிரமணியம் 17.04.2019 புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான அமிர்தமணி, நாச்சிப்பிள்ளை ஆகியோரின் பெறாமகளும், காலஞ்சென்ற இராமலிங்கம் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் கண்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சேதுப்பிள்ளை, ஜெகசோதியம்மா கருணாகர் மற்றும் வேலாயுதர் ஆகியோரின் மைத்துனியும், சந்திரகுமாரதேவி (சுவிஸ்), லங்காநேசன் (சுவிஸ்), சுபத்திரா (பணியாளர், அரசசிறுவர் பொறுப்பேற்கும் இல்லம், கைதடி), நிர்மலா, தேவசேயன், நகுலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தயாளினி, சுதர்சினி (லண்டன்), விஜயரூபன் (லண்டன்) ஆகியோரின் பெரிய தாயாரும், நிர்மலநாதன் (சுவிஸ்), புனிதராணி (சுவிஸ்), புஸ்பதாஸ், றெஜினா (பிரான்ஸ்), தர்சினி, பகீரதன் (கொழும்பு), சுதர்சன் (புரூணை), சுபாசினி, சுபத்திரா (கனடா), பொன்னம்பலம், காலஞ்சென்ற விஜயகுமார் மற்றும் கௌசிகா ஆகியோரின் அன்பு மாமியாரும், நேத்தன், நெவின், நெகேமியா, நெல்சன், ஜதுனன், தர்சனன், தமிழ்நிலவன், அபிஸ்க்கா, விகாஸ், லரன்ஜா, விசாகா, வைசாலினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (20.04.2019) சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இருபாலை N.M.L தேவாலயத்தில் இடம்பெற்று தேவாலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கைதடி தெற்கு. மகள் - சு.சுபத்திரா

(CS/23198)(11.17)

077 719 4808

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வேலம்மா இரத்தினகோபால்



இல. 185/9, கில்னர் ஒழுங்கையைச் சேர்ந்த வேலம்மா இரத்தின கோபால் நேற்று (18.04.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வடிவேலு நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இரத்தினகோபாலின் (C.T.B நேரக் காப்பாளர்) அன்பு மனைவியும் சிவபுரத்தரசியின் (ஆசிரியை யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) அன்புத் தாயாரும் கிரிதரனின் (முகாமையாளர் வேலுப்பிள்ளை அன் சன்ஸ்) அன்பு மாமியாரும் சண்முகேசனின் (வர்த்தக வங்கி - மன்னார்) அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2019) வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

185/9, கில்னர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். 021 222 8242

தகவல்:
குடும்பத்தினர்.

## சதாசிவம் விஜயகுமார்

*(முன்னாள் தொழில்நுட்ப இயந்திரவியலாளர் - வரையறுக்கப்பட்ட இலங்கை சீமெந்து தொழிற்சாலை, காங்கேசன்துறை)*



கோலாலம்பூர் மலேசியாவினைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரத்தினை வதிவிடமாகவும்கொண்ட சதாசிவம் விஜயகுமார் (முன்னாள் தொழில்நுட்ப இயந்திரவியலாளர்-வரையறுக்கப்பட்ட இலங்கை சீமெந்து தொழிற்சாலை, காங்கேசன்துறை) நேற்று (18.04.2019) வியாழக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.


அன்னார் கரலஞ்சென்றவர்களான சதாசிவம் செல்வமணி தம்பதிகளின் அன்புப்புதல்வனும் காலஞ்சென்றவர்களான நவரட்ணம், செல்வநாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும் சுசீலாவின் அன்புக்கணவரும் டினேசின் (அபிவிருத்திஉத்தியோகத்தர், பிரதேச செயலகம், சங்கானை) பாசமிகு தந்தையும் நிந்துஜாவின் அன்பு மாமனாரும் சிவகுமார், பவானியின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2019) காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் மாவிட்டபுரம் தச்சன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 512 2936

தகவல்:
குடும்பத்தினர்.

## தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம்



தோற்றம் 09.11.1939
மறைவு 14.04.2919

யாழ். கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் கைதடி தெற்கை வசிப்பிடமாகவும், கனடாவை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம் 14.04.2019 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கதிர்காமத்தையன் மற்றும் சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், சிறிசிவாஈஸ்வரன் (ஆஸ்திரேலியா), சிறீதரன் (கனடா), ஜெயமதி (லண்டன்), மதிவாணி (கனடா), கௌசிகன் (கனடா), திருசாந்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், தாமோதரம்பிள்ளை, சிவகோசரியார் மற்றும் அமிர்தலிங்கம், சிவபாக்கியம், முத்துக்குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவஞானேஸ்வரி, பரமேஸ்வரி, சிவகுமாரன் (கனடா), விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கௌசல்யா (ஆஸ்திரேலியா), சிவானி (கனடா), நந்தகுமாரன் (லண்டன்), சுரேஸ்குமார் (கனடா), தனுஜா (கனடா), வாமதேவன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், விதுஷா, கஜனன், ஆதித்தன், ஆரணி, லக்சுமி, சாங்கவி, தமிழ்ப்பிரியன், கலைப்பிரியன், தனகவி, பபிசா, கோபிகா, டினோஜ், பிரித்திகா, அக்ஷரா, நகுல் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.04.2019 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கைதடி தெற்கு,
கைதடி.
செ.செல்வநாயகம் (சகலன்)
076 628 9344


சிறீதரன் 0016 4738 82899
கௌசிகன் 0014 166175550

## என்னாாா வெயில்!!











# ஒப்பனை இல்லாத நடிப்பு மீது ஈர்ப்பு

## - சாய்பல்லவி


பிரேமம் படத்தில் மலர் டீச்சராக நடித்து வரவேற்பு பெற்றவர் சாய் பல்லவி. தமிழில் கரு, மாரி 2 என இரண்டு படங்களில் நடித்துள்ளார். சூர்யாவுடன் நடித்துள்ள என்ஜிகே திரைப்படம் மே 31ஆம் திகதி திரைக்கு வர உள்ளது.


இந்த நிலையில் அவர் வழங்கிய நேர்காணலில், 'நான் ஒரு போதும் அழகு சாதன பொருள்கள் விளம்பரத்தில் மட்டும் நடிக்கவே மாட்டேன். அழகு சாதன பொருள்களை பயன்படுத்துவதால் மட்டும் ஒருவருடைய அழகு மாறிவிடாது.


ஒப்பனை போட்டால் வேறு ஒருவர் போல தெரிகிறேன் என்று எனக்கு வேண்டியவர்கள் கூறுகிறார்கள். அதன் காரணமாக தான் ஒப்பனை போடாமல் நடிக்கிறேன். அதை தான் இயக்குனர்களும் விரும்புகின்றனர்' என்று அவர் தெரிவித்

## இது புதுசு

மீனின் செதில் நீக்கக் கூடிய 'மீன் செதில் நீக்கி' சந்தையில் அறிமுகமாகியுள்ளது. இவை 190 ரூபாவுக்கு விற்பனை செய்யப்ப டுகின்றன. இதன் மூலம் மீனின் செதில்கள் வெளியில் சிந்தாதவாறு நீக்க முடியும்.







## அவமானங்களை எளிதாய் கடப்போம்

அமெரிக்க நாடாளுமன்றத்தில், அதிபர் ஆப்ரஹாம் லிங்கன் உரைநிகழ்த்தும்போது.... அவரை மட்டம்தட்டும் நோக்கில் எதிர் தரப்பு பிரமுகர் ஒருவர் எழுந்து,

"ஆப்ரஹாம்... உங்கள் தந்தை தைத்துக் கொடுத்த செருப்பு இன்னும் என் காலை அலங்கரித்துக் கொண்டு இருக்கிறது" என்றாராம்.

அதற்கு ஆப்ரஹாம் லிங்கன்.....

"நண்பரே என் தந்தை இறந்து பல வருடங்கள் ஆகிவிட்டது. இருப்பினும் அவர் தைத்து கொடுத்த செருப்பு உங்களின் காலை இன்னும் அலங்கரித்துக்கொண்டு இருக்கிறதென்றால், அது அந்த அளவுக்கு நேர்த்தியாக தைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் அவர் தைத்த இடத்தில் ஏதேனும் பழுது ஏற்பட்டிருந்தால் அதை என்னிடம் கொடுங்கள்...

நான் அதை உங்களுக்கு சரி செய்து தருகிறேன்..

எனக்கு செருப்பு தைக்கவும் தெரியும்...

நாட்டை ஆளவும் தெரியும்..!!" என்று பதிலுரைத்தாராம்.

தன்னம்பிக்கை, விடாமுயற்சி இவைகளில் இருந்து பெற்ற ஏழ்மையின் அனுபவ அறிவுக்கு நிகராக வேறெதுவும் போட்டியிட முடியாது.

பதவியில் இருக்கும் போதும் அவமான படுத்திய நபர் மீது கோபம் கொள்ளாமல், தன் அதிகாரத்தையும் காட்டாமல் புத்திசாலி தனமாக பணிவோடு பதில் அளித்தே அவமான படுத்தியவரின் மூக்கை உடைத்திருக்கிறார் லிங்கன்...!

### ச ப் பா ணி @manipmp

வாழ்க்கை ஒரு செவ்வகம்
#மொபைல்போன்

நடக்காததெல்லாம்
நன்மைக்கே!

தெய்வம் நின்று கொள்ளும்
*அசையாது

என்னைப் பார்
தன்னம்பிக்கை வரும்
"பணம்"!

விலையில்லாமல் கிடைப்பது
வியர்வை மட்டுமே
#வெயில்

உலகம் சுருங்கிவிட்டது.
மனிதர்கள் விரிவடைந்துவிட்டனர்



மொபைல் போன்கள் வந்த பிறகு,
மக்களிடம் "விழிப்புணர்"வை விட,
"முழிப்புணர்வே" அதிகமாக இருக்கிறது.

# வெயிலோடு விளையாடு

காலநிலைமாற்றம் என்பது இனி வரும் காலங்களில் நாம் ஒவ்வொருவரும் எதிர்கொள்ளப்போகும் முக்கியமான சவால்களில் ஒன்றாக இருக்கும். இந்தக் காலநிலைமாற்றத்தால் ஏற்படப்போகும் பாதகமான விளைவுகளில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகச் சில முக்கியமான விடயங்களை தெரிந்து வைத்திருப்பது கட்டாயமாகும்.

கால நிலைமாற்றத்தில் தற்பொழுது எதிர்கொண்டிருப்பது அதீத வெப்பமேயாகும். அதீத வெப்பத்தின் காரணமாக எமது சுகநலத்தில் ஏற்படப்போகும் பாதிப்புக்கள் தொடர்பாகவும், அந்தப் பாதிப்புக்களிலிருந்து நாம் விடுபடுவதற்கு அறிந்துகொள்ள வேண்டிய தகவல்கள் தொடர்பாகவும் இக் கட்டுரை ஆராய்கின்றது.

அதீத வெப்பம் காரணமாக எமது உடலில் பின்வரும் மாற்றங்கள் ஏற்படலாம்.

- அதிக வியர்வை ஏற்படலாம்
- அதீதமான பலவீனம் அல்லது களைப்பு ஏற்படலாம்.
- தலைவலி (தலையிடி) ஏற்படலாம்.
- தசைப்பிடிப்பு அல்லது தசை நோவு ஏற்படலாம்.
- சில வேளைகளில் மயக்கம் ஏற்படலாம்.
- முகப்பருக்கள் போன்ற சிறிய சிவப்புநிறக் கொப்புளங்கள் தோலில் தோன்றலாம். ( கழுத்தைச் சுற்றியும், நெஞ்சு, அரைப்பகுதி, முழங்கை மடிப்புக்கள் போன்றவற்றில் தோன்றலாம்.)
- மயக்கம் ஏற்படலாம்.

மேற்குறிப்பிட்ட அசௌகரியங்கள் உங்களுக்கு ஏற்படின் உடனடியாக அருகிலுள்ள அரச மருத்துவமனைகளில் மருத்துவ ஆலோசனைகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

அதீத வெப்பமான காலப்பகுதிகளில் கவனம் தேவைப்படுபவர்களாகவும், அதிக ஆபத்துக்குள்ளாகக் கூடிய வர்களாகவும் பின்வருவோர் காணப்படுகின்றார்கள்.

- கைக்குழந்தைகள் மற்றும் இளஞ் சிறார்கள்.
- 65 வயதுக்கு மேற்பட்டவர்கள்.
- அதிக உடல் நிறை மற்றும் உடற் பருமனானவர்கள்.
- அதிக சக்தியை இழக்கும் வேலைகளில் ஈடுபடுபவர்கள்.
- அதிக உடற்பயிற்சிகளில் ஈடுபடுபவர்கள்.
- உடலியல் நோய்களுக்குஆளானவர்கள். (இதய நோய்கள் அல்லது உயர் குருதி அழுத்தம்)

இவர்கள் தொடர்பில் அதிக அக்கறையுடன் இருத்தல் வேண்டும்.

அதீத வெப்பத்திலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு பின்வரும் நடைமுறைகளை நாம் பின்பற்றுதல் மிகவும் அவசியமாகும்.

1. போதுமானளவு கொதித்தாறிய நீரைப் பருகுதல் வேண்டும். இந்தக் காலப்பகுதிகளில் தாகம் ஏற்படும் வரை காத்திருக்காது அடிக்கடி கொதித்தாறிய நீரைப் பருகுதல் வேண்டும்.

எமக்கு நாளொன்றுக்குத் தேவையான திரவத்தின் அளவைப் பின்வரும் சூத்திரத்தின் மூலம் கணித்துக்கொள்ளலாம்.

$$\text{தேவையான திரவத்தின் அளவு (நாளொன்றுக்கு)} = \frac{\text{உடல் நிறை (கிலோ கிராம்)}}{30}$$

இதனடிப்படையில் முன்பள்ளிப் பிள்ளைகளுக்கு நாளொன்றுக்கு தேவையான திரவத்தின் அளவானது 750 மில்லி லீற்றர் தொடக்கம் ஒரு லீற்றர் வரையாகும்.

ஆரம்பப் பள்ளிப்பிள்ளைகளுக்கு ஒரு லீற்றர் தொடக்கம் 1.5 லீற்றர் வரையாகும். வளரும் பருவத்தினருக்கு 1.5 லீற்றர் தொடக்கம் 2 லீற்றர் வரையாகும்.

உங்களின் வயதுக்கேற்ப தேவையான திரவத்தின் அளவைக் கணித்து அதனை நாள் முழுவதும் பகிர்ந்து அருந்துதல் வேண்டும். உங்களுடைய தாகத்தைத் தீர்ப்பதற்கு கொதித்தாறிய நீரே சிறந்ததாகும். பழப்பாணங்கள் அருந்துவதாயின் இயற்கையான பழப் பாணங்களை தெரிவு செய்வதுடன், இவற்றுக்குச் சீனி சேர்க்கப்படாமலும், நார்ப்பொருள்கள் அகற்றப்படாமலும் அருந்தப்படல் வேண்டும்.

உதாரணமாக இளநீர், நுங்கு, வாழைப்பழம், யம்பு நாவல் பழம் போன்றனவாகும். போத்தல்கள், பைக்கற்றுக்களில் அடைக்கப்பட்ட நுரைத்தெழும் பாணங்களைத் தவிர்த்தல் வேண்டும் (சோடா வகைகள்) ஏனென்றால் இவை அதிகளவு சீனியைக் கொண்டிருப்பதுடன் பற்சிதைவை ஏற்படுத்தக்கூடிய அமிலங்களையும் கொண்டுள்ளன.

ஒருவர் போதியளவு கொதித்தாறிய தண்ணீரை அருந்துவாராயின் அவருக்குத் தாகம் ஏற்படாதுடன், நிறமற்ற சிறுநீரையும் வெளியேற்ற முடியும். ஒருவர் வெளியேற்றும் சிறுநீரின் நிறமானதுகடும் மஞ்சள் நிறமாகக் காணப்படின் அவர் கட்டாயமாகத் தண்ணீர் குடிப்பது அத்தியாவசியமானது ஆகும். ஒருவர் வெளியேற்றும் சிறுநீரின் நிறமானது ஓரளவு மஞ்சள் நிறமாகக் காணப்படின் அவர் தண்ணீர் குடிப்பது அவசியமானது ஆகும்.

ஒருவர் போதியளவு கொதித்தாறிய தண்ணீரை அருந்துவாராயின் அவருக்குத் தாகம் ஏற்படாது. நிறமற்ற சிறுநீரையும் வெளி யேற்ற முடியும். ஒருவர் வெளியேற்றும் சிறுநீரின் நிறமானது கடும் மஞ்சள் நிறமாகக் காணப்படின் அவர் கட்டாயமாகத் தண்ணீர் குடிப்பது அத்தியாவசியமானது. ஆகும். ஒருவர் வெளியேற்றும் சிறுநீரின் நிறமானது ஓரளவு மஞ்சள் நிறமாகக் காணப்படின் அவர் தண்ணீர் குடிப்பது அவசியமானது ஆகும்.



2. பகல் வேளைகளில் வீட்டுக்கு வெளியே மேற்கொள்ளும் அலுவல்களின் போது பின்வரும் பொருத்தமான முற்காப்பு நடைமுறைகளைப் பின்பற்ற முடியும்.

- எமது நாட்டுக்கே உரித்தான பருத்தித் துணியிலான ஆடைகளை அணிதல்.
- கறுப்பு நிறத்திலான ஆடைகள் அணிவதைத் தவிர்த்தல்.
- எடை குறைந்த, தளர்ச்சியான, இலேசான நிறமுடைய ஆடைகளை அணிதல்.
- உடலானது சூரியனது தாக்கத்துக்கு உள்ளாகமல் இருப்பதற்காக கைகளை முழுமையாக மூடிய ஆடைகளை அணிதல். (சிறார்களை பாடசாலை மற்றும் வகுப்புக்களுக்கு கூட்டிச்செல்லும் வேளையில் அணிதல் சிறந்தது.)
- சந்தர்ப்பம் ஏற்படும் போதெல்லாம் மரநிழல்களில் ஓய்வுஎடுத்தல்.
- குடையைப் பயன்படுத்துதல்.
- வட்டத்தொப்பிகளைப் பயன்படுத்துதல்.
- தரம் வாய்ந்த சூரியக் கண்ணாடிகளை அணிதல்.

3. உறக்கத்துக்குச் செலவதற்கு முன்னர்

- காற்றோட்ட வசதியிருப்பதை உறுதி செய்தல் வேண்டும். கதவு, யன்னல்களை திறந்துவிடல்.
- மின்விசிறியை பயன்படுத்தல். இதன்போது பாத்திரம் ஒன்றில் நீரை நிரப்பி மின்விசிறிக்கு முன்னால் வைப்பதன் மூலம் எமது உடலில் இருந்து ஆவி யாகும் நீரின் அளவைக் குறைக்கமுடியும்.
- படுக்கை விரிப்புக்கள் மற்றும் தலையணைகளைப் பருத்தித் துணியிலானதாகதெரிவுசெய்தல்.

4. தினமும் நீராடுங்கள். ஒருநாளில் பல தடவைகள் நீராடுங்கள். அல்லது ஈரத் துணியினால் உடலினை அடிக்கடி துடையுங்கள்.

5. வெய்யிலில் தரித்திருக்கும் வாகனங்களில் பிள்ளைகளையோ, செல்லப்பிராணிகளையோவிட்டுச் செல்லாதீர்கள். ஏனென்றால் வாகனங்கள் விரைவில் சூடாகிவிடும் இதனால் வெப்பம் தொடர்பானநோய்களைஏற்படுத்திவிடலாம்.

6. பகல் வேளைகளில் செய்யும் உங்கள் வேலைகளைத் திட்டமிட்டுச் செய்யுங்கள்.

அதிகாலை வேளைகளிலும் மாலை வேளைகளிலும் வேலைகளைச் செய்வதற்காகத் திட்டமிடுங்கள். சந்தர்ப்பம் ஏற்படும் போதெல்லாம் நிழலின் கீழ் ஓய்வெடுப்பதை மறக்கவேண்டாம். முக்கியமாக விவசாய நடவடிக்கைகள் , கட்டட நிர்மாண வேலைகளின் போது கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

7. சூரியன் பிரகாசமாக ஒளிரும் வேளைகளில் வெளிச்செயற்பாடுகளை இயன்றவரை தவிருங்கள் அல்லது பிற்போடுங்கள்.

அதீ தவெப்பமான காலங்களில் குறித்த முற்காப்பு நடவடிக்கைகளை பின்பற்றுவதன் மூலம் எமக்குஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.

தகவல்:
சுகாதாரக் கல்விப் பிரிவு,
பிராந்திய சுகாதார சேவைகள் களை
பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# பெருவும் இலங்கையும்

பெரு நாட்டின் முன்னாள் அதிபர் ஆலன் கார்சியா தன்னைத் தானே தலையில் சுட்டுக்கொண்டு இறந்துபோனார். ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் காவல் அதிகாரிகள் அவரைக் கைது செய்வதற்குச் சென்ற சமயத்தில் இந்தச்சம்பவம் இடம்பெற்றது. தொலைபேசி அழைப்பில் பேசிவிட்டு உடனே திரும்புவார் என்று அதிகாரிகளிடம் தெரிவித்துவிட்டு அறைக்குள் சென்று தாழிட்டுக்கொண்ட கார்சியா துப்பாக்கியால் தனது தலையில் சுட்டுக்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்சியில் இருந்த காலத்தில் பிரேசில் நிறுவனம் ஒன்றிடம் பெருந் தொகைப் பணத்தை லஞ்சமாகப் பெற்றிருந்தார் என்று அவர் மீது குற்றச்சாட்டுக் கூறப்பட்டிருந்தது. ஆனால், அந்தக் குற்றச்சாட்டு ஆதாரமற்ற வெறும்கட்டுக் கதைகள் என்று அவர் உறுதியாக மறுத்து வந்தார்.

கார்சியா மீது மட்டுமல்ல அவருக்குப் பின்னர் பெருவின் ஆட்சி அதிகாரத்தைத் தம் வசம் வைத்திருந்த முன்னாள் அதிபர்கள் இருவர் மீதும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன. அவர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

கார்சியாவே பெரு நாட்டின் மிகக் குறைந்த வயதான அதிபர். 1985ஆம் ஆண்டு தனது 36ஆவது வயதில் அதிபரானார். மிகச் சிறந்த பேச்சாளர். லத்தீன் அமெரிக்காவின் கென்னடி (அமெரிக்காவின் புகழ்பெற்ற அதிபர்களில் ஒருவர் கென்னடி) என்று பல லட்சோப லட்சம் பெரு மக்களால் கொண்டாடப்பட்டவர். 1990 வரையில் ஆட்சி செய்த அவர், பின்னர் 2006 முதல் 2011 வரை மீண்டும் அதிபராகப் பதவி வகித்தார்.

இந்தக் காலப் பகுதியில் பெருவின் தலைநகர் லீமாவில் பாதாள ரயில் பாதை அமைப்பதற்கான கட்டுமானப் பணியை பிரேசில் நாட்டு நிறுவனம் ஒன்றுக்கு வழங்குவதற்காக லஞ்சம் பெற்றுக்கொண்டார் என்பதே அவர் மீதான குற்றச்சாட்டு. கார்சியாவுக்குப் பின்னர் பதவியில் இருந்தவர்களான ஒலான்டா குமலா (2011–2016), பெட்ரோபப்லோ குசின்கி (2016–2018) ஆகியோரும் அவருக்கு முன்னர் பதவி வகித்தவரான அலிஜான்ட்ரோ டொலேடோ (2001 – 2006) ஆகியோர் மீதும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவர்களில் குமாலா மற்றும் குசின்கி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். நாட்டின் எதிர்க் கட்சித் தலைவரான கிகோ புஜிமோரியும் இதே குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கார்சியா பதவி விலகி 8 ஆண்டுகளின் பின்னர் அவரது ஊழலுக்காக அவர் நீதியின் முன்னால் நிறுத்தப்பட இருந்தார். அதனை எதிர்கொள்வதற்குப் பதில் தன்னையே மாய்த்துக் கொண்டார் கார்சியா. அவர் தவிர மேலும் இரு அதிபர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட்டுள்ளார்கள்.

2015ஆம் ஆண்டு இலங்கையிலும் இதுபோன்ற ஊழல் ஒழிப்புக்குரல்கள் ஓங்கிஒலித்தன. ஊழல்குற்றச்சாட்டுக்கள் பலவும் முன்வைக்கப்பட்டன. அது மட்டுமல்ல அதே நபர்கள் மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களும் மனித குலத்துக்குத் தீங்கிழைத்ததான குற்றச்சாட் டுக்களும்கூடச்சுமத்தப்பட்டன. ஆனால், குற்றச்சாட்டுக்களைக் கூறியவர்களும் குற்றம் இழைத்தவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டியவர்களுமான இன்றைய ஆட்சியாளர்களும் முன்னையவர்களைப் போன்றே ஊழலில் ஈடுபட்டதுடன் மனித உரிமை மீறல்களிலும் மனித குலத்தின் மீதான குற்றங்களைப் புரிந்தவர்களைப் பாதுகாப்பதிலும் மும்முரமாக நிற்கின்றனர்.

பெருவில் உண்மையான ஆட்சி மாற்றம் நிகழ்ந்ததன் எதிரொலியாக அங்கே குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள், அல்லது கார்சியா போன்று தமக்கான நீதியைத் தாமே தேடிக்கொண்டார்கள். இலங்கையிலோ ஆட்சி மாற்றத்தை வேண்டியவர்களும் ஊழல், மோசடியில் கவனம் மிக்கவர்களாகவே இருந்ததன் காரணத்தால் மக்கள் விரும்பிய உண்மையான மாற்றம் ஏற்படாமலேயே போய்விட்டது.

என்றாவது ஒரு நாள் அந்த உண்மையான மாற்றம் இந்த நாட்டிலும் ஏற்படும் என்கிற நம்பிக்கையோடு காத்திருப்பதைத் தவிர வேற வழி ஏதுமில்லை இலங்கை மக்களுக்கு.

# வெளிநாட்டுத் தலையீடு இறைமைக்கு நல்லதல்ல

இந்துமதி

வெளிநாட்டு அழுத்தங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குள் நாம் தள்ளப்பட்டுள்ளமை தெளிவாகத் தெரிகிறது. இது நாட்டின் சுயாதீனமான செயற்பாடுகளுக்கு இடையூறுகளை ஏற்படத்தி விடுமென்பதைத் தெளிவாகக்கூற முடியும்.

அடுத்த அரச தலைவரின் தெரிவில்கூட வெளிநாடுகள் அக்கறைகாட்டி வருகின்றன. தமது விருப்பம்போன்று செயற்படக்கூடிய ஒருவர் அரச தலைவராகப் பதவி வகிக்கவேண்டுமென்பதே அந்த நாடுகளின் விருப்பமாகும். சீனா இந்த நாட்டின் மீது நீண்டகாலமாகவே இக்கறைகாட்டி வருகின்றது. தேவையான உதவிகளையும் கடன் வசதிகளையும் அள்ளி வழங்குகின்றது.



### இந்தியா - சீனா போட்டி

இந்த நாடு மீள முடியாத கடன் சுமைக்குள் தள்ளப்பட்டமைக்கு சீனாவே பிரதான காரணமாகும். இலங்கையை மட்டுமல்லாது இதைப் போன்ற வேறு நாடுகளையும் கடன் வசதிகளைத் தாராளமாக வழங்குவதன் மூலமாகத் தனது பிடிக்குள் சிக்கவைப்பதில் சீனா வெற்றி கண்டுள்ளது. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் அதற்கு அண்டை நாடாக இந்தியா உள்ளமை சீனாவுக்குத் தனது நோக்கத்தை எளிதாக நிறைவேற்றுவதறபுகுத் தடையாகக் காணப்படுகின்றது.

இந்தியாவும் இலங்கையில் சீனா காலூன்றுவதை அறவே விரும்பவில்லை. தனது எதிரி நாடான சீனா தனக்கு அண்மையில் நடமாடுவதை அந்த நடு ஒருபோதுமே விரும்பமாட்டாது. இதனால் இலங்கைக்கு உதவிகளை வழங்குவதில் இந்தியாவும் முன்நிற்பதைக் காண முடிகின்றது.

### சீனாவின் விருப்பம்

மகிந்த தரப்பைச் சேர்ந்த உருவர் அரச தலைவராக வருவதையே சீனா விரும்புகின்றது. மகிந்தவுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருப்பதால் சீனாவின் விருப்பம் அதுவாகவே உள்ளது. ஆனால் இந்தியாவும் மேற்குலக நாடுகளும் இதை விரும்பவில்லை. குறிப்பாக கோத்தபாயவை அரச தலைவர் வேட்பாளராக நியமிப்பதற்கு இந்த நாடுகள் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன. இதன் மூலமாக நாட்டின் தலைவரைத் தெரிவு செய்வதில்கூட சுதந்திரமாகச் செயற்படமுடியாத நிலைக்குள் இலங்கை தள்ளப்பட்டுள்ளமை தெளிவாகத் தெரிகின்றது.



தற்போதுகூட அரச தலைவர் சில அதிரடியான முடிவுகளை எடுப்பதற்குத் தீர்மானித்திருந்த தாகவும் ஆனால் வெளி நாடுகளின் அழுத்தங்களால் அவர் சற்றுப் பின் வாங்கிய நிலையில் உள்ளதாகவும் தகவல்கள் வெளியாயுள்ளன. தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை அகற்றிவிட்டு வேறொருவரை அந்தப் பதவியில் அமர்த்துவதே அரச தலைவரின் திட்டமாக இருந்துள்ளது. ஆனால் சில முக்கியமான வெளிநாடுகள் இதற்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்து விட்டன.

### இக்கட்டு நிலை

இலங்கையொரு சிறியநாடு என்பதுடன் பொருளாதார ரீதியிலும் வளர்ச்சியடையாத நிலையிலேயே காணப்படுகின்றது. இந்த நாட்டின் தேசிய உற்பத்தி வீழ்ச்சியடைந்த நிலையில் காணப்படுகின்றன. இத்னால் ஏற்றுமதி வியாபாரம் பாதிக்கப்பட்டு அந்நியச் செலவாணி பற்றாக் குறையான நிலையிலுள்ளது. நாட்டுக்குத் தேவையான பொருள்களை இறக்குமதி செய்வதில் சிரமங்கள் தோன்றியுள்ளன. இதை ஈடு செய்வதற்கு மேன்மேலும் வெளிநாடுகளிடமிருந்து கடன்களை வாங்கவேண்டியை இக்கட்டான நிலைக்குள் நாடு தள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை கூட்டரசு என்ற பேச்சுக்கே இனிமேல் இடம் கிடையாதென தலைமை அமைச்சர் உறுதியாகக் கூறிவிட்டார். அரச தலைவர் தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஐக்கிய தேசியக் கட்சி உறவுகளை ஏற்புடுத்தாது என்பதையே அவரது அறிவிப்பு தெளிவாக எடுத்துக்காட்டி விட்டது. இதேவேளை சுதந்திரக் கட்சியிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொள்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்த நிலையில் மைத்திரிபால சிறிசேன மீண்டும் அரச தலைவர் தேர்தலில் தாம் போட்டியிடுவது தொடர்பான அறிவித்தல்களை விடுத்து வருகின்றார். ஆனால் அவரது முயற்சிக்கு வெற்றி கிட்டுமா? என்பதைக் கூற முடியவில்லை.

### போர்க் குற்ற விவகாரம்

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அந்த நாடு இனியும் புறமொதுக்கிவிட முடியாது. ஏனென்றால் இலங்கையில் இடம்பெற்றதாகத் தெவிரிக்கும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களும் அதிக அக்கறைகாட்டி வருவதால் பொறுப்புக் கூறல்களிலிருந்து இலங்கை தப்பித்துக் கொள்ளவே முடியாது. போர்க் குற்றவாளிகள் அரச தலைவர் தேர்தலில் போட்டியிட முடியாதென சந்திரிகா அம்மையார் கூறியிருப்பதன் மூலமாக போர்க்குற்றங்கள் இங்கு இடம்பெற்றமை உறுதியாகின்றது. இறுதிப் போர் இடம்பெற்ற போது மகிந்த தரப்பினரே ஆட்சிக்குப் பொறுப்பாக இருந்துள்ளனர். இதனால் போர்க்குற்றங்களுக்குப் பதில்கூற வேண்டிய கடப்பாடு அவர்களிடமேயுள்ளது.

ஏற்கனவே அரசியல் குழப்பமொன்றை ஏற்படுத்தியதன் மூலமாக உலக அரங்கில் அரச தலைவரின் மதிப்பு களங்கமடைந்து விட்டது. இதைவிட இலங்கை மீதான ஐ.நா. தீர்மானத்துக்கு இணை அனுசரணையை வழங்கிவிட்டுப் பின்னர் அதை அவர் எதிர்த்தமையும் அவர் மீதான மதிப்பை இழக்கச் செய்துவிட்டது. நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலும் அவருகபுகுத் தோல்வியே கிடைத்துள்ளது. அது மட்டுமல்லாது போர்க்குற்றங்கள் தொடர்பாக குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டுள்ள மகிந்த தரப்பினருடன் கூட்டணி அமைப்பதற்கான முயற்சிகளிலும் இவர் ஈடுபட்டு வந்துள்ளார். இத்தகைய ஒருவர் மீண்டும் அரச தலைவர் பதவியில் அமருவதை ஏற்றுக்கொள்ளத் தக்க நிலை தற்போது காணப்படவில்லை.

ஒரு நிலையான அரசு நீடிக்கும்போதுதான் நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதாரத்தைச் சீர் செய்ய முடியும். வெளிநாடுகளும் தயக்கமின்றி உதவிகளை வழங்குவதற்கான சூழ்நிலையும் தோன்றும். இதைவிடுத்து அரசியல் குழப்ப நிலை தொடருமானால் வெளிநாடுகளின் தலையீடு அதிகரிக்கவே செய்யும்.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு கரைத்துறைபற்றுச் சபையாலும் குழு

## இன்று மக்களுடன் கலந்துரையாடவுள்ளது

முல்லைத்தீவு, ஏப். 19

**பத்தாம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவது தொடர்பில் முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையில் நேற்றுக் கலந்துரையாடல் நடைபெற்று, தவிசாளர் தலைமையில் பிரதேசசபை உறுப்பினர்கள் உள்ளடங்கலாக நினைவேந்தல் குழு ஒன்றும் உருவாக்கப்பட்டது.**



நினைவேந்தல் நிகழ்வுகளை ஏற்பாடு செய்யவென்று வடக்கு - கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் கொண்ட ஏற்பாட்டுக் குழு ஒன்று கடந்தவாரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 10ஆவது நினைவேந்தலைத் தாமே ஏற்பாடு செய்வோம் என்று அந்தக் குழுவினர் தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் பிரதேச சபையில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபையில் கலந்துரையாடலின் முடிவில் இரண்டு தீர்மானங்களும் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.அதன்படி பிரதேச சபையின் நினைவேந்தல் குழு முள்ளிவாய்கால் மக்களை இன்று அழைத்து அங்குள்ள குழுக்களுடன் கலந்துரையாடல் நடத்துவது என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பிறிதொரு தினத்தில் பகிரங்க அழைப்பு விடுத்து ஒரு கூட்டம் நடத்துவது என்றும், பிரதேச சபை நினைவேந்தல் குழுவுக்குத் தோள்கொடுத்து பங்கேற்க விரும்புகின்ற அமைப்புக்கள் அனைவரையும் அதில் ஒன்றுகூட்டி நினைவேந்தல் ஒழுங்கமைப்பை மேற்கொள்வதென இரண்டாவது தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது.

நினைவேந்தல் தொடர்பில் சபையில் பிரதேசசபை உறுப்பினர்கள் காரசாரமான கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வவுனியாவிலே எட்டு மாவட்டங்களினை ஒன்றிணைத்து முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் தொடர்பில் ஒரு கூட்டம் ஒன்று இடம்பெற்றதாக அறிகின்றோம். முள்ளிவாய்க்கால் நினைவு தினத்துக்கு போட்டிபோட்டுக்கொண்டு எட்டு மாவட்டத்தினைச்சேர்ந்தவர்களோ, பத்து மாவட்டத்தினைச்சேர்ந்தவர்களோ இங்கு வருவதில் எந்த அர்த்தமும் இல்லை.

இந்தச் சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியிலேயே முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்குரிய முற்றம் இருக்கின்றது. இன்னொருவருடைய வீட்டுக்குள்ளே நாங்கள் அத்து மீறி நுளைவது போன்ற செயற்பாடுகளிலேயே பலரும் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர் என்று உறுப்பினர் த.அமலன் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கிலிருந்தும் புலம்பெயர் தேசங்களிலிருந்தும் எமது உறவுகள் முள்ளிவாய்க்கால்வரக்கூடிய சூழல் இருக்கிறது.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக இருப்பதனால் ஒரு குழுவை அமைத்து அந்தக் குழுவினூடாகச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்று உறுப்பினர் லோகேஸ்வரன் தெரிவித்தார்.

நினைவேந்தல் செய்யவென்று ஏற்கனவே முள்ளிவாய்க்கால் கிழக்கு மேற்கு பகுதிகளில் நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறது. அவர்களோடு இணைந்து நினை வேந்தல் செய்வதுதான் மிகப் பொருத்தமானதாக இருக்கும். தவிர, முள்ளி வாய்க்கால் கண்டன அறிக்கை மட்டும் வாசித்து உலக நாடுகளுக்குத் தெளிவுபடுத்தலாம். அரசியல் பிரமுகர்கள் உட்பட வேறு எவருக்குமே உரையாற்ற சந்தர்ப்பமளிக்கக்கூடாது என்று உறுப்பினர் க.விஜிந்தன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை செய்யவிரும்பும் பொது அமைப்புகளை அழைத்து, ஏற்கனவே நினைவேந்தல் நிகழ்வை நடத்த இருக்கும் முள்ளிவாய்க்கால் கிழக்கு, மேற்கு குழுவினரையும் உள்வாங்கி கூட்டம் நடத்தி முடிவெடுக்க வேண்டும். முள்ளிவாய்க்கால் மக்களும், பிரதேச சபையும் தனியே செய்வது பொருத்தமற்றது. பொது அமைப்புகள், மதகுருமார்கள் அனைவரும் செய்யும்போதுதான் நினைவேந்தலை அமைதியாகவும் உணர்வுபூர்வமாகவும் செய்யமுடியும் என்று உறுப்பினர் இ.ஜெகதீசன் தெரிவித்தார்.

இது போன்ற பல கருத்துக்களை ஏனைய உறுப்பினர்களும் முன்வைத்திருந்தனர். (த-246)

---

## வட்டார எல்லை சீராகவில்லை சபை உறுப்பினர்கள் குழப்பம்

சாவகச்சேரி, ஏப். 19

சாவகச்சேரி நகரசபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வட்டார எல்லை வரம்பு இதுவரை சீர்செய்யப்படாததால் அந்த வட்டாரங்களில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களிடையே குழப்பநிலை காணப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

நகரசபையின் எட்டாம் வட்டாரமாக காணப்பட்ட கோயிற்குடியிருப்பு எல்லைவரம்பின்போது அங்கு ஊடறுத்துச் செல்லும் கச்சாய் வீதியின் தெற்கு கடல் பகுதி எனவும் வடக்குப் பகுதி தரைப் பகுதி எனவும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு கோயிற்குடியிருப்பு கடல் தரை என இரு வட்டாரங்களாக (10 ,11) மாற்றப்பட்டது.

ஆனால் தரைப் பகுதியில் வாழ்வோர் கடல் பகுதி வாக்காளர்களாகவும் கடல் பகுதியில் வாழ்வோர் தரைப் பகுதி வாக்காளர்களாகவும் பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்பாளர் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்த வேளையில் வேட்புமனுத் தாக்கல் செய்தவர் இந்தத் தவறைச் சுட்டிக் காட்டி யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு நேரில் சென்று முறைப்பாடு செய்திருந்தார். அது வாக்களிப்பு வேளையில் சீர் செய்யப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. வாக்களிப்பு வேளையிலும் மாற்றம் செய்யப்படவில்லை. இதனால் தரைப் பகுதி வட்டாரத்தில் வதியும் உறுப்பினர் கடல் பகுதி உறுப்பினர் எனவும் கடல் பகுதி வட்டாரத்தில் வதிபவர் தரைப் பகுதி உறுப்பினர் எனவும் தெரிவு செய்யப்பட்டு ஆரம்பத்திலேயே குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையில் எந்த வட்டாரத்துக்கு எந்த உறுப்பினர் என்பது இதுவரை தெரியாத நிலையில் உறுப்பினர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

இந்த வேளையில் சாவகச்சேரி நகரசபை மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்வது தொடர்பிலான கருத்தமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை கடற்றொழிலாளர் ஓய்வு மண்டபத்தில் கடல் பகுதி மக்களுக்கான கருத்தமர்வும் சப்பச்சிமாவடி சித்திவிநாயகர் கலை மன்றத்தில் தரைப் பகுதி மக்களுக்கான கருத்தமர்வும் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. காலையில் நடைபெற்ற கருத்தமர்வில் கோயிற்குடியிருப்பு கடல் பகுதியில் வதியும் உறுப்பினர் சமுகமளிக்கவில்லை. மாலை நடைபெற்ற தரைப் பகுதி மக்களுக்கான கருத்தமர்வில் தரைப் பகுதியில் வதியும் உறுப்பினர், தன்னை பேச விடவில்லை எனக்கூறி அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

இவை பற்றி மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு முறைப்பாடு செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. தேர்தல்கள் திணைக்களத்தில் வட்டாரங்கள் தொடர்பான சரியான முடிவு அறிவிக்கும்வரை இவ்வாறான குழப்பங்கள் தொடர்ந்து நீடிக்குமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-9)

---

## சதவதானி கதிரவேற்பிள்ளையின் 112 ஆவது அண்டு நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப். 19

சதவதானி நா.கதிரவேற்பிள்ளையின் 112 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு தம்பசிட்டி சதாவதானி சனசமூகநிலைய முன்றலில் நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நிலையத் தலைவர் கோ. கங்காதரன் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் சி.சத்தியசீலன்,சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண மாநகரசபை சுகாதார மருத்துவ அதிகாரி த. பாலமுரளி, பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி ஆகியோரும் கலந்துகொள்வுள்ளனர். சதவாதானி திருவுருச்சிலைக்கு முதன்மை விருந்தினர் மாலை அணிவிப்பதை தொடர்ந்து இறை வணக்கம், தமிழ்தாய் வாழ்த்து, ஆசியுரை, வரவேற்பு நடனம் என்பவற்றுடன் குரு பூசை போட்டியில் முதலிடம் பெற்றவர்களின் பேச்சுக்கள் இடம் பெறும்.

நிகழ்வின் இறுதியில் "சதாவதானி யாழ்ப்பாண சொற்பொழிவும் மரபும்" என்னும் தலைப்பில் கோப்பாய் கலாசாலை பிரதி அதிபர் த.லலிசனின் சிறப்பு சொற்பொழிவும் இடம் பெற்றுள்ளது. (ஐ-173)

---



திருநெல்வேலி அரசடி சிறி சிவகாம சுந்தரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று வியா ழக்கிழமை நடைபெற்றது. காலை 7 மணியளவில் நடைபெற்ற வசந்த மண்டப பூஜையை அடுத்து உள்வீதியுலா வந்த சிவகாம சுந்தரி அம்மன் காலை 8. 30 மணியளவில் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார். (ஐ-37)

---

## இலவச மருத்துவ முகாம் இன்று

யாழ்ப்பாணம், ஏப்.19

மறைந்த மு.க.சின்னையா செளபாக்கியவதி தம்பதிகளின் நினைவாக தமிழ்த்தாய் மன்றத்தால் 7 ஆவது மருத்துவ முகாம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் செங்குந்தா வீதியில் உள்ள மாற்றம் பணிமனையில் காலை 8 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை செங்குந்தா இளைஞர் அணியின் அனுசரணையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராசா கலந்துகொள்ளவுள்ளார்.

நீரிழிவு பரிசோதனை,குருதி அழுத்த பரிசோதனை மற்றும் ஆயுள்வேத பரிசோதனைகள் என்பன இலவசமாக இடம்பெறவுள்ளன. இதன்போது போதைப் பொருள் பாவனை பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இடம்பெறவுள்ளது. அத்துடன் நீரிழிவு பரிசோதனை செய்ய விரும்புபவர்கள் 12 மணித்தியாலங்கள் தண்ணீர், உணவு அருந்தாமல் காலை 8 மணிக்கு வருகைதருமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

---

## சித்திரா பௌர்ணமி சிறப்பு வழிபாடுகள்

சித்திரா பௌர்ணமி தினமான இன்று சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் சாவகச்சேரி பொதுச் சந்தை குபேர கணபதி ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகளையும் சித்திரைக்கஞ்சி வார்க்கும் நிகழ்வினையும் நடத்தவுள்ளனர். குபேர கணபதி ஆலயம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் பாரம்பரிய முறைப்படி பனையோலை தட்டுவத்தில் சித்திரைக் கஞ்சி வார்த்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

---

## உறுப்பினர் வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கை

வலி.தென்மேற்கு, ஏப்.19

அ.கேதுஷன் வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் பதவியில் இருந்து கடந்த மாதம் விலகியுள்ளார்.இதையடுத்து இவரின் வெற்றிடத்தை நிரப்புவதற்கான நடவடிக்கையை கட்சியின் தலைமைப்பீடம் மேற்கொண்டுள்ளது.

நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளின் தேர்தலின் போது வலி.தென்மேற்கு பிரதேச சபையில் 16ஆம் வட்டாரத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் சூரியன் சின்னத்தில் போட்டியிட்ட இவர் விகிதாசார அடிப்படையில் உறுப்பினராக்த் தெரிவுசெய்யப்பட்டனர்.

கடந்த 11 மாதங்களாக உறுப்பினராகச் சேவையாற்றிவந்த இவர் மார்ச் மாதம் 30 ஆம் திகதியிலிருந்து பதவி விலகியுள்ளார். இது சம்பந்தமாக யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளருக்கும், வலி.தென்மேற்கு பிரதேச சபை செயலருக்கும் பதவி விலகல் கடிதத்தை அனுப்பியுள்ளார். இதேவேளை வெற்றிடமாக இருக்கும் இவரின் உறுப்பினர் பதவியை நிரப்புவதற்கான நடவடிக்கையில் கட்சியின் தலைமைப்பீடம் ஈடுபட்டுள்ளது. (ஐ-115)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் 38 மாதிரிக் கிராமங்கள்

## வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 19

நடப்பு வருடத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் யாழ்ப்பாண மாவட்டத்தில் 38 மாதிரி கிராமங்களுக்கான வீடமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது என்று பிராந்திய காரியாலயம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வீடுகள் அற்றவர்களுக்கு மாதிரிக் கிராமங்களை உருவாக்கி அங்கு வீடுகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2019ஆம் ஆண்டு 38 மாதிரிக் கிராமங்களில் ஆயிரத்து 4 வீடுகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சங்கானை பிரதேச செயலர் பிரிவு 2, சண்டிலிப்பாய் 7,கோப்பாய் 10, ஊர்காவற்றுறை 3,வேலணை, சாவகச்சேரி, காரைநகர், யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய இடங்களுக்கு தலா ஒன்று ,கரவெட்டி 5,மருதங்கேணி 4,தெல்லிப்பழை 2 உள்பட 38 மாதிரி கிராமங்கள் அமைக்கப்படவுள்ளன. ஒவ்வொன்றும் 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-7)

# புத்தாண்டுக் காலத்தில் 101 பேருக்கு காயங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.19

வடமராட்சிப் பகுதியில் சித்திரைப் புத்தாண்டு காலத்தில் பல்வேறு காரணங்களால் காயமடைந்த 47 பெண்கள் உட்பட 101 பேர் மந்திகை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்று மருத்துவமனை புள்ளிவிவரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 11ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரையான காலப்பகுதியிலேயே இவர்கள் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இந்தக் காலப்பகுதியில் விபத்தில் சிக்கி ஒருவர் சாவடைந்துள்ளார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வீழ்ந்து காயமடைந்தோர், வீதி விபத்துக்களில் காயமடைந்தோர், வாள்வெட்டுக் காயங்களுக்கு இலக்கானோர், தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்தோர், விலங்குகள் மற்றும் ஏனைய தீங்கு விளைவிக்கும் உயிரினங்களால் பாதிக்கப்பட்டோர் என 101 பேர் மருத்துவமனை விடுதிகளில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் வீதி விபத்துக்களில் சிக்கி 11 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட 11 ஆண்கள் 5 பெண்களும், அடிகாயங்கள் வாள்வெட்டுக் காயங்களுடன் 21 வயதுக்கும் 60 வயதுக்கும் உட்பட்ட 14 ஆண்களும் 8 பெண்களும் சேர்க்கப்பட்டனர்.

பண்டிகைக் காலங்களில் ஆன்மிக நிகழ்வுகள், இலவச மருத்துவ முகாம், குருதிக் கொடை நிகழ்வுகள் ஒழுங்கமைப்பதன் மூலம் தேவையற்ற விபத்துக்களைத் தவிர்க்க முடியும் என புத்திஜீவிகள் தெரிவித்தனர். (ஜ-9)

### யாழ். பல்கலையில் தனித் துறையாக

# ஊடகக் கற்கைகள் அலகு உருவாக்கம்

## துணைவேந்தர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கை நெறி அலகு தற்போது ஊடகக் கற்கைகளுக்கான தனித் துறையாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

2008ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ஒரு அலகாக மாத்திரம் ஊடகக் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஊடகக் கற்கையை தெரிவு செய்வதில் மாணவர்கள் ஆர்வம் காட்டினர். துறை சார்ந்த விரிவுரையாளர்கள் அதனை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்ல பல்வேறு முயற்சிகளை எடுத்திருந்தனர்.

இதனையடுத்து ஊடகக் கற்கை நெறி அலகு பல்கலைக்கழக நியதிகளுக்கு அமைவாக ஊடகத் துறையாக மாற்றம் பெற்றுள்ளது. இதற்கான அரசிதழ் அறிவித்தல் கடந்த 27ஆம் திகதி வெளியிடப்பட்டது. அதற்கு அமைவாக ஒரு பிரிவாக செயற்பட்ட ஊடகக் கற்கைகள் நெறி தற்போது ஊடகக் கற்கை துறையாக உயர்த்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

# சாவகச்சேரிப் பிரதேசத்தில் இரு கட்டமாக வீதி சீரமைப்பு

கொடிகாமம், ஏப். 19

சாவகச்சேரிப் பிரதேசத்துக்குட்பட்ட 130 வீதிகளின் சீரமைப்புக்கு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் கிராம எழுச்சித் திட்டத்தினூடாக நிதி ஒதுக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. இரு கட்டங்களாக குறித்த வீதிகள் சீரமைக்கப்படவுள்ளன.

முதற்கட்டத்தில் 56 வீதிகளும், இரண்டாம் கட்டத்தில் 74 வீதிகளும் சீரமைக்கப்படவுள்ளன. இந்த வீதிகள் ஒவ்வொன்றுக்கும் தலா 1 மில்லியன் தொடக்கம் 2 மில்லியன் வரை நாடாளுமன்ற உறுப்பினர் ஒதுக்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

முதலாம் வட்டாரத்தில் 2 வீதிகளும், இரண்டாம் வட்டாரத்தில் 4 வீதிகளும், மூன்றாம் வட்டாரத்தில் 6 வீதிகளும், நான்காம் வட்டாரத்தில் 2 வீதிகளும், ஐந்தாம் வட்டாரத்தில் 3வீதிகளும், ஆறாம்வட்டாரத்தில் 2வீதிகளும், ஏழாம் வட்டாரத்தில் 4 வீதிகளும், எட்டாம் வட்டாரத்தில் 5 வீதிகளும், ஒன்பதாம் வட்டாரத்தில் 3 வீதிகளும், பத்தாம் வட்டாரத்தில் 4 வீதிகளும், பதினோராம் வட்டாரத்தில் 4 வீதிகளும், பன்னிரண்டாம் வட்டாரத்தில் 3 வீதிகளும், பதின்மூன்றாம் வட்டாரத்தில் 3 வீதிகளும், பதின்னான்காம் வட்டாரத்தில் ஒரு வீதிகளும் பதினைந்தாம் வட்டாரத்தில் 3 வீதியும்,பதினாறாம் வட்டாரத்தில் 3 வீதிகளும், பதினேழாம் வட்டாரத்தில் 4 வீதிகளும் மொத்தமாக 56 வீதிகளுக்கு முதலாம் கட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

முதலாம் வட்டாரத்தில் 7 வீதிகளும் இரண்டாம் வட்டாரத்தில் 3 வீதிகளும், மூன்றாம் வட்டாரத்தில் 6 வீதிகளும் நான்காம் வட்டாரத்தில் 3 வீதிகளும், ஐந்தாம் வட்டாரத்தில் 2 வீதிகளும், ஆறாம் வட்டாரத்தில் 2 வீதிகளும், ஏழாம் வட்டாரத்தில் 3 வீதிகளும், எட்டாம் வட்டாரத்தில் 3 வீதிகளும், ஒன்பதாம் வட்டாரத்தில் 6 வீதிகளும், பத்தாம் வட்டாரத்தில் 4 வீதிகளும், பதினோராம் வட்டாரத்தில் 4 வீதிகளும், பன்னிரண்டாம் வட்டாரத்தில் 4 வீதிகளும், பதின்மூன்றாம் வட்டாரத்தில் 6 வீதிகளும், பதின்னான்காம் வட்டாரத்தில் 6 வீதிகளும், பதினைந்தாம் வட்டாரத்தில் 5 வீதிகளும், பதினாறாம் வட்டாரத்தில் 6 வீதிகளும், பதினேழாம் வட்டாரத்தில் 4 வீதிகளும், மொத்தமாக 74 வீதிகளுக்கு இரண்டாம் கட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மணல் வீதியாக உள்ளதால் ஒதுக்கப்பட்ட நிதியில் அனைத்து வீதிகளும் கிரவல் வீதிகளாகவே மாறும் எனவும் மக்களால் தெரிவிக்கப்பட்டது.

(ஜ-159,9)


# முன்னோடி பரீட்சைகள் இந்த மாத இறுதியில்

யாழ்ப்பாணம், ஏப்.19

க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான தொழிநுட்பவியல் பாடத்துக்கான முன்னோடிப் பரீட்சைகள் இந்த மாதம் இறுதியில் நடத்தப்படும் என்று மாகாண கல்வி திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயர் தர மாணவர்களுக்கான தொழிநுட்பவியல் பாடப் பிரிவுகள் இந்த வருடம் புதிய பாடத்திட்ட அடிப்படையில் பரீட்சைகள் நடைபெற உள்ளதால் மாணவர்களுக்கு முன்னோடிப்பரீட்சை மிக அவசியமாக உள்ளது. ஏனைய பாடங்களுக்கு அலகு ரீதியாக மாதிரி வினாத்தாள் பரீட்சைகள் ஏற்கனவே நடத்தப்பட்டு வருகின்றன.

தகவல் தொழிநுட்பம், விவசாய விஞ்ஞானம், மனைப்பொருளியல், ஊடகக்கற்கை பாட பரீட்சைகள்,தொழினுட்பப்பிரிவுகள் ஆகியவற்றுக்கான முன்னோடிப் பரீட்சைகள் இந்த மாதம் 29 ஆம் திகதி முதல் நடைபெறும். அனைத்து மாணவர்களும் பரீட்சைக்கு தோற்றுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை ஆசிரியர்கள், வலய பாட இணைப்பாளர்கள் மேற்கொள்ளுதல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-7)





# பரு. மருத்துவமனையில் புதிய சிகிச்சைக் கூடங்கள்

கொடிகாமம், ஏப்.19

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் நோயாளர் வசதியை மேம்படுத்தும் முகமாக சத்திர சிகிச்சை பிரிவில் 4 சிகிச்சை சிறுகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை நோயாளர் நலன்புரிச் சங்கத்தால் அமைக்கப்பட்ட இந்த சிகிச்சைக் கூடங்கள் மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகர் த.குகதாசன் ஊடாக சத்திர சிகிச்சை மருத்துவர் கிரிதரனிடம் நேற்று முன்தினம் புதன்கிழமை கையளிக்கப்பட்டன.

சிறு வெட்டுக் காயங்களுக்கு உள்ளாவோரின் நலன் கருதி இந்த சிகிச்சை சிறுகூடங்கள் 8 லட்சம் ரூபா நிதியில் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து மருத்துவமனை சமூகத்தினர், நோயாளர் நலன்புரிச் சங்க உறுப்பினர்கள், மருத்துவமனை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் உட்பட பலர் சத்திர சிகிச்சை பிரிவை மேம்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டனர். (ஜ -159)

# மாணவர்கள் மதிப்பளிப்பு

சாவகச்சேரி, ஏப்.19

இலங்கை வங்கி சாவகச்சேரி கிளையால் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு வங்கிக் கட்டடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நிகழ்வில் வங்கிக் கிளையில் ரன்கெகுளு சிறுவர் கணக்கு வைத்துள்ள புலமைப் பரிசில் பரீட்சையில் உயர்புள்ளிகள் பெற்ற 32 மாணவர்களுக்கு பதக்கங்கள், சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் என்பன வழங்கப்பட்டன. கிளை முகாமையாளர் சி.முரளிதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வங்கியின் வடக்கு மாகாண செயற்பாட்டு முகாமையாளர் திருமதி சுமங்களா பிரபாகரன், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் பொ. நடேசலிங்கம், மதிப்புறு விருந்தினராக சாவகச்சேரி நகரசபைச் செயலர் சீ.சபேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-9)



# பரிசளிப்பும் கலை நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஏப்.19

ஆறுகால்மடம் அரசடிஞான வைரவர் சுவாமி திருக்கோவில் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு இன்று பரிசளிப்பு நிகழ்வும் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

ஆறுகால்மடம் அறிவொளி கலையரங்கத்தில் இன்று மாலை 4 மணிக்கு சனசமூக நிலையத் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் நடைபெறவுள்ளன.(க)

# கைத்தொழில் பேட்டைகள் அமைத்து வாழ்வளியுங்கள்

## வட்டார அபிவிருத்திக் கூட்டத்தில் பொதுமக்கள் கருத்து முன்வைப்பு

சாவகச்சேரி, ஏப்.19

அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதாயின் வட்டாரங்களில் கைத்தொழில் பேட்டைகள் அமைத்துப் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும். ஒவ்வொரு வட்டாரத்திலும் காணப்படும் வளங்களை ஓரிடத்தில் வைத்து உற்பத்தி செய்யக்கூடிய கைத்தொழில் பேட்டைக் கட்டடங்கள் அமைக்கும் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

சாவகச்சேரி நகரசபையினர் வட்டார ரீதியில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக மக்களின் கருத்துக்களைக் கேட்டறியும் கருத்தமர்வு அண்மையில் நடைபெற்றபோது இந்தக் கோரிக்கையை மக்கள் முன்வைத்தனர்.

கடந்த காலங்களில் இவ்வாறான கருத்தமர்வுகள் நடத்தப்பட்டபோது வீதிகள் சீரமைப்பு, குளங்கள் சீரமைப்பு, வீதி விளக்குகள் பொருத்துதல் போன்ற திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கியிருந்தனர்.

தற்போது நடத்தப்பட்டு வரும் மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தித் திட்டங்களைத் தெரிவு செய்வது தொடர்பான கருத்தமர்வுகளில் சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தும்புத் தொழில் நிலையங்களை மீள ஆரம்பித்து பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டுமென்பதில் மக்கள் ஆர்வமாக உள்ளமையை அவதானிக்க முடிந்தது.

நகரசபை நடத்தும் மக்கள் பங்களிப்புடனான கருத்தமர்வுகளில் தும்பு உற்பத்தி மேற்கொள்ளக்கூடிய கைத்தொழில் பேட்டைகளை உருவாக்க வேண்டுமென்று மக்கள் கேட்டுள்ளனர்.

உள்ளூராட்சி சபைகள் வருடாந்தம் நடத்தும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் வீதி சீரமைப்பு மற்றும் வீதி விளக்குகள் பொருத்தல் ஆகிய செயற்றிட்டங்கள் என்பவற்றைவிட அந்தந்த வட்டாரங்களில் உள்ள மக்களால் மேற்கொள்ளக்கூடிய கைத்தொழில்களை இனங்கண்டு கைத்தொழில் பேட்டைகளை அமைத்து பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டுமெனகடந்த வாரம் உதயனில் செய்தி பிரசுரமாகியிருந்தது.

இந்த நிலையில் மக்கள் வட்டாரங்களில் கைத்தொழில் பேட்டைகளை நிறுவக் கோரி முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்து வருகின்றனர். (த-9)



## மைதானத் திறப்பும் காணி கையளிப்பும்

கொடிகாமம், ஏப். 19

வரணி இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயமும் ஐக்கிய இராச்சிய வரணி மக்கள் சங்கமும் இணைந்து அமைத்த மைதானத்தைத் திறக்கும் நிகழ்வும், காணி கையளிப்பு நிகழ்வும் நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு நடைபெற்றன. இந்த நிகழ்வுகள் வரணி இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயத்தில் இடம்பெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராட்சி ஆகியோர் கலந்துகொண்டனர். நினைவுக்கல்லைத் திரைநீக்கம் செய்து மைதான நுழை வாயிலை முதன்மை விருந்தினர் திறந்து வைத்தார். ஆளுநரின் செயலர் இளங்கோவன் பெயர்ப்பலகையைத் தீரை நீக்கம் செய்தார். விளையாட்டு மைதானத்தில் காணி உறுதிப்பத்திரத்தை வரணி மக்கள் சங்கத் தலைவர் தம்பு செல்வகுமார் ஆளுநரிடம் வழங்கினார். யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத் தளபதியால் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. மானிப்பாய் அமெரிக்கமிஷன் திருச்சபை போதகர் ஏ.எஸ். தேவகுணானந்தன் மாணவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. 30 லட்சம் ரூபா செலவில் காணி கொள்வனவு மற்றும் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத்தளபதி உரையாற்றும்போது தெரிவித்ததாவது:

கடந்த 30 வருடங்களாக ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக துரதிஷ்டவசமாக வடக்கு கிழக்கு மக்கள் அனைவரும் துன்பங்களை அனுபவித்தனர். அதேபோன்று போர் நிறைவுற்று 10 வருடங்கள் கடந்த போதிலும் அரசால் பல்வேறு விதவிதமான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இருந்தபோதிலும் கடந்த காலங்களில் ஏற்பட்ட அழிவுகளை மீளக் கட்டியெழுப்புவதற்கு இன்னும் சில காலங்கள் தேவையாகவுள்ளது எனத் தெரிவித்தார். (ஐ-159,122)


## வவுனியாவில் வறட்சி காரணமாக 39 குடும்பங்களுக்கு குடிதண்ணீர்

வவுனியா, ஏப். 19

வவுனியாவில் வறட்சி காரணமாக 39 குடும்பங்களை சேர்ந்த 109 பேருக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது என்று வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்தது.

குறிப்பாக வவுனியா வடக்குப் பகுதியில் அமைந்துள்ள மருதோடை கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கே அவ்வாறு குடிதண்ணீர் வழங்கப்பட்டுவருகிறது.

வறட்சியான காலநிலை காரணமாக வவுனியாவின் பல்வேறு பகுதிகளில் கால்நடைகள் மேச்சல்நிலம் இன்றி அலைந்து திரிகின்ற நிலமை ஏற்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் வவுனியா மாவட்டத்திலேயே வெப்பநிலை அதிகரித்துள்ள நிலையில் வரட்சி காரணமாக குறித்த நிலை ஏற்பட்டுள்ளது. (ம-110)





அளவெட்டிதெற்கு கலைவாணி சனசமூகநிலையமும்,கலைவாணி விளையாட்டுக் கழகமும் இணைந்து புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகளை நடத்தின. புத்தாண்டு தினமான கடந்த ஞாயிற்றுக்கிழமை விளையாட்டுக்கழக மைதானத்தில் தலைவர் த.தவகீத் தலைமையில் நடைபெற்றன. (ஐ-36)

## மின்னல் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ரூ.1 லட்சம் இழப்பீடு

யாழ்ப்பாணம், ஏப். 19

வலிகாமம் குப்பிளானில், மின்னல் தாக்கி உயிரிழந்த குடும்பங்களுக்குத் தலா ஒரு லட்சம் ரூபா இழப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலக இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

உடுவில் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட குப்பிளான் தெற்கில் மின்னல் தாக்கிமூவர் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்தனர். அவர்கள் வயலில் வேலை செய்துகொண்டிருந்தபோது மழை பெய்தது. அதற்காக அங்கிருந்த தென்னை மரத்தடியில் இருந்த குடிசையில் ஒதுங்கியிருந்த போது மின்னல் அந்த இடத்தைத் தாக்கியபோது அவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். தென்னையும் பாதிக்கப்பட்டது.

அந்த இடத்துக்குச் சென்ற மற்றொரு பெண் அவர்களின் நிலையைக் கண்டு ஊரவர்களுக்கு அறிவிக்க அதன்பின்னர் சம்பவம் தெரியவந்தது. உயிரிழந்தவர்களில் ஆண் மற்றும் பெண் ஆகிய இருவர் உடன் பிறந்த சகோதரர்கள். மற்றைய பெண் இருவருக்கும் உறவினர். இந்த நிலையில், அந்த இடத்தை நேற்றுகாலை 6 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட செயலர் உட்பட உடுவில் பிரதேச செயலர், மாவட்ட மேலதிக செயலர் (காணி) முரளிதரன், வலிகாமம் தெற்குப் பிரதேச சபை உறுப்பினர் அபராசுதன், கிராம அலுவலர், மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவினர் அடங்கிய குழுவினர் பார்வையிட்டனர்.

உயிரிழந்தவர்களின் இல்லங்களுக்கும் சென்றனர்.

இதன்போதே இழப்பீடு வழங்கப்படும் என்று மாவட்டச்செயலர் தெரிவித்துள்ளார்.

இடர் முகாமைத்துவ அமைச்சின் கீழ் உள்ள தேசிய இடர் உதவிகள் சேவைகள் நிலையத்தால் தலா ஒரு லட்சம் ரூபா இழப்பீடு வழங்குவதற்குப் பணித்துள்ளார். இயற்கை இடரால் இறப்பு நிகழ்ந்தால் ஒரு லட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படும்.

அதில் 15 ஆயிரம் ரூபா உடனடியாக வழங்கப்படும்.

அதன் அடிப்படையில் தலா 15 ஆயிரம் வீதம் மூன்று பேருக்கும் 45 ஆயிரம் உடனடியாக வழங்கப்பட்டுள்ளது. மிகுதி தலா 85 ரூபா இறப்புச் சான்றிதழ் கிடைத்தவுடன் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும் உயிரிழந்தவர்களில் ஒருவருக்கான வீட்டுத்திட்டத்தை முன்னுரிமை அடிப்படையில்வழங்குமாறும் மாவட்டச் செயலர் பணித்தார். இதேவேளை, மின்னல் தாக்கம் ஏற்படும்போது அவதானமாக இருக்குமாறு மக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

குறிப்பாகமைதானம், கடல் உட்பட வெட்டைவெளியான இடங்களில் தங்க வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகின்றனர். (த-7)

## நேர்முக பரீட்சை

யாழ்ப்பாணம்,ஏப். 19

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சை இடம் பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் பொது நூலகக் கேட்போர்கூடத்தில் எதிர்வரும் 22,23 ஆம் திகதிகளில் இந்த நேர்முகப் பரீட்சை இடம்பெறவுள்ளது.


பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ள தொண்டர் ஆசிரியர்களது பெயர் விவரங்களை np.gov.lk எனும் இணையத்தள முகவரியில் பார்வையிடலாம் என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (ஐ)

# ஆபத்தான நிலையில் வட்டுவாகல் பாலம்

முல்லைத்தீவு,ஏப்.19

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்று பெருமையினை எடுத்துக்கூறும் வட்டுவாகல் பாலம் வெடித்த நிலையில் காணப்படுவதால் வீதியால் செல்லும் பயணிகள் பல அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்த பின்னரில் இருந்து 2019 ஆம் ஆண்டுவரை இந்தப் பாலம் சீரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. பலதடவைகள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறியும் சீரமைப்பு பணிகள் எவையும் நடைபெறவில்லை. புதுக்குடியிருப்பில் இருந்து முள்ளிவாய்க்கால் ஊடாக முல்லைத்தீவு நகருக்குச் செல்லும் வாகனங்கள் அனைத்தும் இந்தப் பாலத்தின் ஊடாகவே சென்று வருகின்றன.



முன்னர் இந்தப் பாலத்தின் ஒரு பகுதியில் உடைப்பு ஏற்பட்டு சீர்செய்யப்பட்ட நிலையில் தற்போது பாலத்தின் நடுப்பகுதியில் உடைப்பு ஒன்று ஏற்பட்டுள்ளது. மீனவர்கள் அதனை அடையாளப்படுத்தியுள்ளார்கள். வடக்கில் பல்வேறு பாலங்களை சீரமைக்க அமைச்சரவையில் அங்கீகாரம் கொடுக்கப்பட்டு நிதிகள், ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும், முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தை சீரமைப்பதற்கான பல முன்மொழிவுகள் மாவட்ட செயலர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் முன்வைத்தும் இதுவரை திருத்தி அமைப்பதற்கான நிதிகள் எவையும் ஒதுக்கப்படவில்லை.

இந்த வட்டுவாகல் பாலத்தை நம்பி பல நூற்றுக்கணக்கான மீனவர்கள்வீச்சுவலைகொண்டு இறால்,நண்டு போன்ற கடல் உணவுகளைப் பிடித்து தங்கள் வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வருகின்றார்கள். வட்டுவாகல் ஆற்றை ஆழப்படுத்தி தருமாறும், மீனவர்கள் பலதடவைகள் கோரிக்கை விடுத்தும் இதுவரை எதுவும் நடைபெறாத நிலைகாணப்படுகின்றது.

இந்த நிலையில் தற்போது ஆபத்தான நிலையில் வட்டுவாகல் பாலத்தில் வெடிப்பு ஒன்று ஏற்பட்டுள்ளது. கனரக வாகனங்கள் இதன் ஊடாக செல்லும் போது மேலும் உடைவு ஏற்பட வாய்ப்புள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளார்கள். (க-ரி3)



## புது வருடத்தை முன்னிட்டு மாங்கன்றுகள் கையளிப்பு

மன்னார்,ஏப் .19

வவுனியா கந்தபுரம் கிராமத்தில் உள்ள மக்களுக்கு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்மருத்துவ கலாநிதி சிவமோகனால் நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் மாங்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

தனிநபர் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்தில் தொடர்ச்சியாக காய்க்கக் கூடிய 300 மாங்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நல்ல இன மாங்கன்றின் காய் 650 கிராம் நிறை கொண்டதாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (க-213)




## ஈருருளிகையளிப்பு

வவுனியா,ஏப்.19

வவுனியா வடக்குக்கு உட்பட்ட பாடசாலைகளில் கற்கும் மாணவர்களில் நீண்டதூரம் நடந்து சென்று கற்றலைத்தொடரும் ஐந்து மாணவர்களுக்கு சுவிஸ் எழுகை அமைப்பினால் ஈருருளிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வு வவுனியா வடக்குப்பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்றதுடன், வவுனியா வடக்குப்பிரதேச செயலர் கலந்து கொண்டு உதவிகளை மாணவர்களுக்கு வழங்கிவைத்தார். (க-222)

## உதவிகள் கையளிப்பு

மாங்குளம் உயிரிழை முள்ளந்தண்டு வடம் பாதிப்புற்றோர் பராமரிப்பு இல்ல பயனாளிகளுக்கு ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான உதவிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

பிரான்சில் வாழும் திருப்பூர் ஒன்றியம், மயிலிட்டியைச் சேர்ந்த அருளானந்தம் ஜெயானந்தன் குடும்பத்தின் சார்பில் உயிரிழை பராமரிப்பு இல்லப் பயனாளிகளின் உணவுச் செலவுக்கு 32ஆயிரத்து 700 ரூபா நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (க-222)



## வெப்பத்தைத் தணிக்க மோர் வழங்கும் விளையாட்டுக் கழகம்


வவுனியா,ஏப்.19

வவுனியாவில் அண்மைய நாள்களில் அதிகரித்துள்ள வெப்பநிலை காரணமாக புளியங்குளம் பகுதியில் பொது மக்களின் தாகத்தை தணிப்பதற்காக மோர் வழங்கும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வடமாகாணத்தில் நிலவிவரும் வெப்பநிலை காரணமாக பொது மக்களிடத்தில் குளிர்ச்சியை ஏற்படுத்தி நோய்களில் இருந்து மக்களைக் காப்பாற்றும் நோக்கோடு புளியங்குளம் சுகாதாரப்பிரிவின் அனுசரணையுடன் புளியங்குளம் புரட்சிவிளையாட்டுக்கழகத்தினால் இந்த மோர் வழங்கும் நடவடிக்கை கடந்த ஒருவாரகாலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

புளியங்குளம் சந்தியில் அமைந்துள்ள சிறி லக்ஷ்மி நாராயணன் ஆலயத்துக்கு அருகில் தண்ணீர்ப்பந்தல் அமைத்தே பொதுமக்களுக்கு "மோர்" வழங்கபட்டு வருகின்றது.

அதிகளவான பொதுமக்கள் அவ்விடத்துக்குச் சென்று மோர் அருந்தி தமது தாகத்தை தணித்துவருவதுடன், இளைஞர்களின் செயற்பாடு முன்மாதிரியாக இருப்பதாகவும் தெரிவித்தனர். (க-110,222)



## வட்டுவாகல் பாலத்தில் சிக்கிக்கொண்ட முதலை



முல்லைத்தீவு,ஏப்.19

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தின் கடற்தொழிலாளர்கள் தொழில்செய்யும் பகுதியில் முதலை ஒன்று நேற்று முன்தினம் இரவு சிக்கிக்கொண்டது.

நந்திக்கடல் நீர் ஏரியில் நீர்மட்டம் வற்றிக்காணப்படும் இந்த வேளையில்,கடும் வெப்பம் நிலவுவதால் முதலை ஒன்று இரவு 10 மணியளவில் வட்டுவாகல் பாலத்துக்குள் சென்று சிக்கியுள்ளது.

கம்பி ஒன்றில் சிக்கிக்கொண்ட முதலை நகரமுடியாத நிலையில் மீனவர்கள் அதனை இழுத்து எடுத்து பாலத்துக்கு அருகில் வைத்துவிட்டு வன உயிரிகள் திணைக்களத்துக்குத் தகவல் கொடுத்துள்ளதை தொடர்ந்து திணைக்கள அதிகாரிகள் முதலையை பிடித்துச் சென்றுள்ளார்கள்.

12 அடிநீளம் கொண்ட முதலையை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வவுனிக்குளம் முதலைகள் சரணாலயத்தில் கொண்டு சென்று விட்டுள்ளதாக வனஉயிரிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (க-ரி3)

## பொது மக்கள் பாவனைக்கு வழங்கப்படாத மயானம்

பளை, ஏப். 19

பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வேம்பொடுகேணி கிராம அலுவலர் பிரிவில் மக்கள் மீளக்குடியேறி 9 வருடங்களாகியும் அப்பகுதியில் உள்ள இந்து மயானம் பொதுமக்களின் பாவனைக்கு வழங்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

மீளக்குடியமர்ந்துள்ள மக்களும் மயானப் பகுதி மற்றும் செல்லும் சாலை ஆகியவற்றில் வெடிபொருள்கள் அகற்றப்பட்டுள்ளதெனவும், மக்கள் அதனைப் பயன்படுத்தாமல் வேறு மயானங்களுக்குச் செல்கின்றனர் எனவெடிபொருள்கள் அகற்றும் நிறுவனத்தினரும் தெரிவித்தனர்.

வேம்பொடுகேணிப் பிரிவில் உள்ள குருடியன்காடு இந்து மயானத்தை வேம்பொடுகேணி, கச்சார்வெளி, இத்தாவில், முகமாலை உள்ளிட்ட கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்தி வந்தனர். 2000ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் 2011 ஆம் ஆண்டு கச்சார்வெளி, வேம்பொடுகேணி இத்தாவில் ஆகிய பிரிவுகளின் சில பகுதிகளும் கடந்த 2016 ஆம் ஆண்டு முகமாலை தெற்குப் பகுதியும் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டனர்.

வேம்பொடுகேணிப் பிரிவுக்குட்பட்ட பெரும்பாலான பகுதிகளில் வெடிப் பொருள்கள் அகற்றப்பட்டு பிரதேச செயலகத்திடம் கையளிக்கப்பட்ட போதிலும், அங்கு பொதுமக்கள் மீளக்குடியமர்த்தப்படவில்லை.

மயானம் இன்னமும் பாவனைக்கு விடாததால் சடலங்களை ஐந்து கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள மயானத்துக்கு கொண்டு செல்லும் நிலை காணப்படுகின்றது. (க-9)

## ஆறு இலட்சம் மீன் குஞ்சுகள் 47 குளங்களில் விடப்பட்டன

வவுனியா,ஏப்.19
ஆண்டின் முற்பகுதியில் வவுனியா மாவட்டத்தில் உள்ள 47 சிறு குளங்களுக்கு 6 இலட்சத்து 42 ஆயிரம் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட நீர் உயிரின வளர்ப்பு அதிகாரசபையின் பொறுப்பதிகாரி யோ. நிசாந்தன் தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியாமாவட்டத்தின் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் அமைந்துள்ள குளங்களில் கடந்தவருடம் 12 ஆம் மாதத்தில் இருந்து இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களுக்குள்ளேயே மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.

வற்றுக்குளங்கள் எனப்படும் சிறிய குளிங்களுக்கே மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளதுடன். அவற்றில் 46 குளங்களில் நீர் உயிரின வளர்ப்பு அதிகாரசபையினது நிதியும். ஒரு குளத்துக்கு மீனவசங்கத்தினது நிதி உதவியிலும் மீன் குஞ்சுகள் கொள்வனவுசெய்யபட்டு விடப்பட்டுள்ளன.

இவற்றின் பெறுமதி 16 இலட்சம் ரூபா என்றும்.

விடப்படும் மீன் குஞ்சுகள் ஆறு மாதத்தில் வளர்சியடைவதுடன். ஒரு மீனின் பெறுமதி அண்ணளவாக 200 ரூபா வரைக்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

இதன்மூலம் மீனவ சங்கங்கள் அதிகமான வருமானத்தை பெற்றுகொள்ளமுடிவதாகவும் தெரிவித்தார்.

இதுவரை வடமாகாணம் முழுவதும் 100 ற்கும் மேற்பட்ட சிறுகுளங்களில் மீன்குஞ்சுகள் விடப்பட்டுள்ள நிலையில் வவுனியா மாவட்டத்திலேயே அதிகப்படியாக 47 குளங்களுக்கு மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன. இதற்கு வவுனியா மாவ்ட்ட கமநல அபிவிருத்தி திணைக்களமும் ஒத்துழைப்பை வழங்கியிருந்தது.

எதிர்வரும் காலங்களில் பெரியநீர்பாசனக் குளங்களுக்கும் மீன் குஞ்சுகள் விடப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-110)

### கொட்டித் தீர்த்த மழையால்

# செஞ்சோலைக் காணியில் குடிவந்தோர் இடம்பெயர்வு

கிளிநொச்சி, ஏப்.19

இராணுவ ஆக்கிரமிப்பால் சிறுவர்களாக குடிபெயர்ந்து, தற்போது குடும்பங்களாகி செஞ்சோலைக் காணியில் குடியமர்ந்திருந்தவர்களை மழை மீண்டும் அங்கிருந்து இடம்பெயரவைத்துள்ளது.

செஞ்சோலைக் காணியில் தற்காலிக கொட்டகைகளில் வசித்து வருபவர்களின் இருப்பிடங்களுக்குள் நேற்று முன்தினம் மாலை பெய்த மழை காரணமாக வெள்ளம் புகுந்துள்ளது. அதனால் கைக்குழந்தைகளுடன் பெரும் அவலப்பட்டு அவர்கள் மீண்டும் இடம் பெயர்ந்து அருகிலுள்ள பாடசாலையில் தங்கியுள்ளார்கள்.

செஞ்சோலை வளாகத்துக்குள் இருந்தவர்கள் காணிகளை தமக்கு பகிர்ந்தளிக்குமாறு கேட்டதற்கு இணங்க ஒருங்கிணைப்புக் குழுவும் அதற்கான அனுமதியை வழங்கியது. இவ்வாறான நிலையில் நேற்று முன்தினம் பெய்த மழையால் அங்கு வாழ்ந்த குடும்பங்கள் மீண்டும் அங்கிருந்து இடம்பெயர்ந்துள்ளன. அடிப்படைவசதிகள் எவையும் இன்றி உடைந்த கட்டடங்களிலும், தறப்பாள் கொட்டில்கள் அமைத்தும் குடியமர்ந்துள்ள மக்களுக்கு வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் வரும் வீட்டுத் திட்டங்களில் வீட்டு வசதிகளையும் ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் கோரிக்கை விடப்படடுள்ளது. (க-21,426)



## முல்லைத்தீவு மருத்துவமனைக்கு வடக்கு ஆளுநர் திடீர்ப் பயணம்

முல்லைத்தீவு, ஏப்.19
முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் திடீர்ப்பயணம் மேற்கொண்டு மருத்துவமனையைப் பார்வையிட்டுள்ளார்.

மாஞ்சோலையில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் உள்ள நிர்வாக மற்றும் பௌதீகவளப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்து மக்களுக்கு சிறந்த சேவையை பெற்றுக்கொடுக்கவேண்டும் என்று மக்கள் ஆர்ப்பாட்டம் செய்த அதேவேளை ஆளுநர் உள்ளிட்டவர்களுக்கு மனுக்களும் கையளித்துள்ளார்கள்.

இந்த நிலையில் மாவட்ட மருத்துவமனையின் மருத்துவர்கள் இந்த மாதத்தில் மட்டும் இரண்டு தடவை நிர்வாக பிரச்சினை காரணமாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளார்கள். மாவட்ட மருத்துவ சேவையைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக மக்கள் தெரிவித்து வந்துள்ளதுடன், ஆளுநரின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளார்கள்.

இதனைத் தொடர்ந்து ஆளுநர் திடீர்ப் பயணம் மேற்கொண்டு மருத்துவமனையின் செயற்பாடுகளை பார்வையிட்டுள்ளார். (க-ரி3)

## குடி தண்ணீர் வழங்கல் குழாய் சுத்தமாக்கும் பணி மன்னாரில்

மன்னார், ஏப்.19
மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களத்தினரால் மன்னார் நகரை அண்டிய எழுத்தூர், சாந்திபுரம், தலை மன்னார் வீதிப் பகுதிகளில் உள்ள பிரதான நீர்க் குழாய்கள் உயர் அழுத்தப் பொறிமுறையை பயன்படுத்தி சுத்தம் செய்யப்பட்டு நீர் குழாய்களில் படிந்துள்ள காபன்கள் அகற்றப்பட்டு நீர்குழாய்கள் சுத்தம் செய்யப்படுகின்றன.

வறட்சி காலத்தில் குழாய்கள் சுத்தப்படுத்தும் போது நீர் விரயமாகும் சந்தர்ப்பங்கள் உள்ளன. இது தொடர்பாக மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி டி.யசோதரனிடம் கேட்டபோது,

அனைத்துப்பகுதிகளிலும் இந்தத் திருத்த வேல்லைகள் செய்யவில்லை மக்கள் முறைப்பாடுகள் செய்த இடங்கள் மட்டுமே செய்யப்படுகின்றன.

இதனால் தண்ணீர்த் தட்டுப்பாடுகள் ஏற்படாத வண்ணம் பாதுகாத்து முடிந்தளவு நீர்விரயங்களைத் தவிர்த்து நீர்க்குழாய்களை சுத்தப்படுத்தும் பணி நடை பெறுவதாக மன்னார் நீர்ப்பாசனத்திணைக்களத்தின் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

சில தினங்களுக்கு முன் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட நீர் இணைப்புகளில் தண்ணீர் நிறம் மாறி வந்ததனால் சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களத்தினரின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-213)

## பாரம்பரிய விளையாட்டு நிகழ்வு

மன்னார், ஏப்.19
நானாட்டான் றீகன் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஏற்பாடு செய்துள்ள பாரம்பரிய தமிழர் விளையாட்டு நிகழ்வு நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

மன்னார் மாவட்டத்தை உள்ளடக்கி நடைபெற உள்ளஇந்தவிளையாட்டுப் போட்டி.அழிந்து கொண்டு வரும் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டாக உள்ள கபடிப் போட்டி, முட்டி உடைத்தல், சறுக்கு மரம் ஏறுதல், தலையணைச் சண்டை, கிளித் தட்டு, பெண்களுக்கான கிடுகு இழைத்தல். ஊசிக்குள் நூல் கோர்த்தல், கரண்டிக்குள் தேசிக்காய் கொண்டு செல்லுதல், போன்ற பல தமிழர் பாரம்பரிய விளையாட்டுகள் நடைபெற உள்ளதோடு, வெற்றி பெறுபவர்களுக்கான பெறுமதி மிக்க பரிசில்களும் வழங்கப்பட உள்ளன.

நானாட்டான்பிரதேசத்தின் தலைமைக் கோயிலாக உள்ள சிறி செல்லமுத்து மாரியம்மன் ஆலய நிர்வாகத்தின் ஒத்துழைப்புடன் நடைபெற இருக்கும் இந்த நிகழ்வில் பங்கு கொள்ள தமிழ் பாரம்பரியத்தில் பற்றும் அக்கறையும் உள்ள அனைத்து மக்களுக்கும் கலந்து கொள்ள முடியும்.

இந்த விளையாட்டு நிகழ்வுகள் யாவும் 21 ஆம் திகதி ஞயிற்றுக்கிழமை நண்பகல் 1 மணியளவில் நானாட்டான் மோட்டக் கடை சிவராஜா இந்து வித்தியாலயத்தில் நடைபெறும். (க-213)

## வறுமையிலுள்ள குடும்பங்களுக்கு பளைப் பொலிஸார் உதவிகள்

கிளிநொச்சி, ஏப். 19
பளைப் பொலிஸார் சித்திர வருடப்பிறப்பன்று வறுமையிலுள்ள சில குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் மற்றும்உலர் உணவுகளை வழங்கினர்.

நிலையப் பொறுப்பதிகாரி எஸ். கிருசாந்தன் தலைமையில் கிளாலி மற்றும் இத்தாவில் பகுதியில் வறுமைப்பட்ட குடும்பங்களுக்கு இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன.

குறித்த குடும்பங்களில் உள்ள சிறுவர்களுக்கு வங்கிக் கணக்கும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அண்மையில் பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக பொறுப்பெடுத்துக்கொண்ட தமிழ் பேசுகின்ற அதிகாரிமக்களின் தேவைகளை அறிந்து பல்வேறு கோணங்களில் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டது. (கு-6)

## சுற்றுமதிலுக்கு அடிக்கல்



புலோப்பளை மாதா ஆலயத்துக்கு சுற்றுமதில் அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டது.

புலோப்பளை புனித சித்தாத்திரை மாதா தேவாலயத்துக்கு ஒரு மில்லியன் ரூபா செலவில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனால் சுற்று மதில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆலய நிர்வாகத்தினரதும் மக்களினதும் தொடர்ச்சியான வேண்டுகோளுக்கு அமைவாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனால் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆலயத்துக்கான சுற்று மதில் அமைக்கும் வேலைகள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைவர் சு.சுரேனால் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (க-6)

## அரச பொது ஊழியர் சங்க பொதுக் கூட்டம்

வவுனியா,ஏப்.19
அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் வவுனியா மாவட்டக்கிளையின் சீரமைப்பு பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வவுனியாவில் நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவர் எஸ். லோகநாதன் தலைமையில், வவுனியா வலயக் கல்வி அலுவலக கூட்ட மண்டபத்தில் பொதுக் கூட்டம் நடைபெறும்.

கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா மாவட்ட செயலர் ஐ.எம். ஹனிபா ஆகியோர் முதன்மை விருந்தினராக கலந்து கொள்வதுடன்,

வவுனியா நகர சபைத் தலைவர் ஆர்.கௌதமன், வவுனியா தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் ரி.நடராஜ சிங்கம், சங்க ஆலோசகர் செல்லையா இராசையா ஆகியோர் மதிப்புறு விருந்தினராக கலந்து கொள்வுள்ளனர். (க-30)

## தவக்கால தியானங்கள்

## பிதாவே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள்

'பிதாவே இவர்கள் தாம் செய்வது இன்னதென்று அறியாமல் செய்கின்றனர். அவர்களை மன்னியும்' இது இயேசுக் கிறிஸ்து சிலுவையில் உயிர்துறப்பதற்கு முன்னர் தன்னைத் துன்புறுத்திய தலைமைச் சங்கத்தினரையும், யூதர்களையும் பார்த்து மனம் வருந்தி அவர்களை மன்னிக்கும் படியாக தனது தந்தையிடம் பரிந்துரைத்த வசனங்கள்.

வரலாற்றில் முக்கிய நிகழ்வான இயேசு கிறிஸ்துவின் பாடுகள், சாவு, உயிர்ப்பை உலகளவில் கிறிஸ்தவர்கள் நினைவு கூர்ந்து வருகின்றனர். அந்த வகையில் இயேசுக் கிறிஸ்து உயிர்விட்ட நாளை இன்று உலகிலுள்ள அனைத்து கிறிஸ்தவர்களும் பெரிய வெள்ளியாக நினைவு கூருகின்றனர். பெரிய வெள்ளி, புனித வெள்ளி என்று சொல்லும் போதே இயேசுவின் சாவுதான் உலக மக்களின் நினைவிலும் வரும். அந்த நாளுக்கு பெரியவர்கள் அல்லது முன்னோர்கள் சரியாக பெயரிட்டுள்ளனர். நல்ல வெள்ளி, புனித வெள்ளி, எல்லா வெள்ளிகளிலும் பெரிய வெள்ளி என்று மிகவும் பொருத்தமாகவே பெயரிட்டுள்ளனர். ஆனால், அந்த பெயர்களின் அடிப்படையில் அந்த நாள் கடைப் பிடிக்கப்படுகின்றதா என்று கேட்டால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

எமது பகையுணர்வு பகையுணர்வாகவே உள்ளது. எமது கர்வம் அப்படியேதான் உள்ளது. கோபம், பொறாண்மை, மனக் கசப்பு உள்ளிட்ட எந்தப் பழக்கங்களிலும் எம்மிடத்தில் மாற்றங்கள் இல்லை.

எனினும் மிகச் சாதாரணமாக இந்த நாளையும் நாம் கடந்து போகின்றோம். தன்னைத் தாக்கி, சிலுவையில் ஏற்றி, ஆணியால் அறைந்து படுகொலை செய்தவர்களைக்கூட உயிர்பிரியும் நேரத்தில் மன்னித்துச் சென்ற இயேசு எங்கே, நாம் எங்கே. சிந்திப்போம், புனித வெள்ளிக்கு அர்த்தம் கொடுப்போம்.

# அனுமதியற்ற கட்டடங்களின் மீது சட்டத்துக்கு அப்பால் நடவடிக்கை

## ஆராய்கின்றது வவுனியா நகர சபை

வவுனியா, ஏப். 19

அனுமதியற்ற கட்டடங்கள் தொடர்பில் சட்டத்துக்கு அப்பாற்பட்டுச் செயற்படுவது தொடர்பாக வவுனியா நகரசபை அமர்வில் கலந்துரையாடப்பட்டது.

வவுனியா நகரசபை அமர்வு தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் நேற்று நடைபெற்றது. வவுனியா நகர எல்லைக்குள் அனுமதியற்ற கட்டடங்கள், வீடுகள், வர்த்தக நிலையங்களை அமைத்துள்ளவர்கள் அதற்கான அனுமதிகளைப் பெற்றுகொள்ளுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டும் அது நடைபெறுவது குறைவாகவுள்ளது.

அனுமதியற்ற கட்டடங்களை அமைத்துள்ளவர்களுக்குக் கால அவகாசம் கொடுத்து அவர்கள் வராதுவிடின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்தல் வழங்குமாறு சில உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன்போது கருத்துத் தெரிவித்த உறுப்பினர் நா.சேனாதிராசா, அனுமதியற்று அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களுக்கு நகர அபிவிருத்தி அதிகார சபை அறவிடும் தண்டத் தொகை அதிகமாகவுள்ளது. இங்கு காணி முரண்பாடுகளும் இருக்கின்றன. கொழும்பை மையமாக வைத்து எமது பகுதியைப் பார்க்கமுடியாது. அறவிடப்படும் தண்டப் பணத்தில் முன்னுரிமை அடிப்படையில் கழிவுகளை வழங்குமாறு நகர அபிவிருத்தி அதிகாரசபையைக் கோரவேண்டும் என்றார்.

மக்கள் சார்ந்த சில விடயங்களில் சட்டத்தைப் பார்க்காமல் செயற்படவேண்டும். சட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தால் வடக்கு மாகாண சபைபோல மக்களுக்கு எதனையும் செய்ய முடியாத நிலையே ஏற்படும் என்று உறுப்பினர் க. சந்திரகுலசிங்கம் தெரிவித்தார். கடந்தவருடம் தெற்கில் ஏற்பட்ட குப்பைமேடு இடர் விடயத்தில் சட்டத்தைப் பார்க்காமல் பணி செய்யுமாறு அரசதலைவர் தெரிவித்த கருத்தையும் உதாரணம் காட்டியிருந்தார்.

இவ்வாறான முன்னுரிமையை வடக்கு மாகாணம் முழுவதுக்கும் வழங்கவேண்டும் என்று தெரிவித்த தவிசாளர், மக்கள் சார்ந்த விடயங்களில் சட்டத்தைப் பார்க்காமல் பணியாற்றுவதற்கு இந்த சபை எனக்கு ஆதரவை வழங்குமா என்று கேள்வி எழுப்பியிருந்தார். இதன்போது அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்திருந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானத்தை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுப்பிவைப்பதாக சபையில் முடிவு காணப்பட்டது. (த-110)

## கஞ்சா விற்ற சந்தேகத்தில் இளைஞர் கைது

முல்லைத்தீவு,ஏப்.19

முல்லைத்தீவு கள்ளப்பாடு தீர்த்தக்கரை பகுதியில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட சந்தேகத்தில் 25 வயதுடைய இளைஞன் ஒருவர் மாவட்ட போதைப் பொருள் தடுப்பு பொலிஸ் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

16 ஆம் திகதி கள்ளப்பாடு தீர்த்தக்கரைப்பகுதியில் கஞ்சா வியாபாரம் இடம்பெற்று வருவதாக முல்லைத்தீவு மாட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக இரவு வேளை சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்ட போது சந்தேக நபரிடம் இந்து இரண்டு கிராம் கஞ்சாவை விலைக்கு வாங்கிய பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர்.

பின்னர் அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் போது அவர் தங்கி இருந்த வீட்டில் இருந்து 80 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன், சந்தேக நபரை 17ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் 2014 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மல்லாகம் நீதிமன்றினால் இந்தியாவில் இருந்து 70 கிலோ கஞ்சா யாழ்ப்பாணத்துக்கு கடத்தி வந்த குற்றச்சாட்டில் ஐந்தரை ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்துள்ளதுடன், திருகோணமலையில் குற்றச்செயல் ஒன்று தொடர்பில் பிணையில் விடுதலை செய்யப்பட்டும் இவரது வதிவிட அடையாள உறுதிப்படுத்தல் சான்று எதுவும் இல்லாத நிலையில் நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-ரி3)

## விபத்தில் சிக்கி முதியவர் காயம்

சாவகச்சேரி,.ஏப்.19

சிகிச்சை பெற்று வீடு திரும்பிய முதியவர் வீதி விபத்தில் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி மடத்தடியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

மீசாலை ஐயா கடையடியைச் சேர்ந்த சின்னையா இராசரத்தினம் ( வயது - 69 ) என்ற முதியவரே விபத்தில் காயமடைந்தார்.

மருத்துவமனையில் நடைபெற்ற நீரழிவு சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று உந்துருளியில் வீடு திரும்புகையில் மடத்தடிப் பகுதியில் வந்த ஹன்ரர் வாகனம் உந்துருளியின் கைப்பிடியில் இடித்ததில் முதியவருக்கு கையில் பாதிப்பு ஏற்பட்டது.

பாதிப்புக்குள்ளான முதியவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ஐ-9)

## வணிக நிலையங்களில் விழிப்புணர்வு பாதாகை

சாவகச்சேரி, ஏப். 19



பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்களின் பாவனையை நிறுத்தும் வகையில் வர்த்தகர்களும் வியாபாரிகளும் தமது வணிக நிலையங்களில் பொதுமக்களுக்கான அறிவிப்பு பதாகைகளை நேற்று காட்சிப்படுத்தினர்.

உலக புவி தினத்தை முன்னிட்டு பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்கள் பாவனையை நிறுத்தும் வகையில் அன்பான வாடிக்கையாளர்களே, எதிர்வரும் திங்கட்கிழமை பொலித்தீன் பயன்பாடு நிறுத்தப்ப டவுள்ளது. எனவே மாற்றீடுகளுக்குத் தயாராகுங்கள் என்ற வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டன.

சாவகச்சேரி நகரசபையின் ஏற்பாட்டில் பொலித்தீன் அற்ற நகரமாக மாற்றும் திட்டத்தின் கீழ் பொலித்தீன் பொருள்கள் பாவனையை நிறுத்துவது என்று கடந்த 16 ஆம் திகதி நடத்தப்பட்ட கருத்தமர்வில் கலந்து கொண்ட வியாபாரிகள் மற்றும் வர்த்தகர்கள் முடிவு செய்துள்ளனர். இதன் முதற்கட்டமாகவே இந்தப் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டன. (ஐ-9)

# சபை முடிவை உதாசீனப்படுத்தும் கல்வி நிலையங்கள் தப்பமாட்டா!

## வவுனியா சபையில் நேற்று முடிவு

வவுனியா, ஏப். 19

உள்ளூராட்சி அமைப்பொன்றில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை தனியார் கல்வி நிலையங்கள் உதாசீனம் செய்வதைக் கருத்திற்கொண்டு இனிவரும் காலங்களில் சட்டநடவடிக்கைக்கு நேரடியாகச் செல்லவுள்ளதாகத் தவிசாளர் சபையில் நேற்றுத் தெரிவித்தார்

வவுனியா நகரசபை அமர்வு தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் நேற்று நடைபெற்றது. நகரசபை அறிவித்தல் வழங்கப்பட்டும் பல தனியார் கல்வி நிலையங்கள் மாலை 7 மணிக்குப் பின்னரும் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்வதாகச் சபையின் உறுப்பினர்கள் பலர் குற்றம்சாட்டியிருந்தனர். அவ்வாறான கல்வி நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு தவிசாளரிடம் தெரிவித்திருந்தனர்.

போதிய வளங்கள் கிடைக்காத பட்சத்தில் கல்வியைத் தோற்கடிப்பதற்கு மாணவர்களுக்கு உரிமை இருக்கிறது என்று உறுப்பினர் காண்டீபன் தெரிவித்தார். அதற்குச் சட்டநடவடிக்கை எடுப்பது தொடர்பாக ஆராய வேண்டும் - என்றார். இதே வேளை இரவு நேரங்களில் கல்வி நிலையங்கள் நடத்தப்படுவதால் மாணவிகளுக்குப் பாதுகாப்பில்லாத நிலை உருவாகியுள்ளது. அவர்களது பாதுகாப்புத் தொடர்பாகவும் இந்தச் சபைக்கு பொறுப்பு இருக்கிறது என்று சில உறுப்பினர்கள் தெரிவித்திருந்தனர்.

பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கமுடியாது என்று சட்டத்தில் உள்ளது. எனவே சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உறுப்பினர் செந்தில்ரூபன் தெரிவித்தார்.

ஜனநாயகத் தன்மையைப் பேணுவதற்காகவே தனியார் கல்வி நிலையம் நடத்துபவர்களை நாம் நேரில் அழைத்துக் கலந்துரையாடியிருந்தோம். அவர்களுக்குப் பல விடயங்கள் தொடர்பாக அறிவுறுத்தியிருந்தோம். அவற்றை நடைமுறைப்படுத்தாத நிலை காணப்படுகின்றது. உள்ளூராட்சி அமைப்பொன்றில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை உதாசீனம் செய்வதைக் கருத்திற்கொண்டு இனிவரும் காலங்களில் சட்டநடவடிக்கைக்கு நேரடியாகச் செல்லவுள்ளதாகத் தவிசாளர் தெரிவித்தார்.

இதேவேளை, மாகாண சபை உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் உலகவங்கியின் நிதிஉதவியில், அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வட்டார அடிப்படையிலான தேவை மதிப்பீடும் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டத்தில், வட்டாரங்களில் நேரடியாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பது தொடர்பாக விகிதாசார உறுப்பினர்கள் அமர்வில் விசனம் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக உறுப்பினர் மதியழகன் மற்றும் காண்டீபன் ஆகியோர் வாக்குவாதப்பட்டனர். குறித்த அபிவிருத்தி திட்டத்தில் அனைத்து உறுப்பினர்களுக்கும் சமமான முன்னுரிமை அளிக்கப்படும் என்று சபைச் செயலர் தெரிவித்திருந்தார். (த-110)

## வீதி சீரமைப்பு

கிளிநொச்சி,ஏப்.19



கிளிநொச்சி நகரப் பகுதியில் மிக நீண்ட காலமாக் பாதிக்கப்பட்டிருந்த சீரமைக்கப்படாத இரத்தினபுரம் கிருஷ்ணன் ஆலய வீதி சீரமைக்கும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

2018 ஆம் ஆண்டு ஊரெழுச்சி வேலைத் திட்டத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம்சிறீதரனால் இரண்டுமில்லியன்ரூபா நிதி ஒதுக்கப்பட்டு தற்பொழுது மேலும் இரண்டு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்து நிரந்தர வீதியாக சீரமைக்கப்பட்டு வருகின்றது.

மிகவும் நீண்ட காலமாக வெள்ளம் பாய்ந்து ஓடும் வாய்க்காலாக இருந்ததையிட்டு சீரமைத்து தருமாறு இரத்தினபுரம் மக்களும், பொது அமைப்புகளும் இணைந்து கேட்டுக் கொண்டமையால் ஆரம்பமான வேலைகளை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் , பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் நகுலன்ஆகியோர் பார்வையிட்டனர். (க)







காவடிக் கந்தன் என்று போற்றி வழிபடும் மாதகல் நுணசை யம்பதியானின் தேர்த்திருவிழா நேற்று பக்தி பூர்வமாக நடைபெற்றது. காவடிக் கந்தன் தேரேறி வருவதைப் பார்க்க ஆயிரக் கணக்கான மக்கள் புடைசூழ்ந்திருந்தனர். நூற்றுக்கணக்கான அடியவர்கள் காவடிகள் எடுத்தும், அங்கப்பிரதட்டை செய்தும் தமது நேர்த்திகளை நிறைவேற்றினர். (ஐ-21)

# ஐ.தே.க.சார்பில் ரணில் களமிறங்கவே வாய்ப்பு

## கூறுகிறார் சபைமுதல்வர்



கொழும்பு, ஏப். 19

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்கவே அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்குவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன. எனினும் எமது கட்சியின் மையச் செயற்குழு மற்றும் நாடாளுமன்றக் குழுவே அதனை இறுதி செய்யும். இவ்வாறு சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சியினர் அரச தலைவர் வேட்பாளரை எப்படித் தெரிவு செய்கின்றார்கள் என்று பாருங்கள். அண்ணா, தம்பி அல்லது மனைவி என்றுதான் அவர்களின் நிலைமை இருக்கின்றது. தமது குடும்பத்தை மையப்படுத்தியே தெரிவுகள் நடக்கின்றன. அது குடும்ப ஆட்சியை நிலைநிறுத்துவதற்கான முனைப்பாகும்.

நாங்கள் அப்படிச் சிந்திப்பதில்லை. எமது கட்சி கட்டமைப்பு ரீதியானது. இங்கு மையச் செயற்குழு இருக்கின்றது. நாடாளுமன்றக் குழு இருக்கின்றது. அந்தக் குழுக்களே உரிய வேட்பாளரை இறுதி செய்யும். தற்போதைய நிலைமையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவே எமது கட்சியின் தலைவர். அவருக்கு அரச தலைவர் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்க முடியும் - என்றார். (ஒ.5,31)

## புத்தாண்டு காலத்தில் 11 பேர் கொலை

கொழும்பு, ஏப். 19

சித்திரைப் புத்தாண்டு காலப்பகுதியில் 11 கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

வெவ்வேறு இடங்களில் நடைபெற்ற சம்பவங்களில் 6 பேர் கொல்லப்பட்டனர் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டபோதும் அந்த எண்ணிக்கை 11 ஆக அதிகரித்துள்ளது என்று பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (த-22)

## ராஜபக்சவினரிலும் வேட்பாளர் உள்ளார்

### சந்திரசேன எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஏப். 19



எதிர்வரும் அரசதலைவர் தேர்தலில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவை நிறுத்த முடியாதுபோனால், வேட்பாளராக நிறுத்த இன்னும் ராஜபக்சவினர் இருக்கின்றனர் என்று கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய அரசு கோத்தபாய ராஜபக்சவைக் கண்டு பயப்படுவதால், பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி அவர் தேர்தலில் போட்டியிடுவதைத் தடுக்க முயற்சிக்கின்றது. எவ்வாறாயினும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரைத் தெரிவு செய்ய முடியாத நிலைமையில் உள்ளது. ஒவ்வொருவர் சில நபர்களின் பெயர்களைக் கூறி வருகின்றனர் என்றும் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார். (த)

## பிக்குகளுக்கு தனி நீதிமன்று அமைக்க உடன்பாடில்லை

### நீதி அமைச்சர் தெரிவிக்கிறார்

கொழும்பு, ஏப். 19

பௌத்த குருமார் நீதிமன்றம் செல்வதை விரும்பவில்லை. எனவே, பிக்குமார்களுக்கு தனியாக நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தில் தனக்கு எந்தவித உடன்பாடும் இல்லை.

இவ்வாறு நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி போதிராஜாராமய விகாரையின் நான்கு மாடிக்கட்டத்தை அண்மையில் திறந்துவைத்து உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் மகாநாயக்கர்களிடம் ஆசிபெறச் சென்றபோது பௌத்த குருமார்களுக்குத் தனியாக நீதிமன்றம் ஒன்றை அமைக்குமாறு என்னிடம் வேண்டுகோள் விடுத்தனர். அதில் எனக்கு உடன்பாடு இல்லை.

உன்னதமான புனிதம் மிக்க பௌத்த மத போதகர்களான பௌத்த குருமார்களை சாதாரண நீதிமன்றத்தின் வாசற்படியைக் கூட மிதிக்க வைக்க நான் விரும்பவில்லை.

எனினும், சாதாரண நீதிமன்றங்களில் பௌத்த குருமார் முற்படுவதற்கு தனியான ஒரு தினத்தை ஒதுக்கிக் கொடுக்குமாறு கேட்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க மத்திய, வடமேல் மாகாணங்களில் தனியான ஒரு தினம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதேபோல் ஏனைய மாகாணங்களிலும் அதற்குரிய ஒழுங்குகளைச் செய்துகொடுப்பேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த)

## கட்சிகளுடன் பேசி வேட்பாளர் முடிவு

### மகிந்த ராஜபக்ச கூறுகிறார்

கொழும்பு, ஏப். 19

அடுத்த அரசதலைவர் தேர்தலில் நிறுத்தும் வேட்பாளர் யார் என்பது தொடர்பில் அனைத்து கட்சிகளுடனும் பேச்சு நடத்தியே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். கட்டாயம் வெல்லக் கூடிய வேட்பாளரைத்தான் அரசதலைவர் தேர்தலில் களமிறக்குவேன் என்றும் அவர் கூறியுள் ளார்.

அரசைக் கவிழ்க்க சூழ்ச்சி செய்யும் அவசியமில்லை எனவும் அரசைக் கவிழ்க்க எப்போதும் தயாராகவே இருக்கிறேன் என்றும் மகிந்த ராஜபக்ச மேலும் தெரிவித்துள்ளார். (த)

## அரசதலைவர் சட்டத்தரணிகளாக 21 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்

கொழும்பு, ஏப். 19

அரசதலைவர் சட்டத்தரணிகளாக 21 சட்டத்தரணிகளை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் 33 (2) உறுப்புரையின் கீழ் அரசதலைவரிடம் பகிரப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இவ்வாறு அரசதலைவர் சட்டத்தரணிகள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

இதற்கமைய, சம்பத் மென்டிஸ், நவின் மாரப்பன, ஸானக த சில்வா, பியசேன தீரத்ன, எம்.ஜயசிங்க, நளிந்த ஜயதிஸ்ஸ, வீ.கே. சொக்ஸி, நளீன் திசாநாயக்க, மயூர குணவன்ஸ, வசந்த கஜநாயக்க, அஜந்த ரொட்ரிகோ, பாமர் காசிம், ஜகத் விக்ரமநாயக்க, சுமித் பொன்சேகா, வீசலி அமித்ரிகல, சாலிய மொஹொட்டி, வின்சன்ட் பெரேரா, சனத் வீரரத்ன, ஏ.எச்.எம்.இல்லியாஸ், சுவர்ணா பெரேரா ஆகிய சட்டத்தரணிகளே அரசதலைவர் சட்டத்தரணிகளாக நியமனம் பெற்றுள்ளனர்.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த அரசதலைவர் நாடு திரும்பியதும், குறித்த சட்டத்தரணிகள் 21 பேரும் பதவிப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த)

## வாகன விபத்துகளில் 42 பேர் பரிதாபச் சாவு!

### நான்கு நாள்களில் மட்டும்

நாடளாவிய ரீதியில் நான்கு நாள்களில் மட்டும் இடம்பெற்ற வாகன விபத்துகளில் 42 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கடந்த 13ஆம்திகதிகாலை6மணியிலிருந்துநேற்றுமுன்தினம் காலை 6 மணிவரை நாடளாவிய ரீதியில் 31 வாகன விபத்துகள் இடம்பெற்றுள்ளன. இதன்போது 42 பேர் உயிரிழந்தனர். அத்துடன், பலர் காயமடைந்துள்ளனர் - என்றார். (ம-22)



## கட்டார் விபத்தில் இளைஞர் இறந்தார்

கட்டார் நாட்டில் சாரதியாகப் பணிபுரிந்து வந்த இலங்கை இளைஞர் வீதி விபத்தில் உயிரிழந்துள்ளார் என்று அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு ஓட்டமாவடி, மீராவோடையைச் சேர்ந்த லத்தீப் முஹம்மத் ஹஸான் (வயது - 21) என்பவரே கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.

விபத்துத் தொடர்பில் கட்டார் பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது. (த)

## பத்தனைத் தோட்டத்தில் சிறுத்தை சடலமாக மீட்பு



கொழும்பு, ஏப். 19

மலையகம் பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்டோனிகிளிப் தோட்ட மேற் பிரிவில் சிறுத்தை ஒன்று உயிரிழந்த நிலையில் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள் ளது.

சிறுத்தை உயிரிழந்த இடத்தில் நாய் ஒன்றின் உடற்பாகங்களும் இருந்துள்ளன.

குறித்த தேயிலை மலையில் தொழில் செய்து கொண்டிருந்த பெண் தொழிலாளர்கள் இவற்றை அவதானித்துப் பத்தனை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தினர் சிறுத்தையின் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காகக் கொண்டு சென்றுள்ளனர். இந்தத் தோட்டத்தில் சில மாதங்களுக்கு மேலாக சிறுத்தைகள் நடமாட்டம் அதிகமாக காணப்படுகிறது என்று அங்குள்ளவர்கள் தெரிவிக்கின்றனர். லயன் குடியிருப்பு பகுதிகளுக்கும் சிறுத்தைகள் வந்து சென்றுள்ளன. காவலுக்காக வளர்க்கப்படுகின்ற நாய்களையும் சிறுத்தைகள் வேட்டையாடி உண்கின்றன என்றும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (த)

## சுகாதாரத்துக்குப் பாதுகாப்பான கூரைத் தகடுகள் இறக்குமதி

### சுகாதார அமைச்சு நடவடிக்கை

இலங்கையின் சுகாதாரப் பாதுகாப்புக்குப் பொருத்தமான எஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உலகில் அதிகமாகக் கூரைத் தகடுகளை உற்பத்தி செய்யும் நாடு என்ற வகையில், இலங்கைக்கான கூரைத் தகடுகளை ரஸ்யாவே அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் கூரைத் தகடுகள் குறித்து விளக்கமளிக்கும் நிகழ்வொன்று கடந்த வாரம் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தலைமையில் கொழும்பில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ரஷ்யாவின் பிரதி சுகாதார அமைச்சர், இலங்கையிலுள்ள ரஷ்ய தூதுவராலய அதிகாரிகள், உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (த)

# அமெரிக்கக் குடியுரிமையை கைவிடும் கதை முழுப்பொய்

## ஜே.வி.பி. தெரிவிக்கிறது

கொழும்பு, ஏப். 19

அமெரிக்கக் குடியுரிமையை கைவிடுவதற்கு விண்ணப்பித்துள்ளேன் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச கூறியுள்ளமை முற்றிலும் பொய் என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.



கோத்தபாய ராஜபக்ச அரசதலைவர் வேட்பாளராகக் களமிறங்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளார். இன்னமும் இறுதித் தீர்மானம் எடுக்கப் படவில்லை.

அமெரிக்கக் குடியுரிமையைக் கைவிடுவதற்கு ஆவணங்களைச் சமர்ப்பித்துள்ளேன் என்று ராஜபக்ச கூறுவது முற்றிலும் பொய். அந்த ஆவணங்களைச் சமர்ப்பித்திருந்தால் அமெரிக்கக் கடவுச் சீட்டில் அவர் இலங்கைக்கு வரமுடியாது. அவர் அமெரிக்காவுக்குச் சென்றதும் அந்தநாட்டு கடவுச் சீட்டில் தான், இங்குவந்ததும் அதே கடவுச் சீட்டிலே தான்.

ஆவணங்கள் சமர்ப்பிக்கப் பட்டிருந்தால் கடவுச்சீட்டையும் வழங்க வேண்டும் என்பதுதான் அங்குள்ள குடியுரிமைச்சட்டம். குடியுரிமையைரத்துசெய்வதற்கான விண்ணப்பப் படிவத்தை எவர் வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளலாம்.

அமெரிக்காவை வெறுமனே விமர்சனம் செய்யும் பஸில், கோத்தா போன்றோர் அந்தநாட்டுக் குடியுரிமையை வைத்துக் கொண்டு போலியான நாட்டுப்பற்றை வெளிப்படுத்தி வருகின்றனர் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இவர்கள்தான் 2007ஆம் ஆண்டு அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டிருந்தனர். அமெரிக்கக் குடியரிமையை நீக்கிக்கொள்ள அவர்களுக்கு உண்மையில் விருப்பம் இல்லை என்பதுதான் உண்மை.

இதேவேளை, 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியாது போனால் கல்வியியலாளர்கள், கலைஞர்களை, சிவில் அமைப்புகள் உட்பட நாட்டின் பலதரப்பினரையும் இணைத்து பரந்துபட்ட கூட்டணியொன்றை அமைத்து அரசதலைவர் வேட்பாளர் ஒருவரை ஜே.வி.பி. களமிறக்கும். அவ்வாறான சூழலில் அரசதலைவர் தேர்தல் முத்தரப்புப் போட்டியாக மாறும் எந்தவொரு தரப்பாலும் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியாது போகும் - என்றார். (த)

### துப்பாக்கி முனையில் இருவர் நகைக் கடையில் கொள்ளை

கொழும்பு, ஏப். 19

அம்பலாங்கொட பேருந்து நிலையத்துக்கு அருகிலுள்ள தங்க ஆபரண கடை ஒன்றில் இருவர் துப்பாக்கி முனையில் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை 5.45 அளவில் இது இடம் பெற்றது.

முதலில் வந்த ஒருவர் தங்க மாலைகளைக் கொள்வனவு செய்வதுபோல் பார்வையிட்டுள்ளார். பின்னர் மற்றொருவர் முகத்தை மறைத்துக் கொண்டு துப்பாக்கியுடன் வந்து ஊழியர்களை அச்சுறுத்திவிட்டு தங்க மாலைகளை கொள்ளையடித்தார். இருவரும் தப்பிச் சென்றுள்ளனர். அவர்கள் உந்துருளியில் வந்திருந்தனர்.

6 தங்க மாலைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்றும் அவற்றின் பெறுமதி சுமார் 4 இலட்சம் ரூபா என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணை நடைபெறுகிறது என்று அம்பலாங்கொட பொலிஸார் தெரிவித்தனர். (த)

### "இயன்றளவுக்கு ஒதுங்கினேன்" பேருந்து சாரதி வாக்குமூலம்

கொழும்பு, ஏப். 19

மகியங்கனை விபத்தில் 10 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் தேனியார் பேருந்து சாரதி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

தேசிய பாடசாலைக்கு முன்னால் நேற்றுமுன்தினமிரவு இந்த விபத்து இடம்பெற்றிருந்தது.

திருகோணமலையிலிருந்து தியத்தலாவை நோக்கிப் பயணித்த தனியார் பேருந்தும் மட்டக்களப்பு நோக்கி பயணித்த ஹைஏஸ் வாகனமும் நேருக்கு நேர் மோதியதால் விபத்து நிகழ்ந்துள்ளது.

ஹைஏஸ்ஸில் பயணித்த ஒரே குடும்பத்தவர்கள் உட்பட 10 பேர் உயிரிழந்தனர். இருவர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். கொழும்பில் உறவினர்களைப் பார்க்க சென்று திரும்பிய குறித்த குடும்பத்தினர், நுவரெலியாவுக்குச் சுற்றுலாப் பயணம் மேற்கொண்டு அங்கிருந்து மட்டக்களப்புக்குச் செல்லும்போது விபத்துக்கு முகம் கொடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சாரதி வழங்கிய வாக்குமூலத்தில், "நான் அதிகாலை 1.15 அளவில் மகியங்கனை நகரிலுள்ள உணவகம் ஒன்றில் பேருந்தை நிறுத்தினேன். தேனீர் அருந்திய பின்னர் பயணத்தை ஆரம்பித்தேன். சில நிமிடங்களில் அதிக வேகத்துடன் பிழையான பகுதியால் ஹைஏஸ் வருவதனை அவதானித்து முடிந்தளவுக்கு எனது பேருந்தை வீதியோரத்துக்கு நகர்த்திக் கொண்டு சென்றேன். எனினும் அது வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் நெருங்கிவந்தது. நொடிப்பொழுதில் இடி விழுந்தது போன்று மோதிவிட்டது. நான் எவ்வளவு முயற்சித்தும் அதனைத் தடுக்க முடியவில்லை" என்று சாரதி வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். (த)

### போதைப் பொருள் வைத்திருந்தாரென கைதான சட்டத்தரணி பிணையில் விடுவிப்பு

கொழும்பு, ஏப். 19

ஐஸ் போதைப் பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைதான சட்டத்தரணி உட்பட இருவரும் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட அவர்கள் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அதன்போதே பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

தமக்குக் கிடைத்த இரகசிய தகவலொன்றுக்கு அமைய சுற்றிவளைப்பு நடத்தியதில் இருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர் என்று கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டத்தரணியிடம் 4 கிராம் 110 மில்லிகிராமும் மற்றையவரிடம் 430 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டிருந்தது. நீதிமன்றில் இருவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டனர். தலா ஒரு இலட்சம் ரூபா ஆள்ப்பிணைகளில் செல்ல நீதிமன்று அனுமதித்தது.

இதேவேளை, இந்த சுற்றிவளைப்பின் போது 4 போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்ட 33 வயதான ஒருவரை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (த)

### இதயத் துடிப்பு மானியுடன் சென்ற பெண் கைதானார்

*எல்பிட்டியவில் சம்பவம்*

கொழும்பு, ஏப். 19

இதயத்துடிப்பு மானி ஒன்றை கழுத்தில் மாட்டி கொண்டு மருத்துவர்போல் எல்பிட்டிய மருத்துவமனையில் நடமாடிய பெண் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு பிலான என்ற பகுதியைச் சேர்ந்த 24 வயதான பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று எல்பிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவர் மருத்துவராக வர வேண்டும் என்று அவரின் பாட்டிக்கு எதிர்பார்ப்பு இருந்துள்ளது எனவும், பாட்டியின் எதிர்பார்ப்பை அவரால் நிறைவேற்ற முடியாது போனதாகவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. உயர் தரத்தில் கலை பிரிவில் பயின்றுள்ள குறித்த பெண், பின்னர் மனநல பாடநெறியை படித்துள்ளார் என்றும் தெரியவருகிறது. இந்த நிலையில் இதயத்துடிப்பு மானியை பாட்டி, அந்தப் பெண்ணுக்கு வாங்கிக் கொடுத்துள்ளார். பாட்டியின் நண்பி ஒருவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில் பாட்டியை மகிழ்விக்க இதயத்துடிப்பு மானியுடன் அவர் மருத்துவமனைக்குச் சென்று சுற்றித்திரிந்துள்ளார். இதயத்துடிப்பு மானியுடன் பெண்ணொருவர் மருத்துவமனைக்குள் சுற்றித் திரிகின்றார் என்று மருத்துவமனைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அவர் கைது செய்யப்பட்டார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த)

### ஆதரவு நீடிக்கும் என ஐ.நா. செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 19

நல்லிணக்கம் மற்றும் நிலையான அபிவிருத்திச் செயற்பாடுகளில் இலங்கை மக்களுக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்குவோம் என்று ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்ரஸ் தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சர் மங்கள சமரவீரவுடன் அண்மையில் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார் என்று அமைச்சர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (த)

### பரீட்சை மோசடிகளைத் தடுக்க தயாரானது புதிய பொறிமுறை

*சிறப்பு அதிரடிப்படை, இராணுவ ஒத்துழைப்பில் செயற்படுத்தப்படும்*

கொழும்பு, ஏப். 19

க.பொ.த உயர்தரம் மற்றும் சாதாரண தரப் பரீட்சைகளின் போது மாணவர்கள் இலத்திரனியல் சாதனங்களைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் வகையில் புதிய பொறிமுறை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

பரீட்சைகள் திணைக்களம் இதைத் தெரிவித்தது.

இந்தப் பொறிமுறை சிறப்பு அதிரடிப் படை மற்றும் இராணுவத்தினரின் தொழிநுட்ப உதவியுடன் இந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதன்மூலம் க.பொ.த. உயர்தரம் மற்றும் சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவர்கள் அதிதிறன் அலைபேசி (கணிப்பான் உள்ளிட்ட இலத்திரனியல் சாதனங்களைப் பயன்படுத்தி விடையளிக்கும் பரீட்சை முறைகேடு தடுக்கப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. பரீட்சை மண்டபத்தில் இந்தப் பொறிமுறையை பொருத்திவிட்டால் மாணவர் ஒருவர் இலத்திரனியல் சாதனத்தைப் பயன்படுத்தும் போது இலகுவாகக் கண்டறிய முடியும் என்று பரீட்சைகள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (த)

## ஊடகவியலாளருக்கு எதிராக புலனாய்வாளர் முறைப்பாடு

முல்லைத்தீவு, ஏப். 19

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஊடகவியலாளர் ஒருவருக்கு எதிராக கடற்படைப் புலனாய்வாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். அதன்படி ஊடகவியலாளரை விசாரணைக்கு வருமாறு பொலிஸார் அழைத்துள்ளனர். இன்று அவர் மீதான விசாரணை இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இது ஊடகத் துறை மீதான அடக்குமுறை என்று சக ஊடகவியலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அங்கு கடந்த 7ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலத்திலிருந்து வட்டுவாகல் பாலம் வரை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தியிருந்தனர்.

இதன்போது செல்வபுரம் பேருந்து தரிப்பு நிலையத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களையும் ஊடகவியலாளர்களையும் இனம் தெரியாத ஒருவர் தனது கைபேசியில் ஒளிப்படம் எடுத்தார். அவரை ஆர்ப்பாட்டக் காரர்கள் அடையாளப்படுத்த முற்பட்டவேளை ஊடகவியலாளரான சண்முகம் தவசீலன் தலையிட்டு குறித்த நபர் யார் என்று வினவினார். அவர் பதில் சொல்ல மறுத்து குறித்த இடத்தை விட்டுத் தப்பியோடியபோது ஆர்ப்பாட்டக் காரர்களால் பிடிக்கப்பட்டு மீண்டும் விசாரித்தபோது தான் கடற்படை அதிகாரி என்று தெரிவித்திருந்தார்.

முல்லைத்தீவு பொலிஸாரைச் சம்பவ இடத்துக்கு வருமாறு அழைத்தபோது அவர்கள் வர தாமதமானது. அதனால் குறித்த நபரை வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள கோட்டபாய கடற்படை முகாமுக்கு அழைத்து சென்று அவர் கடற்படையைச் சேர்ந்தவரா என்று கேட்டபோது ஆம் என்று தெரிவித்தனர். அதனால் அவரை இந்த இடத்தில் விட்டுத் திரும்பியுள்ளார்.

இந்த நிலையிலேயே குறித்த கடற்படை அதிகாரி ஊடகவியலாளர்களைப் பழிவாங்கும் நோக்கில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் உண்மைக்குப் புறம்பான கருத்தைத் தெரிவித்து முறைப்பாடு செய்துள்ளார்.

முன்னர் குறித்த ஊடகவியலாளர் அளம்பில் பகுதியில் துயிலும் இல்ல காணி விவகாரம் தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற வேளை படையினரால் அச்சுறுத்தப்பட்டிருந்தார். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகத்தில் அவர் முறைப்பாடு செய்திருந்தார். குறித்த ஊடவியலாளரின் ஊடக பணிக்கு எந்த இடையூறும் வழங்க மாட்டோம் என்று படைத்தரப்பினர் எழுத்தில் உறுதிஅளித்திருந்தனர் என்று ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர். (த-ரி3)

# வெள்ளாங்குளத்தில் 275 ஏக்கர் காணி பிரதேச செயலகத்திடம்

## அனாதரவாக இருந்த 30 ஏக்கர் நிலம் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்துக்கு

யாழ்ப்பாணம், ஏப். 19

வெள்ளாங்குளத்தில் நீண்டகாலமாக படையினரின் பிடியில் இருந்து மக்கள் தொடர்ந்து போராடி மீட்டெடுத்த நிலத்தில் பிரதேச செயலரின் கட்டுப்பாட்டிலுள்ள 275 ஏக்கர் நிலத்தை விடுவிக்க பிரதேச செயலகத்தினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ல்ஸ் ஆகியோர் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததால் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் திரும்பிச் சென்றது.

அதனுடன் இணைந்துள்ள 30 ஏக்கர் நிலம் உரிமைகோரப்படாதுள்ளதால் அதனைக் கூட்டுத்தாபனத்தினர் பொறுப்பெடுத்து செய்கையில் ஈடுபடலாம் என்றும் கூறப்பட்டது.

மன்னார் மாவட்டம் வெள்ளாங்குளத்தில் நீண்டகாலமாக படையினர் வசமிருந்த வெள்ளாங்குளம் மரமுந்திரிகைப் பண்ணை தமக்குரியது என்றும் அதைத் தம்மிடமே மீள ஒப்படைக்க வேண்டும் என்றும் மாவட்டச் செயலகத்திடம் மர முந்திரிகைக் கூட்டுத்தாபனம் விண்ணப்பித்திருந்தது.

அங்குள்ள 500 ஏக்கர் நிலத்தில் பிரதேச செயலகத்தின் ஆளுகையின் உள்ள 275 ஏக்கர் நிலத்தையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு திணைக்களம் கடந்த வாரம் கொழும்பில் நடத்திய கலந்துரையாடலில் கோரிக்கை விடுத்திருந்தது. அந்த நிலம் மக்களுக்குப் பகிர்ந்து வழங்குவதற்கு ஏற்கனவே உள்வாங்கப்பட்ட நிலையில் குறித்த நிலத்தை திணைக்களத்துக்கு வழங்க முடியாது என்று மாவட்ட மேலதிக செயலர் தெரிவித்திருந்தார்.

குறித்த நிலம் தொடர்பில் இறுதி முடிவு எட்டும் வகையில் திணைக்களத்தின் பணிப்பாளர் வெள்ளாங்குளத்துக்கு நேற்று வந்திருந்தார். அவருடன் இராணுவ அதிகாரி, பிரதேச செயலர் ஆகியோரும் வந்திருந்தனர்.

இதன் அருகேயுள்ள 3 கிராம மக்களுமே இந்தப் பண்ணையை நம்பியே குடியமர்த்தப்பட்டனர். இந்த நிலத்தை மர முந்திரிகைக் கூட்டுத்தாபனத்துக்கு



வழங்க முடியாது. இங்கே காணப்படும் 500 ஏக்கரில் பிரதேச செயலரின் ஆளுகையில் 275 ஏக்கர் நிலம் உள்ளது. அதைத் தவிர்த்து எஞ்சிய 225 ஏக்கர் நிலத்தில் 195 ஏக்கர் நிலம் வனவளத் திணைக்களத்தின் கீழ் உள்ளது. எஞ்சிய 30 ஏக்கரை மரமுந்திரிகைக் கூட்டுத் தாபனம் பொறுப்பெடுத்து மர முந்திரிகைப் பயிரிடலாம் என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது. இந்த முடிவை அதிகாரிகள் ஏற்றுக்கொண்டனர்.

(த-105,56)

# ஆடு மேய்க்க சென்றவர் சடலமாக மீட்பு

முல்லைத்தீவு.ஏப்.19

முல்லைத்தீவு முள்ளியவளைப் பகுதியில் ஆடு மேய்க்கச் சென்ற குடும்பத் தலைவர் ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள் ளார்.

முள்ளியவளை 1 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 51 வயதையுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான சிவப்பிரகாசம் தயானந்தன் என்பவர் ஆடுகளை மேய்த்துக்கொண்டு ஆடுகளுக்கு இலைகளை வெட்டி கையில் எடுத்து வந்த வேளை மயக்கம் அடைந்து நிலத்தில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது. மாலை 5 மணிக்கே இவர் உயிரிழந்திருந்தமை அயலவர்களால் கண்டறியப்பட்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இவரது உயிரிழப்பு தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன், முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.லெனின்குமார் முன்னிலையில் உடல் இனம் காணப்பட்டு உடற்கூற்று பரிசோதனைக்காக வவுனியா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

உடற்கூற்று பரிசோதனையில் திடீர் மாரடைப்பால் மரணம் நிகழ்ந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சடலத்தை வைத்திருப்பதற்கான போதிய குளிர்சாதன வசதிகள் இல்லாத காரணத்தால் வெளிமாவட்டங்களுக்கு உடலங்கள் அனுப்பும் நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை காணப்படுகின்றமை மரணம் நிகழும் குடும்பத்தினரை சிரமத்துக்கு உள்ளாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க.ரி-3)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்.ஏப். 19

சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றத்தால் நடத்தப்பட்டு தமிழர் பாரம்பரிய விளையாட்டுநிகழ்வுகள் சங்கானை மாவடி ஞான வைரவர் ஆலய முன்றலில் இன்று பிற்பகல் 2 மணிக்கு மன்றத் தலைவர் சி.பிரகாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்,சிறப்பு விருந்தினராக வலி. மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந்தி ரன், மதிப்புறு விருந்தி னர்களாக வலி. மேற்கு பிரதேசசபை உறுப்பினர் த.சிவசுப்பிரமணியம் , திருமதி.சு. சந்திரகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

பாரம்பரிய விளையாட்டுக்களான தேங்காய்ப் போர், சங்கீதக் கதிரை, கயிறு இழுத்தல், தலையணைச் சண்டை,கிறீஸ்மரம் ஏறுதல் மெதுவான ஈருருளி ஓட்டம் போன்ற பல்வேறு விதமான விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

(ஜ-126)

# வளர்ப்பு நாயால் அடிதடி 4 பேருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஏப். 19

வளர்ப்பு நாயால் அயலவர்களுக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடு கைகலப்பில் முடிந்ததில் 3 பெண்கள் உட்பட நால்வர் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைகலப்பில் காயமடைந்த தாய், அவரது மகன், மகள் என மூவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நல்லூர், செம்மணி வீதி செட்டித்தெரு தோட்டம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

காயமைடைந்தவர்கள் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு அறிவித்தனர். காயமடைந்த அவர்களைப் பொலிஸார் மீட்டு, யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சேர்த்தனர்.

குடும்பத்தலைவரிடம் முறைப்பாட்டைப் பெற்றுக் கொண்டு தாக்குதல் நடத்தினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட சிறுமி உள்ளிட்ட பெண்கள் மூவர் மற்றும் ஆண் ஒருவரையும் கைது செய்துள்ளனர். அவர்கள் தாய், மகள் என இரு பெண்களும் மற்றும் கணவன் மனைவி உறவுமுறை கொண்டவர்கள் இருவரும் அடங்குகின்றனர்.

(த-106)

# தீப்பற்றி எரிந்தது சம்புப்புல் பரம்பல்



வடமராட்சி.ஏப், 19

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவிலின் தென் கிழக்கு கற்கோவளம் வங்கக்கடல் தீர்த்த சமுத்திரத்துக்கு செல்லும் வீதியின் வலது புறத்தில் அமைந்துள்ள சம்புப்புல் பரம்பல் தீப்பற்றி எரிந்தது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 10 மணியளவில் இடம்பெற்றது.

சுமார் 10 பரப்பு நிலத்தில் நெருக்கமாக வளர்ந்திருந்த சம்புப் புல் பரம்பல் தீப்பற்றி. எரிந்துள்ளது.இது தொடர்பில் வல்லிபுரம் கிராம அலுவலகர் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறிக்கு தகவல் வழங்கியதையடுத்து பருத்தித்துறை பிரதேச சபை தண்ணீர் பவுசர்கள் மூலம் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இத்தீயை அணைக்காது போனால் வல்லிபுரக் கோவிலுக்கு கிழக்கே உள்ள பனை வடலிக்கு தீ பரவி அருகில் உள்ள சவுக்கங்காட்டுக்கு பரவும் நிலை காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

(ஜ-173)

# சாவகச்சேரி மருத்துவமனையில் மீண்டும் கண் சிகிச்சைப் பிரிவு

சாவகச்சேரி, ஏப்.19

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் மீண்டும் கண் பரிசோதனை சிகிச்சைப் பிரிவு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மாதத்தின் ஒவ்வொரு முதலாவது மற்றும் மூன்றாவது வியாழக்கிழமைகளில் கண் பரிசோதனைகள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனையில் இதுவரை நிரந்தர கண் மருத்துவர் இல்லாததால் யாழ். போதனா மருத்துவமனை கண் சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றும் மருத்துவர்கள் வாரத்தில் ஒருநாள் கண் பரிசோதனைகளை மேற்கொண்டு வந்தனர்.

கடந்த ஒன்றரை வருடமாக இந்தக் கண் பரிசோதனையும் நிறுத்தப்பட்டது. இதனால் தென்மராட்சி பிரதேச மக்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு பரிசோதனைகளுக்காகச் சென்றுவந்தனர்.

தற்போது மருத்துவமனை அத்தியட்சராகக் கடமையாற்றும் மருத்துவர் திருமதி டயாழினி மகேந்திரம் மேற்கொண்ட முயற்சியின் பயனாக கோப்பாய் மருத்துவமனை கண் மருத்துவரும் மந்திகை ஆதார மருத்துவமனையில் கடமையாற்றம் கண் பரிசோதனையாளரும் மாதத்தின் இரு நாள்கள் பரிசோதனைகளைநடத்த முன்வந்துள்ளதையடுத்து நேற்று கண் பரிசோதனைகள் ஆரம்பமாகியுள்ளன.

நீரிழிவு நோயாளர்கள் கண் பாதிப்புக்கு உள்ளாவது அதிகரித்து வருவதால் மருத்துவமனையில் நீரிழிவு சிகிச்சை நடைபெறும் தினமாக வியாழக் கிழமைகளில் கண் பரிசோதனைகள் நடத்த ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். இதனால் கண் பாதிப்புக்கு உள்ளாகும் நீரிழிவு நோயாளர்கள் இலகுவாக பரிசோதனைகளை மேற்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் பாடசாலை மாணவர்கள் அரச பணியாளர்கள் உட்பட பொதுமக்கள் கண் பரிசோதனைகளை மேற்கொள்ளவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

முன்னர் கண் மருத்துவர் ம.சரவணமுத்து சேவையில் இருந்தபோதும் சேவையிலிருந்து இளைப்பாறிய பின்னரும் பிரதி பதன்கிழமைகளில் கண் பரிசோதனைகளை மருத்துவமனையில்நடத்தினார். அவ்வேளையில் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் 50க்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்று வந்துள்ளனர். தற்போது மீண்டும் கண் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குச் செல்லும் தென்மராட்சி பிரதேச மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளமைகுறிப்பிடத்தக்கது

(ஜ-9)

# அடைக்கலமாதா ஆலய பெரிய வெள்ளி நிகழ்வு

வவுனியா.ஏப்.19

வவுனியா ஓமந்தை பறண்நட்டகல் புனித அடைக்கல மாதாகோவிலின் பெரியவெள்ளி நிகழ்வு இன்றையதினம் வெகுசிறப்புற நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு பறண்நட்டகல்வாரியிலிருந்து சிலுவை பாதை புறப்பட்டு புனித அடைக்கலமாதா கோவிலில் ஒப்புக்கொடுக்கப்படும்.

(க-110)

# கல்வித்துறை பற்றி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் கல்வித்துறை சம்பந்தமான கலந்துரையாடல்களை கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் நடத்தவுள்ளார்.

எதிர்வரும் 22 ஆம் திகதி தீவகம், யாழ்ப்பாணம், வலிகாமம் ஆகிய கல்வி வலயங்களிலும் 23 ஆம் திகதி தென்மராட்சி, வடமராட்சி ஆகிய கல்வி வலயங்களிலும் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் அந்தந்த கல்வி வலயங்களைச் சேர்ந்த வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறும் அறிவித்துள்ளார்.

(ஜ-9)

# வேலணையில் கழிவகற்றல் மிகவும் மோசமாக உள்ளது!

## சபையில் உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 19

**வே**லணைப் பிரதேச சபை எல்லைக்குள் திண்மக் கழிவகற்றல் முறைமை மோசமாகவுள்ளது என்று உறுப்பினர்கள் கருத்து முன்வைத்தனர். அதைச் சீர் செய்கின்றேன் என்று தவிசாளர் சபையில் தெரிவித்தார்.

சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் நமசிவாய கருணாகர குருமூர்த்தி தலைமையில் நேற்று நடைபெற்றது. திண்மக் கழிவுகள் அகற்றுதல் மற்றும் தரம் பிரித்தல் தொடர்பான தீர்மானத்தை ஈபிடிபி உறுப்பினர் திருமதி அனுசியா சபையில் முன்வைத்தார்.

உறுப்பினர்கள் தெரிவித்ததாவது:

சபைக்கு உட்பட்ட பகுதிகளில் திண்மக் கழிவகற்றல் சரியாக நடைபெறுவதில்லை. அவை கொட்டப்படும் இடங்களும் பாதுகாப்பானதாக இல்லை. குப்பைகளை எடுப்பதற்கு குறித்த நாளில் வருவதாக அறிவித்த போதும் அந்த இடங்களுக்கும் குப்பை அள்ளும் வண்டிகள் செல்வதில்லை. குப்பை போடும் வாளிகள் உடைந்த நிலையில் காணப்படுகிறன. முக்கியமான இடங்களில் குப்பை வாளிகளே இல்லை. பொது இடங்களில் குப்பைகள் குவிக்கப்பட்டு பல நாள்களின் பின்னரே அகற்றப்படுகின்றன. குப்பைகள் தரம் பிரிப்பது அல்லது உக்கும் குப்பைகள், உக்காத குப்பைகளை அகற்றுவது தொடர்பில் பொது மக்களுக்கும் போதிய விழுப்புணர்வு வழங்கப்படவில்லை. முதலில் சபையால் திண்ம கழிவுகள் முறைப்படி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். போதுமான அளவு குப்பை வாளிகள் வைக்கப்படல் வேண்டும் என்றனர்.

போதியளவு ஆளணி இல்லாத நிலையில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுகிறன. வெளிவாரியாக ஆள்களை நியமித்து திண்மக் கழிவுகளை சீராக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தவிசாளர் தெரிவித்தார்.

**மாகாண சபையை முறியடிக்கும்**

வடக்கு மாகாண சபையின் ஆயுட்காலம் வரை சுமார் நாநூறுக்கும் அதிகமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால் அவை பயனற்றவையாகக் கிடப்பில் உள்ளன. அதிகாரங்களுக்கு உட்பட்ட, தேவையான தீர்மானம் என்றால் அவை இப்போது செயல் வடிவம் பெற்றிருக்கும். அதிக எண்ணிக்கையிலான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டனவே தவிர எந்தப் பலனும் இல்லை. அதே போன்று எமது பிரதேச சபையும் மாகாண சபையின் தீர்மானங்களை விட அதிகமான எண்ணிக்கையில் வந்து சாதனை புரியும். சபையில் வெறும் தீர்மானம் மட்டும் நிறைவேற்றப்படுகிறேதே தவிர செயல் வடிவத்தில் ஒன்றும் இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் எஸ்.பிரகலாதன் தெரிவித்தார்.

**என்னதான் நடக்கிறது?**

இந்தப் பகுதி வளங்கள் சுரண்டப்படுவதை தடுக்க வெளியிலிருந்து எவரும் சபை எல்லைக்குள் பழைய இரும்புகள் சேகரிக்க கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றியும், சபையின் உப அலுவலகத்தில் உள்ள பழைய பொருள்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. சபைக்குரிய சொத்தை கேள்வி கோரல் இல்லாமல் எவ்வாறு விற்கலாம்?

பழைய இரும்பு வியாபாரத்துக்குத் தடை என்று சொல்லி விட்டு அந்த வியாபாரிகளுக்கே எவ்வாறு சபையின் பொருள்களை விற்கலாம்? நாம் இங்கு நிறைவேற்றும் தீர்மானங்களை உப அலுவலகத்துக்கு அனுப்பி வைத்தால் தான் சபையின் நடைமுறை அவர்களுக்குத் தெரியும். இங்கு சபை நடக்கிறதா அல்லது என்ன நடக்கிறது? என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் க.நாவலன் கேள்வி எழுப்பினார். உரிய நடவடிக்கை எடுப்பேன் என்று தவிசாளர் தெரிவித்தார்.

**பொது அமைப்புகளை உள்வாங்குங்கள்**

சபையின் எல்லைக்குள் பல்வேறு அபிவிருத்தி வேலைகளைச் செய்ய வேண்டிய தேவை உள்ளது. ஆனால் நிதி இல்லை. ஆளணி இல்லை என்று காரணம்கூறி அவை தட்டிவிடப்படுகிறது. பணம் படைத்தவர்கள் பொது அமைப்புகளுக்கு ஊடாக தீவகத்தை அபிவிருத்தி செய்வதற்குத் தயாராக உள்ளனர். ஆனால் அவர்களைச் சபை கண்டு கொள்வதில்லை. எத்தனையோ சன சமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புகள் செயற்படாமல் உள்ளன. அவைகளை ஊக்குவிப்பதன் மூலம் பல்வேறு செயற்பாடுகளை இங்கு செய்ய முடியும் என்று சபையில் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

**வாகனங்கள்**

சபையில் காணப்படும் 100க்கும் அதிகமான வாகனங்கள் பதிவற்று எங்கே சென்றன என்றுகூடத் தெரியவில்லை. ஆகவே உறுப்பினர்கள் அதனைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற வசன நடையில் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் கூறினார் என்று பத்திரிகையில் செய்தி வந்துள்ளது. ஆகவே எத்தனை வாகனங்கள் இவ்வாறு உள்ளன என்று உறுப்பினர்கள் சபையில் கேள்வி எழுப்பினர். 52 வாகனங்களே உள்ளன என்று தவிசாளர் பதிலளித்து அதற்கான பதிவேட்டு பிரதிகளையும் சபை உறுப்பினர்களுக்கு வழங்கினார். ஆகவே உண்மைக்குப் புறம்பாக இவ்வாறு செய்தி வந்துள்ளது தொடர்பில் மறுப்பறிக்கை அனுப்புவதாகச் சபையில் தீர்மானிக்கப்பட்டது.

(து-7)

---

# வடக்கு மாகாண அரச இயந்திரத்தில் புதியவர்களை நியமித்தால்தான் சிறப்பு

## மாகாண முன்னாள் உறுப்பினர்களின் அமையம் வடக்கு மாகாண ஆளுநருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஏப். 19

வடக்கு மாகாணத்தில் தேசிய ஆளணி சார்ந்த மிக நீண்ட காலம் பணியாற்றுபவர்களை இடமாற்றம் செய்து புதியவர்களை வடக்கு மாகாணத்துக்குக் கொண்டு வாருங்கள். அவ்வாறு செய்வதன் மூலமாக பல்வேறு துறைகளிலும் புதிய அணுகு முறைகளையும், சிந்தனைகளையும் உருவாக்க முடியும் என்பதால் இதற்கான காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களின் அமையம் தெரிவித்து வடக்கு மாகாண ஆளுநருக்குக் கடிதம் அனுப்பியுள்ளது. அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களின் அமையத்தின் கூட்டம் யாழ்ப்பாணத்தில் கடந்த 11ஆம் திகதி நடைபெற்றது.

மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளைக் கொண்ட அடுத்துவரும் வடக்கு மாகாண சபை எத்தகைய சவால்களை எதிர்நோக்கும் என்பது பற்றி கூட்டத்தில் ஆராயப்பட்டது. முதலாவது வடக்கு மாகாண சபை எதிர்நோக்கிய பிரச்சினைகளை அடுத்துவரும் சபையும் எதிர்கொள்ளாதிருக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படல் வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

எம் எல்லோரினது பட்டறிவும் வடக்கு மாகாண சபையின் உயர் நிர்வாகக் கட்டமைப்பில் உள்ள சிலர் தெரிவு செய்யப்பட்ட சபை பதவிக்கு வர முன்னரும் அதன் பதவிக் காலத்திலும் அதற்குப் பின்னரும் மாகாண அமைச்சுக்களின் செயலர்களாகவும் அதற்கு சமமான கட்டமைப்புக்களின் செயலர்களாகவும் தொடர்ந்தும் பணியாற்றுவது எதிர்மறையான விளைவுகளையே தரும். இவ்வாறான நிலை கொழும்பு அரசின் அமைச்சுக்களில் இடம்பெறுவதில்லை.

நாங்கள் இனங்கண்ட குறைபாடுகளைப் பட்டியலிட நாம் விரும்பவில்லை. ஆனால், வடக்கு மாகாணத்தில் தேசிய ஆளணி சார்ந்த மிக நீண்ட காலம் பணியாற்றுபவர்களை இடமாற்றம் செய்து புதியவர்களை வடக்கு மாகாணத்துக்குக் கொண்டு வாருங்கள். அவ்வாறு செய்வதன் மூலமாக பல்வேறு துறைகளிலும் புதிய அணுகு முறைகளையும், சிந்தனைகளையும் உருவாக்க முடியும். அதனால் அதற்கான காத்திரமான நடவடிக்கைகளை எடுங்கள்.

கொழும்பு அரசு வடக்கு மாகாண சபைக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்ற எமது பக்கக் குற்றச்சாட்டுக்கு இதுவும் ஒரு முக்கிய காரணி என்பதையும் பதிவு செய்கிறோம் என்று ஆளுநருக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த)

---

# மருத்துவர், விசாரணை அதிகாரி இன்றி மக்கள் பெரும் சிரமம்

## விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றனர்

யாழ்ப்பாணம், ஏப். 19

முல்லை மேற்கில் திடீர் இறப்புவிசாரணை அதிகாரியோ சட்ட மருத்துவ அதிகாரியோ இன்மையால் முல்லை மேற்கில் இடம்பெறும் இறப்புக்கு உடலைக் காவிச் செல்வதற்கு மாத்திரம் 25 ஆயிரம் ரூபா செலவு ஏற்படுகிறது. இந்தச் சிக்கல்களை நிவர்த்தி செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் சுமார் 20 ஆயிரம் மக்கள் வாழ்கின்றனர். மல்லாவி, நட்டாங்கண்டல், ஐயங்கன்குளம் போன்ற பகுதிகளில் இறப்பு இடம்பெற்றால் ஒரே மாவட்டம் என்ற ரீதியில் மாஞ்சோலை மருத்துவமனைக்கு அதாவது 60 கிலோமீற்றர் தூரத்துக்குச் சடலத்தை எடுத்துச் செல்ல வேண்டும். உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலத்தை மாஞ்சோலை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லவும் இறப்பு வீட்டாரே வாகனம் ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனைய மாவட்டங்களில் இப்படியில்லை.

இதனால் சடலத்தை மாஞ்சோலைக்குக் கொண்டு சென்று விசாரணைகளின் பின்னர் வீட்டுக்கு எடுத்து வருவதற்கு 20 ஆயிரம் ரூபா செலவு ஏற்படுகின்றது.

பணச்செலவு இவ்வாறான நிலமை என்றால் ஓர் இயற்கை மரணம் அல்லது உயிர்மாய்த்த ஒருவரின் நிலமை அதனைவிடவும் மோசமானது.

மாலை நேரம் ஒருவர் கிணற்றில் வீழ்ந்தாலோ அல்லது தூக்கில் தொங்கினாலோ பொலிஸார் கிராம அலுவலர் என பணிகளை முடித்து திடீர் இறப்பு விசாரணை அதிகாரிக்குத் தகவல் வழங்க நேரகாலதாமதமாகிவிடும்.

மாலை 5 மணிக்கு பின்னர் தகவல் வழங்கினால் முள்ளியவளையில் உள்ள இறப்பு விசாரணை அதிகாரி, "நான் இங்கு வந்து பணி முடித்து வீடு திரும்பகரிப்பட்ட முறிப்பு பகுதியில் யானை நிற்கும். காலையில் வருகின்றேன்" என்பார். இதனால் மறுநாளே இறப்பு விசாரணை அதிகாரி வரும் நிலை காணப்படுகிறது. இறப்பில் சந்தேகம் எனில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மாஞ்சோலைக்குக் கொண்டு செனல்லவேண்டும்.

மல்லாவி மருத்துவமனைக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரியும் சட்ட மருத்துவ அதிகாரியும் நியமிக்கப்பட்டால்தான் மக்கள் பயனடையமுடியும்.

இவற்றுக்கு நீதி அமைச்சும் மாகாண சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படு கிறது.

"மல்லாவி மருத்துவமனைக்கு சட்ட மருத்துவ அதிகாரியை நியமிக்க நீண்டகாலமாக முயற்சிக்கின்றோம். அதற்கான அனுமதி இதுவரை கிடைக்க வில்லை. மீண்டும் அதற்கான முயற்சிகள் இடம்பெறும்" என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

(த-105)

# நாய் பிடிக்க தயாராகிறது யாழ்ப்பாண மாநகர சபை

## வீதியில் நாய்களை விடவேண்டாம் என்று முதல்வர் கண்டிப்பான உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப்.19

யாழ்ப்பாணம், மாநகர எல்லைக்குள் வசிக்கும் மக்கள் தமது வீடுகளில் வளர்க்கின்ற நாய்களை பராமரிக்கவேண்டும். மாறாக வீதிகளில் திரிய விட்டால் எதிர்வரும் 30ஆம் திகதிக்குப் பின்னர் மாநகரசபை பிடிக்கும் என மாநகர முதல்வர் இ.ஆனோல்ட் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குள் வசிக்கும் மக்கள் தமது வீடுகளில் வளர்க்கின்ற நாய்களை தமது கட்டுப்பாட்டுக்குள் வளர்ப்பதுடன், வீடுகளில் கட்டிவைத்து வளர்க்குமாறும் இதனை முறையாக ஒழுங்குபடுத்துவதற்கு எதிர்வரும் 30ஆம் திகதி வரை மாநகர மக்களுக்கு கால அவகாசம் வழங்கப்படுகின்றது - என்றுள்ளது. (ம-21)

## களத்தில்..

எனினும் நேற்று நடைபெற்ற இருவேறு நிகழ்வுகளின் போது அமைச்சர்களான சஜித்தும், ரவியும் பரஸ்பர கருத்துக்களை பகிரங்கமாக வெளியிட்டிருந்தனர்.

அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவிக்கையில், எனக்கு அரசியல்வாரிசு கூட கிடையாது. நான் பரம்பரைக்காக அரசியலையோ அல்லது தலைமைத்துவத்தினையோ எதிர்பார்க்கவில்லை. நாட்டின் எதிர்காலம் கருதி இன, மத, மொழி, பேதம் கடந்து மக்கள் சேவை ஆற்றுவதற்கு தயாராகிவிட்டேன். இதனைக் கண்டு சிலர் அச்சம் கொண்டுள்ளனர். இதனால் சஜித் பிரேமதாச கட்சிக்குள் சூழ்ச்சி செய்கின்றார் என்று பரப்புரை செய்கின்றார்கள். இவ்வாறான கட்டுக்கதைகளைக் கேட்டு பொதுமக்களாகிய நீங்கள் ஏமாற்றம் அடைந்துவிடாதீர்கள். நான் ஒருபோதும் எனது கட்சியையோ அல்லது எனது கட்சியின் தலைவரையோ காட்டிக்கொடுக்கவில்லை. 71 தடவைகள் தலைமை அமைச்சர் பதவி காலடியைத் தேடிவந்தபோதுகூட அதுவேண்டாம் என்று நிராகரித்த நபர் தான் சஜித் பிரேமதாச என்பதை நினைவு படுத்த விரும்புகின்றேன். மேலும் தலைமை அமைச்சர் பதவியை விரும்பாததால் அதற்கும் மேலான பதவியை எதிர்பார்கின்றேன் என்று அர்த்தம் கொண்டுவிடமுடியாது. நான் அவ்வாறான உயரிய பதவிகளுக்குச் செல்ல விரும்புகின்றேன். அதனை மக்களே தீர்மானிக்க வேண்டும். அவர்களின் ஆணையுடன் தான் அந்த பதவிகளை வகிக்க விரும்புகின்றேன். குறுக்கு வழியில் சூழ்ச்சி செய்து அந்த பதவிகளை பெறுவதற்கு நான் ஒருபோதும் விரும்பவில்லை. சூழ்ச்சி செய்வதாக கட்டுக்கதைகளை அவிழ்த்துவிடுபவர்கள் நீண்ட ஆயுளுடன் நிறைவாக வாழ வேண்டும் என்று வாழ்த்துகின்றேன் - என்றார்.

இதேவேளை, பிறிதொரு வைபவத்தின் பின்னர் அமைச்சர் ரவி கருணாநாயக்க கருத்து வெளியிடுகையில்,

ந}ங்கள் அரசியல் அறிவைக் கொண்டிருக்கின்றோம். ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிப்பாதையில் கொண்டுசெல்வதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிக்கின்றோம். அரசதலைவர் வேட்பாளரையும் மக்கள் விரும்புபவரையே நிறுத்துவோம். வேட்பாளராக வருவதற்கு ஆசைப்படுபவர்கள் தமது தராதரம் தொடர்பில் சிந்திக்க வேண்டும். பொருத்தமானவர்களா என்பதை மறுபரிசீலனை செய்யவேண்டும். பெயர் இருக்கின்றது என்பதற்காக எதனையும் சாதித்து விடமுடியாது. உரிய வேட்பாளரை உரிய நேரத்தில் அறிவிப்போம் - என்றார்.

இதேவேளை, அமைச்சர் நவீன் திசாநாயக்க குறிப்பிடுகையில், அமைச்சர்களான ரவி கருணாநாயக்கவும், சஜித் பிரேமதாசவும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள். அவர்களுக்கு இடையில் சிறு பிரச்சினை காணப்படுகின்றது என்றால், அதனை பேசித்தீர்த்துக்கொள்ள முடியும். பொதுவெளியில் கருத்துக்களை தவிர்க்குமாறு நேற்று (நேற்று முன்தினம்) தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க தொலைபேசி ஊடாக அறிவுரை வழங்கியுள்ளார். கட்சிக்குள் நாம் இந்த விடயங்களை பேசி முற்றுப்புள்ளி வைப்போம் - என்றார். (ம-22,61)

## தமிழ்...

யத்தினை காலம் எங்களுக்கு ஏற்படுத்தியிருக்கின்றது. ஆகையினாலே மீதி இருக்கின்ற நாங்கள் வளர்ந்துவரும் இந்த இளம் சமுதாயத்திற்கு தலைமை தாங்குகின்ற இரட்டிப்பான பொறுப்பை எங்கள் தோளிலே சுமந்திருக்கின்றோம். வெவ்வேறு பகுதிகளில் கடமையாற்றிக் கொண்டிருந்தாலும் தமிழரை பொறுத்தவரையில் இருப்பது ஒரு தேசம், இருப்பது ஒரு எதிர்காலம் கட்டவேண்டியது ஒரு சமுதாயம். ஆகையினாலே கட்டியமைக்கவேண்டிய அந்த சமுதாயத்துக்கான குறைந்தது குறிப்பிட்ட காலத்திற்காவது உங்கள் வேற்றுமைகளைகளைந்து விட்டு எங்கள் மக்களுக்காக பணிபுரியுங்கள் என்று தாழ்மையுடன் நான் கேட்டுக்கொள்வதுடன் அதுவே இந்த தமிழ் சிங்கள சித்திரை புத்தாண்டில் நாங்கள் எடுத்துக் கொள்ளக்கூடிய திடமான தீர்மானம் ஆகும்.

எமக்குச் செல்ல வேண்டிய தூரம் எவ்வளவோ இருக்கின்றது. செய்ய வேண்டிய காரியங்கள் எவ்வளவோ இருக்கின்றன. ஆகையினாலே பேச்சுக்களையும் சந்திப்புக்களையும் குறைத்து அதிகளவில் வேலை செய்யவேண்டிய ஒரு கட்டாயம் எங்கள் மத்தியில் உள்ளது. இந்த புத்தாண்டிலே வடமாகாணம் ஒரு முன்மாதிரியான மாகாணமாக இருக்கவேண்டும் என்பதே எனது நோக்கம். வடமாகாணத்தின் 28 பில்லியன் ரூபா வரவு - செலவுத் திட்டத்தில் நான் நேற்று கையொப்பமிட்டுள்ளதுடன் இந்த 28 பில்லியனில் நாங்கள் எவ்வளவு வடமாகாணத்துக்குள் உழைத்துக் கொள்ளப் போகின்றோம் என்பது கேள்விக்குறியாகவும் கவலைக்குரியதாகவும் உள்ளது - என்றார். (ம-246)

## விண்ணில்...

வியாழக்கிழமை விண்ணுக்கு வெற்றிகரமாக ஏவப்பட்டதாக நாசா நிறுவனம் தெரிவிக்கின்றது.

இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை 2.16 மணி அளவில் இந்த செயற்கைக்கோள் அமெரிக்காவிலிருந்து விண்ணுக்கு ஏவப்பட்டுள்ளது. தரிந்து தயாரத்ன மற்றும் துரனி ஷாமிகா ஆகிய இரண்டு இலங்கையர்களால் தயாரிக்கப்பட்ட 'இராவணா 1' செய்மதி கடந்த பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இவ்வாறு கையளிக்கப்பட்ட 'ராணவா 1' செய்மதியுடனான ரொக்கெட், அமெரிக்காவின் வர்ஜினியாவிலிருந்து நேற்று அதிகாலை, பன்னாட்டு விண்வெளி ஆய்வு மத்திய நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இலங்கை, ஜப்பான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள் இணைந்து மூன்று சிறியரக செய்மதிகளை நேற்று விண்ணுக்கு ஏவின. பன்னாட்டு விண்வெளி மத்திய நிலையத்திலிருந்து 400 கிலோமீற்றர் தூரத்தில் 'ராவணா 1' செயற்கைக்கோளை நிலைநிறுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த செயற்கைக்கோளின் ஆயுட்காலம் ஒன்றரை வருடம் என அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், ஐந்து வருடங்கள் அதன் பயன்பாட்டை பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

## மக்களின்...

கம் தம்மிடம் கிடையாது என அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

வலஸ்முல்லையில் புதிய பேருந்து நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தலைமை அமைச்சர் பதவியை ஏற்குமாறு 71 தடவைகள் என்னிடம் கோரிக்கைகள் விடப்பட்டன. எனினும் அவற்றை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. மக்களின் விருப்பத்து டன் நேர்வழியில்தான் பதவிகளைப் பொறுப்பேற்பேன். மாறாக குறுக்கு வழியில் இல்லை - என்றார். (ம)

## பேரணிக்கு...

செய்யப்பட்டுள்ளது. அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் காஞ்சன விஜயசேகர இந்தத் தகவலைத் தெரிவித்தார். மே மாதம் முதலாம் திகதி தொழிலாளர்கள் தினம் கடைப்பிடிக்கப்படவுள்ளது. இதனை முன்னிட்டு பொதுமக்கள் முன்னணியானது திருகோணமாலையிலிருந்து கொழும்பு கம்பல்பிட்டிய வரையில் பெரிய பேரணியொன்றை ஏற்பாடு செய்துள்ளது. இந்தப் பேரணியானது ஏப்ரல் 26ஆம் திகதி ஆரம்பமாகி மே முதலாம் திகதி கொழும்பில் நிறைவடைய வுள்ளது. அரசின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அரசை வீட்டுக்கு அனுப்பி புதிய அரசிடம் ஆட்சியை ஒப்படைக்குமாறு வலியுறுத்தியும் இந்த தொடர்பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டன - என்றார். (ம-61)

## காணிகளில்...

மக்களுடைய காணிகளில் நான்கு ஆண்டுகளின் பின் கொட்டில்கள் அமைத்து குடியமர்ந்த காணி உரிமையாளர்களை மீண்டும் அங்கிருந்து வெளியேற்றியுள்ளது நீதி.

தமது சொந்தக் காணிகளை விடுவிக்குமாறு நீதிக்காகப் போராடி இறுதியில் தாமாகவே புகுந்து கொட்டில்கள் அமைத்து குடியமர்ந்ததால் அந்த மக்கள் மீண்டும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மக்களுடையது தான் அந்தக் காணி என்பதை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூறியது. மக்களுக்கு காணிகளை வழங்கிய காணி சீர்திருத்த ஆணைக்குழு கூறியது. விசாரணைகளை நடத்தி மனித உரிமைகள் ஆணைக்குழு கூறியது, காணிகள் தங்களுடையன என்பதற்கு வலுவான ஆதாரங்கள் மக்களிடம் உள்ளன. எனினும் மக்கள் அந்தக் காணிகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தமது காணிகளுக்குள் கடந்த 16ஆம் திகதி உள்நுழைந்த மக்கள் தற்காலிகக் கொட்டில்களை அமைத்தனர். எனினும் தென்னை உற்பத்தி சபையினர் அரச காணிக்குள் அத்துமீறி மக்கள் புகுந்துள்ளனர் என்று பளை பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்தனர். பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் குழு அங்கு வந்து மக்களுடன் கலந்துரையாடியது. நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனுடனும் அந்தக் குழு கலந்துரையாடியது. 'காணிகளை விட்டு வெளியேற மாட்டோம். இது எங்களுடைய காணி' என்று மக்கள் உறுதியுடன் கூறினர்.

காணி தொடர்பில் உரிய அதிகாரிகளை அழைத்து ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளுமாறு பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். பளை பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச செயலகத்தில் கூட்டம் இடம்பெற்றது. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் யாழ்ப்பாண மாவட்ட உதவிப் பணிப்பாளர், மனித உரிமைகள் ஆணைக்கழுவின் யாழ் பிராந்திய இணைப்பாளர் தென்னை உற்பத்தி சபையினர், மக்கள், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் ஆகியோர் அந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். அந்தக் கலந்துரையாடலிலும், காணி மக்களுக்கு உரித்துடையது என்ற கருத்தே நிலவியது. எனினும் தென்னைப் பயிர்ச் செய்கை சபையினர் பளை பொலிஸ் நிலையத்தில் அத்துமீறி உள்நுழைந் துள்ளதாக பதிவு செய்த முறைப்பாட்டுக்கு இணங்க பொலிஸார் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். நீதிமன்று வரும் 30ஆம் திகதி வரைக்கும் நடைமுறையில் இருக்கும் தடை உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது. காணிகளில் தங்கியிருக்கும் மக்களை வெளியேறுமாறு கட்டளையிட்டது. காணிக ளுக்கு உரிமை கோருவோர் உரிய ஆவணங்க ளுடன் 30ஆம் திகதி மன்றில் முன்னிலை யாகுமாறு தெரிவித்தது. (ம-21,6)

## மன். ..

உள்ள வீடு ஒன்றின் மீது நேற்றுமுன்தினம் மாலை இடி மின்னல் தாக்கியதில் குறித்த வீடு முற்றாக சேதமடைந்தது. எனினும் சம்பவம் இடம்பெற்றபோது வீட்டில் எவரும் இல்லாததால் உயிர்ச் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை. வீட்டில் உள்ள தென்னை மரங்களை தாக்கிய இடி மின்னல், வீட்டையும் தாக்கியுள்ளது. இதன்போது வீடு முழுமையாக எரிந்துள்ளதோடு, வீட்டினுள் காணப்பட்ட பல இலட்சம் ரூபா பெறுமதியான மின் சாதனப் பொருள்கள், உடைகள் உட்பட இதரப்பொருள்கள் அனைத்தும் எரிந்து நாசமாகின என்று வீட்டின் உரிமையாளர்கள் தெரிவித்தனர். (ம-56)

## வேறு...

தேர்தலில் வெற்றி பெறுவோம். வடக்கு - கிழக்கு மக்களின் ஆதரவுடன் பெரும்பான்மை மக்களின் வாக்குகளையும் பெற்று உறுதியான வெற்றியை எம்மால் பெற முடியும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சிக்குள் பிரதான நபர்கள் இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் மற்றும் அரச தலைவரின் நகர்வுகள் குறித்தும் ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் நகர்வுகள் குறித்தும் வினவிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இப்போது கட்சிக்குள் குழப்பங்கள் நிலவுவதாக கூறும் கதைகள் அனைத்துமே பொய்யானவை. கட்சிக்குள் பல கருத்துக்கள் உள்ளன. ஐக்கிய தேசிய கட்சியாக சிலர் தமது நிலைப்பாட்டினை கூறுகின்றனர்.

ஐக்கிய தேசிய முன்னணியாக நாம் எமது நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம். சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகள் இடையில் பல கருத்துக்கள் நிலவுகின்றன. ஆகவே இவை அனைத்தையும் தாண்டி பொதுவான ஒரு நிலைப்பாட்டினை எம்மால் எட்ட முடியும். எவ்வாறு இருப்பினும் இம்முறை இடம்பெறும் அரசதலைவர் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றிபெறும். இதில் சிறிய மற்றும் சிறுபான்மை கட்சிகளின் ஆதரவில், வடக்கு கிழக்கு மக்களின் ஆதரவில் எம்மால் ஆட்சியை அமைக்க முடியும். சகல மக்களுக்குமான பொதுவான வேலைத்திட்டம் ஒன்றினை நாம் முன்னெடுத்து வருகின்றோம். அதனை தொடர்ந்தும் முன்னெடுத்து ஆரோக்கியமான திசைக்கு நாட்டைக்குக் கொண்டு செல்வோம் - என்றார். (ம-31)

## 10 பேரின்..

யைகள் நேற்று மாலை நடைபெற்றன.

மட்டக்களப்பைச் சேர்ந்த இவர்கள், ஹைஏஸ் வாகனத்தில் சுற்றுலா சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த போதே விபத்தில்சிக்கி பரிதாபகரமாக உயிரிழந்தனர். அவர்களது வாகனமும் தனியார் பேருந்தும் மோதி விபத்து இடம்பெற்றது.

மகியங்கனை மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த இவர்களின் சடலங்கள் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர்நேற்று முன்தினம் மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. நேற்று. அதிகாலை மட்டக்களப்புக்குக்கொண்டுசெல்லப்பட்டன. 10 பேரின் சடலங்களும் அவர்களின் வீடுகளில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

இறுதிக்கிரியைகளுக்காக சடலங்கள் மட்டக்களப்பு மேயர் மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தன.

இலங்கையை உலுக்கியுள்ள இந்தக் கோர விபத்துச் சம்பவம் மட்டக்களப்பில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது: உயிரிழந்தவர்களுக்குப் பெருமளவானோர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். உறவினர்கள் கண்ணீர்விட்டு அஞ்சலி செலுத்தும்காட்சி அனைவரினதும் மனதையும் உருகச் செய்துள்ளது.

இவர்களுடன் வாகனத்தில் பயணித்த சிறுவர்களான இருவரும் படுகாயமடைந்து மகியங்கனை மருத்துவமனையில்சேர்க்கப்பட்டு பட்பட்பட்மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

உயிரிழந்த குறித்த குடும்பத்தினர் இறுதியாக எடுத்துக்கொண்டனர் என்று கூறப்படும் தம்படம் வலைத் தளங்களில் பரவுகிறது. (த)

## 18...

திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. இலங்கையைச் சூழவுள்ள வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தளம்பல் நிலை காரணமாக தற்போது காணப்படும் மழையுடனான வானிலை, பலத்த மின்னல் தாக்கம் இன்றும் தொடரக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில், மன்னார், புத்தளம், அநுராதபுரம், பொலனறுவை, குருணாகலை, மாத்தளை, கம்பஹா, கேகாலை, கண்டி, கொழும்பு, நுவரெலியா, பதுளை, மொனராகலை, களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மின்னல் தாக்கங்களினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை குறைத்துக் கொள்வதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் கவனஞ்செலுத்துமாறு பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் இன்று பிற்பகல் 2 மணிக்கு பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும். சப்ரகமுவ, மத்திய, தென், ஊவா, மேல் மற்றும் வட மேல் மாகாணங்களிலும், அநுராதபுரம் மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் ஏனைய சில பிரதேசங்களிலும் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு திடீரென 70 - 80 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த பிரதேசங்களில் மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு செல்வதை தவிர்த்துக் கொள்வது சிறந்தது என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம)

# பயணிகளை இறக்கிச் சூடு! பாகிஸ்தானில் 14 பேர் சாவு

கராச்சி,ஏப்.19

பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்தவர்களைக் கீழே இறக்கிச் சரமாரியாக சுட்டுக் கொன்ற சம்பவம் பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்தில் நடந்தது.

கராச்சிகவாதர் வழித்தடத்தில் பயணித்துக்கொண்டிருந்த பேருந்துகளை நிறுத்திச் சோதனையிட்ட இராணுவச் சீருடை தரித்துத் துப்பாக்கி ஏந்தி வந்த கும்பலே இந்தக் கொலைகளை நிகழ்த்தியது.

பேருந்தை நிறுத்தி, பயணிகளின் அடையாள அட்டைகளைச் சோதனை செய்ததாகவும் பின்னர் 16 பேரைக் கீழே இறக்கித் தனியாக அழைத்துச் சென்று, அவர்களைத் துப்பாக்கியால் சுட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் துப்பாக்கிக் குண்டடிபட்ட நிலையில் அங்கிருந்து தப்பி ஓடிய இருவர் அருகில் உள்ள சோதனைச் சாவடிக்குச் சென்று நடந்த சம்பவத்தை கூறினர். இதையடுத்துச் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் தேடுதலில் ஈடுபட்டனர்.

## சிலியில் சோகம்
# வீட்டின் மீது விழுந்தது வானூர்தி பயணித்த 6பேரும் பரிதாபச் சாவு



சாண்டியாகோ, ஏப்.19

சிலிநாட்டில்வீட்டின்மீதுவானூர்திஒன்றுவிழுந்துவிபத்துக்குள்ளானது. தனியார் நிறுவனம் ஒன்றின் சிறிய ரக வானூர்தி ஒன்றே இவ்வாறு விழுந்து சிதறியது.

இந்தச் சம்பவத்தில் வானூர்தியில் பயணம் செய்த ஒரு விமானி, 2 பெண்கள் உட்பட 6 பேர் சம்பவ இடத்திலேயே சாவடைந்தனர். சிலியின் தென் பிராந்திய மான லோஸ் லாகோஸில் உள்ள பியூர்ட்டோ மோண்ட் என்ற இடத் தில் இந்தச் சம்பவம் நடந்தது. வானில் பறந்த சில நொடிகளில் கட்டுப்பாட்டையிழந்ததாலேயே குறித்த வானூர்தி விபத்துக்கு உள்ளாகியது என்று தெரிவிக்கப்படுகிறது.

விபத்தின்பின்னர்எரிபொருள்கசிந்துவானூர்தீதீப்பிடித்தது. வானூர்தியும், வீடும் முழுவது மாக எரிந்தன. வானூர்தி விழுந்த வீட்டில் குறித்த நேரத்தில் எவரும் இருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.



# தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்தார் பேருவின் முன்னாள் அதிபர்

லிமா.ஏப்.19.

பேருவின் முன்னாள் அதிபரான அலன் கார்சியா தவறான முடிவெடுத்துத் துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டு உயிரை மாய்த்தார். நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் நடந்தது. பேருவின் அதிபராகப் பதவி வகித்த காலத்தில் 'ஒடிரெக்' என்ற கட்டட நிறுவனத்திடமிருந்து 4 பில்லியன் டொலர்கள் லஞ்சமாகப் பெற்ற வழக்கின் தீர்ப்பு வெளியாகி அந்த நாட்டுப் பொலிஸார் அவரைக் கைது செய்வதற்கு அவரது இல்லத்துக்குச் சென்றபோதே அலன் கார்சியா தன்னைத் தானே சுட்டார்.

கைதுசெய்வதற்குச் சென்ற பொலிஸாரை எதிர்கொண்ட அவர், தனது சட்டத்தரணியுடன் தொடர்பு கொள்ளப்போவதாகக் கூறி அவருடைய அறைக்குள் சென்று கைத்துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு உயிர் மாய்த்தாதாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

1949ஆம் ஆண்டில் பிறந்த இவர், 1970 ஆம் ஆண்டில் அரசியலுக்குள் பிரவேசித்தார்.

பேருவின் அதிபராக 1985ஆம் ஆண்டிலிருந்து 1990ஆம் ஆண்டு வரை ஒரு தடவையும், 2006 ஆம் ஆண்டிலிருந்து 2011ஆம் ஆண்டு வரை இரண்டாவது முறையாகவும் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.



# ஆட்டம் ஆரம்பம்!
## புதுரக ஆயுதத்தைப் பரிசோதித்தது வடகொரியா

புதிய வகையான ஆயுதம் ஒன்றைச் சோதனை செய்துள்ளதாக வடகொரியா கூறியுள்ளது. இது தொடர்பாக வடகொரியாவின் அரச செய்திச் சேவையான கே.சி.என்.ஏ. செய்தி முகமை செய்தி வெளியிட்டது. அந்தச் செய்தியில் இந்தப் புதுரக ஆயுதச் சோதனை பற்றிய தெளிவான, மேலதிக தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

ஆனால், பரிசோதிக்கப்பட்டிருக்கின்ற சக்தி வாய்ந்த இந்தப் போர் ஆயுதம் ஏவுகணையோடு பொருத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இந்தச் சோதனை வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னின் மேற்பார்வையில் நடந்ததாகவும் கூறப்படுகிறது.

**பின்னணி**

அணு ஆயுதம் மற்றும் ஏவுகணைச் சோதனைகள் விவகாரத்தில் வடகொரியாவும் அமெரிக்காவும் முரண்பட்ட தேசங்களாக இருக்கின்றன. அமெரிக்காவோடும், அயல்நாடான தென்கொரியாவோடும் முரண்பட்டு வந்த வடகொரியா, தென்கொரியாவில் கடந்த ஆண்டு நடந்த குளிர்கால ஒலிம்பிக்போட்டியில் கலந்துகொண்டதிலிருந்து தென்கொரியாவுடனும் அமெரிக்காவுடனும் இணக்கத்தைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தது.

கடந்த ஆண்டு ஜீன் மாதம் கிம் ஜோங் உன்னும், அமெரிக்க அதிபர் ட்ரம்பும் முதற்தடவையாகச் சிங்கப்பூரில் சந்தித்துப் பேசினர். வடகொரியா அணு ஆயுதச் சோதனைகளை நிறுத்தி, அமைதிக்குத் திரும்பியது. இதைப் பன்னாடுகள் வரவேற்றன. ஆனால், அமெரிக்காவும் தென்கொரியாவும் தொடர் இராணுவப் பயிற்சிகளில் ஈடுபட்டன. அத்தோடு வடகொரியா மீது விதித்த எந்தவொரு தடைகளையும் அமெரிக்கா நீக்கவில்லை. இதற்கிடையில் நடந்த டிரம்ப் -கிம்மின் 2ஆவது சந்திப்பு வியட்நாமின் தலைநகர் ஹனோயில் தோல்வியில் முடிந்தது. தற்போது 3ஆவது சந்திப்புக் குறித்துப் பேச்செழுந்துள்ளது. ரஷ்ய அதிபர் புடினும் கிம் ஜோங் உன்னும் சந்திக்கவிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையிலேயே இந்த ஆயுதச் சோதனை நடந்துள்ளது.



இந்தியாவின் அகர்தலா புறநகர்ப் பகுதியில் ஆண்டுதோறும் இந்துக்களால் 'கஜ்ரான்' என்கிற விழா நடத்தப்படுகிறது. இந்த வருடத்துக்கான குறித்த நிகழ்வில் பங்கேற்கக் காத்திருக்கிறார் இந்துக்களின் முழுமுதற் கடவுளான சிவபெருமானின் வேடம் தரித்த ஒருவர். அவர் புகைப்பிடிக்கிறார். இந்த ஒளிப்படத்தைப் பன்னாட்டு ஊடகமான 'ரெயிட்டர்ஸ்' வெளியிட்டது.



# நன்றி கூறினார் போப் பிரான்சிஸ்

பாரிஸ்,ஏப்.19

பிரான்ஸின் நாட்ரே டாம் தேவலாயம் தீக்கிரையானபோது அந்தத் தீயை அணைப்பதில் ஈடுபட்ட தீயணைப்புப் பணியாளர்களுக்குப் போப் பிரான்சிஸ் நன்றி தெரிவித்தார். இது குறித்துப் போப் பிரான்ஸிஸ் கூறும்போது, "அதிக வருந்தத்தைத் தருகின்ற நிகழ்வு இது. தேவாலயத்தின் கூரை எரிந்த நிகழ்வால் நான் அதிர்ச்சி அடைந்தேன். தங்கள் உயிரைப் பணயம் வைத்துத் தேவாலயத்தில் ஏற்பட்ட தீயை அணைத்த பணியாளர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

**பின்னணி**

பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் இருக்கின்ற யுனெஸ்கோவின் பாரம்பரியச் சின்னங்களில் ஒன்றும், 850 ஆண்டு பழமையானதுமான நாட்ரேடாம் தேவாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை தீ விபத்து ஏற்பட்டது. தீயணைப்புப் பணியாளர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்கள் வரவழைக்கப்பட்டனர். அருகில் இருக்கும் தேவாலயங்களும் மணிகளை ஒலிக்கவிட்டு உதவி கோரின. இந்தத் தீ விபத்தில் தேவாலயத்தின் மரத்திலான கூரை எரிந்தது. பல மணி நேரப் போராட்டங்களுக்குப் பின்னர் தேவாலயத்தின் தீயைப் பணியாளர்கள் அணைத்தனர்.

# தமிழகத்தில் வாக்குப்பதிவு!

தமிழ்நாடு,ஏப்.19

இந்திய நாடாளுமன்றத்; தேர்தல் பல கட்டங்களாக நடந்து வருகின்ற நிலையில், தேர்தலின் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவுதமிழ்நாடுஉட்பட12மாநிலங்களின் 95 தொகுதிகளில் நேற்று நடந்தது.

தமிழகம் மற்றும் புதுவையில் உள்ள 39 நாடாளுமன்றத் தொகுதிகளில் 66ஆயிரத்து 167 வாக்குச்சாவடிகளில் இந்த வாக்குப்பதிவு நடந்தது.


தமிழ்நாட்டில் அ.தி.மு.க. தலைமையில் பாரதிய ஜனதா கட்சி (பாஜக), பாட்டாளி மக்கள் கட்சி (பா.ம.க.), தேசிய முற்போக்கு திராவிட கழகம் (தே.மு.தி.க.), புதிய நீதி கட்சி, புதிய தமிழகம், ஆகிய கட்சிகள் இணைந்து தேர்தலை எதிர்கொள்கின்றன.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சி, கொங்கு மக்கள் தேசிய கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம், இந்திய கம்யூனிஸ்ட், இந்திய ஜனநாயக கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகியவை இணைந்து இந்த முறைதேர்தலைஎதிர்கொள்கின்றன.

நடிகர் கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் இந்தத் தேர்தலில் முதல் முறையாகப் பங்கெடுக்கிறது. நாம் தமிழர் கட்சி அனைத்துத்தொகுதிகளிலும்தனித்துப் போட்டியிடுகிறது.

பல விதங்களிலும் தமிழ்நாட்டுக்குத் திருப்பு முனையான, இந்தத் தேர்தல் தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றத்தையும் ஏற்படுத்தலாம்என்பதால்பெரும்முக்கியத்துவம்வாய்ந்ததாகஉற்றுநோக்கப்படுகிறது.

வாக்குஎண்ணிக்கைமே23ஆம்திகதி நடைபெறும்என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



கூட்ட நெரிசலைத் தவிர்ப்பதற்காகத் தமிழ் சினிமா பிரபலங்கள் பலரும் நேற்றுக் காலை 9 மணிக்குள் வாக்களித்துத் திரும்பினர்.

## ஸ்ராலின் மீது முறைப்பாடு!



தமிழகத்தில் நேற்று நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவுகள் நடந்த நிலையில், தேர்தலில் வாக்களித்து விட்டுச் செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. தலைவர் மு.க. ஸ்ராலின், தாம்மாற்றத்துக்காகவாக்களித்ததாகவும், பொதுமக்களை மத்திய மாநில அரசுகளுக்கு எதிராக வாக்களிக்கும்படி கூறியதாகவும்அ.தி.மு.க. சார்பில்தேர்தல்ஆணையகத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டது.

மக்களின்மனநிலையில்தாக்கத்தைஏற்படுத்தும்வகையில் பேசியதால், ஸ்ராலின் தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறியுள்ளதாகவும், அவர்மீதுமக்கள்பிரதிநித்துவச்சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அ.தி.மு.காவின் சார்பில் தலைமைத் தேர்தல் ஆணையாளருக்குக் கடிதம் எழுதினார் பாபு முருகவேல்.

## பரப்புரைகள் முடிந்த பின்பும் ஊடகங்களில் விளம்பரங்கள்

புதுடெல்லி,ஏப்.19


தமிழகத்தில் நேற்று வாக்குப்பதிவு நடந்த நிலையில் கடந்த செவ்வாய்க் கிழமை மாலை 6 மணியுடன் பரப்புரைகளுக்கான அனுமதிக் காலம் முடிவுக்கு வந்தது.

இதைமீறிச் சமூக வலைத்தளங்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களில் பரப்புரை செய்யக் கூடாது. இவை அனைத்தையும்சேர்த்து'மின்னணு ஊடகம்'எனும் பிரிவாக ஆணையகம் குறிப்பிடுகிறது.

இந்தநிலையில், நேற்றுத் தேர்தல் நடந்த மாநிலங்களின் பகுதிகளில் இருந்து இதை மீறிப் பரப்புரைகள் நடந்ததாகத் தேர்தல் ஆணையகத்துக்கு முறைப்பாடுகள் குவிந்தன.

முகநூலில் அதிகளவு பரப்புரைசார் விடயங்கள் நடப்பது சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனாலும்தேர்தல் ஆணையகம் எவர்மீதும் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கவில்லை.



1951ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவில் நடந்த அனைத்துத் தேர்தல்களிலும் வாக்களித்த, கோவையைச் சேர்ந்த 103 வயதான மாரண்ணன். இவர் கருப்பராயன் பாளையத்தில் உள்ள வாக்குச்சாவடியில் நேற்று வாக்களித்தார்.

## விஜய் படப் பாணியில் முறைப்பாடு

கோவைத் தொகுதி போத்தனூர் சித்தன்னபுரம் வாக்குச்சாவடியில் வாக்களிப்பதற்காகச்சென்றிருந்தராஜேஷ்என்பவர்தனதுவாக்கை வேறுஒருவர்போட்டுவிட்டார்என்றுதேர்தல்அதிகாரிகளிடம்முறைப்பாடளித்தார்.


இதுபற்றி மேலும் தெரியவருவதாவது:

காலை 11 மணிக்கு வாக்களிக்கச்சென்ற அவர் வாக்களிப்பதற்காக வாக்குச் சாவடிகளில் பணியாற்றும் அதிகாரிகளை அணுகிய போது,

நீங்கள் ஏற்கனேவே வாக்களித்து விட்டீர்கள் என்று அவர்கள் கூறினார்கள். ஆனால் ராஜேஷோ தான் இப்பொழுது தான் வாக்களிப்பதற்கு வந்ததாகத் தெரிவித்தார்.

அவருடைய கையில் வாக்களித்ததை உறுதிப்படுத்தும் வகையில் பூசப்படுகின்ற மை உள்ளதா என்று பரிசோதிக்கப்பட்டது. பின்னர் சிறிது நேரம் காத்திருக்கச் சொல்லப்பட்டது.

இதனால் அவருடை வாக்கை வேறு ஒருவர் அளித்திருப்பதாகச் சந்தேகித்த ராஜேஷ் தேர்தல் அதிகாரிகளிடம் இது குறித்து முறைப்பாடளித்தார்.



## இன்றைய நாள்

**மேடம்:** உற்சாக மனதுடன் பணிபுரிவீர்கள். தொழில் வளர்ச்சியால் பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்கள் விருந்து விழாவில் கலந்து கொள்வர்.

**இடபம்:** பணி நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். குடும்ப விஷயம் குறித்து பிறரிடம் பேச வேண்டாம். கடின உழைப்பால் தொழிலில் சீரான வளர்ச்சி உருவாகும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க கூடாது.

**மிதுனம்:** மனதில் குழப்பம் ஏற்படலாம். தொழிலில் அளவான உற்பத்தி விற்பனை இருக்கும். லாபம் சுமாராக இருக்கும். பெண்களுக்கு உறவினரால் செலவு அதிகரிக்கும்.

**கடகம்:** கடந்த கால உழைப்பின் பலன் தேடி வரும். நல்லவர்களின் அறிமுகத்தால் நன்மை கிடைக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை வியத்தகு வளர்ச்சி பெறும். பிள்ளைகளுக்காக தாராள பணம் செலவு செய்வீர்கள்.

**சிம்மம்:** திட்டமிட்ட பணிகளில் தாமதம் உருவாகலாம். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெற அதிக உழைப்பு தேவைப்படும். திடீர் செலவால் சேமிப்பு பணம் கரையும்.

**கன்னி:** உறவினர் அன்பைக் கண்டு மகிழ்வீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பணம் கொடுக்கல் வாங்கல் சீராக இருக்கும்.

**துலாம்:** கவனக்குறைவால் சிரமத்திற்கு ஆளாகலாம். நண்பரிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில் வியாபாரம் தாமத கதியில் இயங்கும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**விருச்சிகம்:** பேச்சு, செயலில் எளிமை நிறைந்திருக்கும். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப்பணி மேற்கொள்வீர்கள்.

**தனுசு:** தடைகள் விலகி வாழ்வில் அனுகூலம் காண்பீர்கள். தொழில், வியாபாரம் அபரிமிதமான வளர்ச்சி பெறும். தாராள பணவரவு கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**மகரம்:** மாறுபட்ட சூழ்நிலையால் தொந்தரவு ஏற்படலாம். தொழில் வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பெண்களுக்கு வீட்டுச் செலவில் சிக்கனம் தேவை.

**கும்பம்:** எதிர்பார்ப்பு நிறைவேற விடாமுயற்சி தேவைப்படும். அதிக நிபந்தனையுடன் கடன் பெற வேண்டாம். தாயின் ஆறுதல்பேச்சு நம்பிக்கை தரும்.

**மீனம்:** தொழிலில் விற்பனை அதிகரிப்பால் சாதனை படைப்பீர்கள். ஆதாயம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் நிர்வாகத்தின் நன்மதிப்பை பெறுவர்.

# விளான் அன்ரனிஸ் அரையிறுதிக்குள்

யாழ்ப்பாணம், ஏப். 19
சமநிலை தகர்ப்பு உதைமூலம் விளான் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் அரையிறுதிக்குள் நுழைந்தது.
வலிகாம் லீக்கின் ஆதரவுடன் வட்டுக் கோட்டை விளையாட்டுக்கழகம் நடத்தும் முருகுப்பிள்ளை விக்னேஸ்வரநாதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான, அணிக்கு 9 பேர் பங்குபற்றும் மின்னொளியிலான கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டத்தில், விளான் அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பைஸ்ரார் விளை யாட்டுக்கழகம் மோதியது.
ஆட்டத்தின் முதல் பாதியில் பைஸ்ரார் விளையாட்டுக்கழக அணி தனக்கு கிடைத்த தண்டனை உதையை கோலாக மாற்றியது.
இரண்டாவது பாதி ஆட்டத்தில் விளான் அன்ரனிஸ் அணி தனக்கு கிடைத்த தண்டனை உதையை கோலாக மாற்றியது. 1:1 என்ற கோல் கணக்கில் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.
வெற்றியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் விளான் அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி அரையிறுதிக்குள் நுழைந்தது. (ஒ.23)

# அரையிறுதிக்குள் நுழைந்தது சென்.லூட்ஸ் வி.கழகம்

யாழ்ப்பாணம், ஏப். 19
சென்.லூட்ஸ் விளையாட் டுக்கழக அணி பாரதி விளையாட்டுக்கழக அணியை வீழ்த்தி அரையிறுதி ஆட்டத்துக்குள் நுழைந்தது.
வலிகாம் லீக்கின் ஆதரவுடன் வட்டுக் கோட்டை விளையாட்டுக்கழகம் நடத்தும் முருகுப்பிள்ளை விக்னேஸ்வரநாதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான, அணிக்கு 9 பேர் பங்குபற்றும் மின்னொளியிலான கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டத்தில், சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பாரதி விளையாட்டுக்கழகம் மோதி யது.
முதல்பாதி ஆட்டத்தில் இரண்டு அணிகளும் எந்தக் கோல்களையும் பதிவு செய்யவில்லை.
இரண்டாவது பாதி ஆட்டத்தில் சென். லூட்ஸ் அணி தனக்குக் கிடைத்த தண்டனை உதையை கோலாக மாற்றியது. இறுதியில் 1:0 என்ற கோல் கணக்கில் ஆட்டம் நிறைவுக்கு வந்தது. சென். லூட்ஸ் அணி அரையிறுதிக்குள் நுழைந்தது. (ஒ.23)

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப். 19
ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் யாழ்ப்பாண மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்ட தொடரின் 'பி' பிரிவு அணிகளுக்கு இடையில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக்கழக அணிக்கும், வளக்கம்பறை அம்பாள் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.
மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணிக்கும், நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணிக்கும், சென்றல்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ஒ.23)





அரியாலை 100ஆவது சுதேசிய திருநாட்ட கொண்டாட்ட விழாவை முன்னிட்டு பிரிட்டிஸ் அக்கடமி ஓவ் சோட்டோக்கான் கராத்தே கழகம் தேசிய ரீதியாக நடத்திய கரத்தே போட்டியில் வடக்கு மாகாணத்திலிருந்து பற்றி சக்குறா சோட்டோக்கான் கரத்தே கழக மாணவர்கள் 7 தங்கப் பதக்கம், 8 வெள்ளிப் பதக்கம், 5 வெண்கலப் பதக்கம் உள்பட 20 பதக்கங்களைக் கைப்பற்றியுள்ளனர். (ஒ.23)

## கடற்கரை கபடி போட்டி முடிவுகள்

மன்னார், ஏப். 19
மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கடற்கரை கபடி போட்டியில் ஆண்கள் பிரிவில் மன்னார் பிரதேச செயலக அணியும், பெண்கள் பிரிவில் மாந்தை மேற்கு பிரதேச செயலக அணியும் வெற்றி பெற்றன.
அரிப்பு மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை போட்டிகள் இடம் பெற்றன.
ஆண்களுக்கான இறுதி ஆட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேச செயலக அணியை எதிர்த்து மன்னார் பிரதேச செயலக அணி மோதியது.
45:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் மன்னார் பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது.
பெண்களுக்கான இறுதி ஆட்டத்தில் மாந்தை மேற்குப் பிரதேச செயலக அணியை எதிர்த்து முசலி பிரதேச செயலக அணி மோதியது.
35:26 என்ற புள்ளிகள் அடிப்படையில் மாந்தை மேற்கு பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது. (ஒ.23)





## தங்கப் பதக்கத்துக்கான மாட்டு வண்டிச் சவாரி

### வலி.வடக்கில் ஞாயிறன்று

யாழ்ப்பாணம், ஏப்.19
தங்கப் பதக்கத்துக்கான மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி யாழ்ப்பாணத்தில் மீண்டுமொருமுறை இடம்பெறவுள்ளது. வடக்கு மாகாணம் தழுவிய ரீதியில் இந்தப் போட்டி இடம்பெறவுள்ளது.
இளவாலை வருத்தபடாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பகல் ஒரு மணிக்கு வலிவடக்கு சவாரி விடந்தையில் போட்டிஇடம்பெறவுள்ளது.
நான்கு பிரிவுகளாக இடம்பெறும் இந்தப் போட்டியில், நான்கு பிரிவிலும் முதலிடம் பெறும் வெற்றியாளர்களுக்கு தங்க பதக்கம் பரிசாக வழங்கபடவுள்ளது.
ஏனைய வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன என்று வருத்தப்படாத வாலிபர். சங்கம் அறிவித்துள்ளது.
சவாரிப் பிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.
வழக் கொழிந்து போயிருந்த தமிழர் பண்பாட்டு, வீர விளையாட்டுக்களில். ஒன்றான மாட்டு வண்டிச் சவாரிப் போட்டிகள் வடக்கு மாகாணத்தில் தற்போது பரவலாக இடம்பெறுகின்றன.
மாதத்தில் ஒருமுறையாவது சவாரிப் போட்டி இடம்பெறும் அளவுக்கு ,அது வளர்ந்துள்ளது.
யாழ்ப்பாணத்தில் அதற்கென சங்கம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. (21)

## மாவட்ட குழுநிலை போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப். 19
யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டுத் திணைக்க ளத்தினர் பிரதேச செயலகங்களுக்கு இடையில் நடாத்திவரும் இந்த ஆண்டுக்கான குழுநிலைப் போட்டிகளில் இன்று எல்லே போட்டியும், நாளையும் நாளைமறுதினமும் கபடிப் போட்டிகளும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
மாவட்ட நிலை எல்லேப் போட்டிகளில் பெண்களுக்கான போட்டிகள் அராலி மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்திலும் ஆண்களுக்கான போட்டிகள் சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி மைதானத்திலும் இன்று நடைபெறும் எனவும், மாவட்ட நிலை கபடிப் போட்டிகளில் நாளை பெண்களுக்கான போட்டிகளும் நாளை மறுதினம் ஆண்களுக்கான போட்டிகளும் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.9)




# டோனி தயார்

ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஹைதராபாத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் காயம் காரணமாக விளையாடாத டோனி, தற்போது அடுத்த ஆட்டத்துக்குத் தயாராகியுள்ளார் என்று தெரிவித்தார் அந்த அணியின் துணைத் தலைவர் ரெய்னா.

தசைப் பிடிப்புக் காரணமாக ஹைதராபாத்துக்கு எதிரான ஆட்டத்தில் டோனி விளையாடவில்லை. டோனி இல்லாத சென்னை அணி அனைத்துத் துறைகளிலும் தடுமாறி தோல்வியடைந்தது. அந்த அணி அடுத்ததாக கோக்லி தலைமையிலான பெங்களூரை நாளைமறுதினம் எதிர்கொள்கிறது. இந்த நிலையில் இந்த ஆட்டத்தில் டோனி விளையாடுவார் என்று தெரிவித்தார் ரெய்னா. (ம)



## உலகக்கிண்ணத் தொடர்

# அறிவிக்கப்பட்டது இலங்கை அணி!

## 4 வருடங்கள் விளையாடாத கருணாரத்ன தலைவரானார்



இங்கிலாந்தில் அடுத்த மாதம் 30ஆம் திகதி நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடருக்கான இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட்டது. மலிங்க தலைமைப் பதவியில் இருந்து நீக்கப்பட்டு கருணாரத்ன பதில் தலைவராகப் பெயரிடப்பட்டார்.

உலகக்கிண்ணத் தொடருக்கான தத்தமது அணிகளை ஒவ்வொரு கிரிக்கெட் சபைகளும் அறிவித்து வந்தன. இலங்கை கிரிக்கெட் சபை உலகக்கிண்ணத் தொடருக்கான தனது அணியின் தலைவர் கருணாரத்ன என்று நேற்றுமுன்தினம் அறிவித்தது. ஏனைய வீரர்களின் விவரம் நேற்று அறிவிக்கப்பட்டது.

இலங்கை அணி - கருணாரத்ன (தலைவர்), அவிஸ்க பெர்னான்டோ, திரிமன்ன, குசல் பெரேரா, குசல் மென்டிஸ், மத்தியூஸ், டி சில்வா, வண்டர்சே, திசர பெரேரா, இசுரு உடான, மலிங்க, லக்மல், நுவான் பிரதீப், ஜீவன் மென்டிஸ், சிறீவர்த்தன.

இந்த அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் டினேஸ் சந்திமல் இடம்பெறவில்லை. அத்துடன் சன்டகனும் புறக்கணிக்கப்பட்டுள்ளார். அணித் தலைவராக பெயரிடப்பட்டுள்ள திமுத் கருணாரத்ன அண்மையில் டெஸ்ட் அணித் தலைவராகப் பெயரிடப்பட்டார். அவர் ஒருநாள் தொடரில் கடந்த நான்கு வருடங்களாக விளையாடவில்லை. அவர் ஒருநாள் அணியில் மீண்டும் சேர்க்கப்பட்டு தற்போது தலைமைத்துவமும் அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. (ம)

# கோக்லி ஒரு அடிபட்ட புலி

## பெர்குசன் எச்சரிக்கை

ஐ.பி.எல். தொடரில் கோக்லி தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து வந்தாலும் அவர் அடிப்பட்ட புலி. உலகக்கிண்ணத் தொடரில் அவரிடம் எச்சரிக்கை மிகமிக அவசியம் என்று தெரிவித்தார் நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் பெர்குசன்.

கோக்லி தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

விராட் கோக்லி பன்னாட்டு அளவிலான சூப்பர் ஸ்டார். அவர் இந்திய அணிக்காக விளையாடுவதை காட்டிலும் பெங்களூருக்காக விளையாடுவதில் மிகப்பெரிய மாறுபாடு உள்ளது. அவர் விரும்பியபடி ரி20 லீக் தொடரில் வெற்றி கிடைக்காமல் இருந்திருக்கலாம். ஆனால், உலகக்கிண்ணத் தொடரில் அவர் மோசமாக விளையாடுவார் என்று சொல்ல முடியாது. இது வேறுபட்ட போட்டி, வேறுபட்ட அணி, வேறுபட்ட விளையாட்டு. நியூசிலாந்து அணி அவர் மீது ஒரு பார்வை வைக்கும்' என்றார். (ம)

## என்னவும் நடக்கலாம்


# ஆர்.சி.பிக்கு வந்த ஸ்ரெய்ன் இந்தத் தொனியில் எச்சரிக்கை

பெங்களூர் அணிக்கு அழைக்கப்பட்ட ஸ்ரெய்ன், எப்போது என்னவேண்டுமென்றாலும் நடக்கலாம் என்று எச்சரிக்கை விடுத்தார். பெங்களூர் அணி தொடர் தோல்விகளைச் சந்தித்து கிட்டத்தட்ட தொடரில் இருந்து வெளியேறும் நிலையில் உள்ளது. இந்த நிலையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அனைத்தும் விரைவில் நடந்து முடிந்தது. கடந்த வாரம் கேரி கிறிஸ்டன் அழைத்தார். அவர் என்னை விளையாடிக்கொண்டிருக்கிறேனா, பந்து வீசுகிறேனா என்று வினவினார். நான் ஆம் என்றேன். ஐபிஎல் கிரிக்கெட்டில் திடீரென வந்து பாதியில் ஆடுவது கடினமானது. உலகக்கோப்பை கிரிக்கெட்டும் நம் கண் முன் நிற்கிறது. ஆனால் இவற்றையெல்லாம் கடந்து நான் இன்று இங்கு இருக்கிறேன். ஐபிஎல் தொடரில் இம்முறை எந்த அணியும் என்னை தேர்ந்தெடுக்கவில்லை. அது பற்றி பரவாயில்லை. வருத்தமொன்றும் இல்லை. பயிற்சியாளர்கள், அணி நிர்வாகம் என்னவெல்லாமோ திட்டமிடுவார்கள். அந்தத் திட்டங்களில் நாம் இல்லை என்றால் அதை தனிப்பட்ட பாதிப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது. ஐபிஎல் ஒரு வர்த்தகம்.

இந்த முறை ஆர்சிபி திட்டமிட்டபடி எதுவும் செய்யவில்லை. ஆனால் இதுதான் கிரிக்கெட். அதனால்தான் இதனை மீன்பிடிக்கும் விளையாட்டுடன் ஒப்பிடுகிறோம். காரணம் தூண்டிலைப் போடுகிறோம் எப்பொதும் மீன் சிக்குகிறதா இல்லையே. இந்த நிலையில் என் ஆற்றல் அணிக்கு உற்சாகத்தைக் கொடுத்தால் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம் - என்றார். (ம)



# தென்னாபிரிக்க அணி அறிவிப்பு

## அம்லா, டுமினிக்கு இடம் கிறிஸ்-மோரிஸ் இல்லை


உலகக்கிண்ணத் தொடருக்கான தென்னாபிரிக்க அணி நேற்றையதினம் அறிவிக்கப்பட்டது. அம்லா, டுமினி ஆகியோருக்கு இடம் கொடுக்கப்பட்டது. சகலதுறை வீரர் கிறிஸ் மோரிஸ் அணியில் இருந்து நீக்கப்பட்டார்.

எவ்வித மாற்றுப் பரிசீலனை இல்லாமல் பிளாசிஸ் அணித் தலைவராகப் பெயரிடப்பட்டார். குயின்டன் டி ஹொக் இலக்குக் காப்பாளராகப் பெயரிடப்பட்டுள்ளார். அவருக்கு காயம் ஏற்பட்டால் பதில் இலக்குக் காப்பாளராக எவரும் பெயரிடப்படவில்லை. எனினும் மில்லர் இலக்குக் காப்பாளராகச் செயற்படக்கூடியவர் என்பதால் குயின்டனுக்கு மாற்று மில்லரே என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை அறிவித்தது.

தென்னாபிரிக்க அணி விவரம் பிளாசிஸ் (தலைவர்), ஜேபி. டுமினி, டேவிட் மில்லர், டேல் ஸ்ரெய்ன், ஆண்டில் பெலுக்வயோ, இம்ரான் தாகிர், கேகிசோ ரபாடா, டிவைன் பிரிடோரியஸ், குவிய்டன் டி ஹொhக், ஆன்ரிச் நோர்ட்யே, லுங்கி இங்கிடி, எய்டன் மார்க்ரம், ராஸி வான் டெர் ட்யுஸன், ஹசிம் ஆம்லா, தப்ரைஸ் ஷம்ஸி. (ம)

## டோனிக்கே முதலிடம்

# உலகக்கிண்ணம் தொடர்பில் டினேஸ் மௌனம் கலைப்பு



உலகக்கிண்ணத் தொடரில் டோனிக்கு காயம் ஏற்பட்டால்தான் என்னால் களமிறங்க முடியும். எனினும் அணியில் இடம்பிடித்தமை மிகமிக மகிழ்ச்சியான விடயம் என்று தெரிவித்தார் இலக்குக் காப்பாளர் டினேஸ் கார்த்திக்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகக் கிண்ணத்துக்கான இந்திய அணியில் இடம்பிடிப்பது எப்போதுமே மகிழ்ச்சியான தருணம். நான் அதிர்ஷ்டசாலி. தேர்வு செய்ததற்கு நன்றி. நான் கடந்த 2017ஆம் ஆண்டு இந்திய அணிக்கு திரும்பியதில் இருந்தே, உலகக்கோப்பைக்கான என்னுடைய பயணம் தொடங்கியது. நான் ஏதாவது சிறப்பாக செய்தால் உலகக்கோப்பைக்கான அணியில் இடம் பிடிக்க முடியும் என்று நம்பினேன்.

அணி நிர்வாகம் என்னிடம் எதனை எதிர்பார்க்கிறதோ அதனை நிறைவேற்ற முயற்சி செய்வேன். டோனி அணியில் இருக்க, நான் ஒரு முதலுதவி சிகிச்சை பெட்டி போல்தான் அணியுடன் பயணம் செய்வேன். டோனி காயம் அடைந்தால், அன்றைய தினம் நான் காயத்துக்கான கட்டாக இருப்பேன். ஆனால் என்னால் நான்காவது இடத்தில் களமிறங்கி விளையாட முடியும் -என்றார். (ம)

# மும்பையிடம் வீழ்ந்தது டெல்லி







ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் டெல்லியை இலகுவாகத் தோற்கடித்தது மும்பை.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக குருனல் பாண்டியா 37 ஓட்டங்களையும், குயின்டன் டி ஹொக் 35 ஓட்டங்களையும், ஹார்டிக் பாண்டியா 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரபாடா 2 இலக்குகளையும், மிஸ்ரா, அக்சர் பட்டேல் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய டெல்லி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்று 40 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (ம)

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 584
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.04.18
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 54,554,030/-
வெற்றி இலக்கங்கள் 06 18 45 68 ஆங்கில எழுத்து D
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1561
சீட்டிழுப்பு திகதி 18.04.2019
வெற்றி இலக்கங்கள் 04 22 42 52 ஆங்கில எழுத்து T
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட் ரூ 29, 686, 336/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778
விற்பனை நிறுத்தப்பட்டு 2019.04.22 திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 18.04.2019
வெற்றி வாரம் 2499
வர்ணம் மண்ணிறம்
விருட்சிகம்
வெற்றி இலக்கங்கள் 26 42 50 60
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 31, 83, 690/=
19.04.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்ச்
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 20.04.19 சனி காலை 8 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 22.04.19 3.30pm
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

ஈரவிழிகளோடும் வதங்கிய வதனத்தோடும்
சொரிந்திடும் 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
விஜயகுமார் இந்துஜா
அன்னை மடியில் 27.06.2003
இறைவனின் இல்லத்தில் 19.04.2008



அன்பின் உறைவிடமே அழகிய மகளே
இந்துஜா – என்றும் நாமத்தவளே
எம்மை விட்டு – நீ சென்று
பதினொரு வருடங்கள் ஆனாலும்
இன்றும் உன் நினைவுடனே
நடைப் பிணங்களாய்
வாழ்ந்து அலைகின்ற
நாம் செலுத்தும் அஞ்சலிகள்
அம்மா, அப்பா, தம்பி இந்துஷன்
மற்றும் உறவினர்கள்.
கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.

A/L தமிழ் 2021, 2020
2019 வினாவிடை - ஆரம்பம்
077 284 8223
சனி 12.00
• 09 பேர் கொண்ட குழு வகுப்புக்கள்.
• மதிப்பீடு. தனியார் - துறையில் அனுபவம் மிக்க ஆசிரியர். நாக.தமிழிந்திரன் MA
யாழ்ப்பாணக் கல்லூரி
யாழ்.ஆஸ்பத்திரி முன்பாக

ஹோமியோபதி வைத்திய சேவை
IAS வைத்திய சேவை நிலையத்தினால் நீரிழிவு (சலரோகம்), மூட்டு, வாதம், ஆஸ்துமா உட்பட 19 நோய்களை முற்றாக மாற்றிக்கொள்ள கடந்த 37 வருட அனுபவம் வாய்ந்த வைத்திய சேவை நாளை 20.04.2019 சனிக்கிழமை பலநோக்கு கூட்டுறவுச் சங்க வளாகம் A9 வீதி, பரந்தன் சந்தியில் இடம்பெறும். பதிவுகளுக்கும் முற்பதிவுகளுக்கும் - 077 444 1082
27.04.2019 சனிக்கிழமை
இல. 125, பிரதான வீதி, 2ஆம் குறுக்குத் தெரு சந்தி, யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.
(CS 513/15/18)

MAJESTIC CINEPLEX



காஞ்சனா-3
Jaffna Platinum
10.30AM | 1.30PM | 4.30PM | 7.30PM | 10.30PM (Fri/Sat)



வெள்ளைப்பூக்கள்
Jaffna Bronze / Silver
10.15AM | 1.15PM | 7.15PM
10.15PM (Fri/Sat) / 4.15PM



நட்பே துணை
Jaffna Silver
10.15AM | 1.15PM
10.15PM (Fri/Sat)

மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள்
011 5 999 999
CEYLON THEATRES Since 1928
www.ceylontheatres.lk
MajesticCineplexSL

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
வடமாகாண மற்றும் மத்திய அரச போட்டிப் பரீட்சைகளுக்கான அனைத்து வினாத்தாள்களுக்குமான வகுப்புக்கள் குறைந்த கட்டணத்துடன் தொடர்ச்சியாக உங்கள் வசதிக்கு ஏற்ற நேர ஒழுங்குகளுடன் நடைபெறுகின்றன.
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதியில்)

கருத்தரங்கு தொடர் 7
SLAS, SLEAS, SLFS பதிவாளர் வருமான பரிசோதகர், நீதிமன்ற எழுதுநர், சமய பாட ஆசிரியர், வடமாகாண ஆசிரியர், LLB, சிறைக்காவலர் போன்ற பரீட்சைகளுக்கானது
காலம் : 20.04.2019
சனி : 9.00 → 3.00 Pm
எதிர்பார்க்கை நவீன மாற்றங்களை உள்ளடக்கியது
P. கமல்தாசன் SLPS
C. அமல்ராஜ் SLAS
T. பரணிதரன் LLB
K. குமணன் SLPS
நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T. P : 077 111 6739

திரு.ஷாம்சன் அவர்களின்
ஜேர்மன்
முதலாவது மொழிவகுப்பு ஆரம்பம்
வாரவகுப்புகள் : திங்கள் முதல் வியாழன் வரை
மேலதிக தகவலுக்கும் பதிவு செய்யவும் உடனே அழையுங்கள்
SAAMSON Experts in English Training
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி, யாழ்நகர்.
077 621 4567
077 1570 486

காசி யாத்திரை
ஆரம்பம் : 15.05.2019 | யாத்திரீகர் : 10 | நாள்கள் : 10
தரிசிக்கும் இடங்கள்:
டெல்லிநாராயணர் கோயில் வேறு இடங்களும் காசியில் 15 இடங்கள், கங்காபூசை, கயா, புத்தகயா, அலகாபாத், (கங்கா, யமுனா, சரஸ்வதி) திருவேணிசங்கமம், சீத்தாமடி, ஆக்ரா(தாஜ்மகால்), மதுரா கிருஷ்ண ஜென்மபூமி, பிரேமந்திர், பிரமாண்டமான கிருஷ்ணர் கோயில், செங்கோட்டை, இராமேஸ்வரம், உத்திர கோசமங்கை, திருப்புலானி, நவபாஷானம், பஞ்சமுக ஆஞ்சநேயர், அப்துல்கலாம் மணிமண்டபம், மதுரை மீனாட்சி அம்பாளையும் தரிசிக்கலாம்.
ஒரு நாள் சென்னையில் சொப்பிங்
பெற்றுக் கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை
4 விமான பயணடிக்கட், மூன்று வேளை மடப்பள்ளி ஆள்கள் சமைத்த உணவு, காப்பி, ரீ, குடிநீர் 2 பேருக்கு, வெஸ்ரன் கொமட், குளியலறை, இணைந்த அறைகள், பயணம் முழுவதும் A/C வாகன வசதி, யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரவும் திரும்ப யாழ் செல்லவும் வாகன வசதி ஒழுங்குகள் செய்து தரப்படும். பதிவு செய்யவும்.
"சென்றவர்களைக் கேளுங்கள் சென்று வரலாம் வாருங்கள்"
கலாநிதி.T.ஸ்ரீரெங்கநாதன் மகன் - ராஜன்
59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11
077 768 0102/ 077 736 2154
Email: Sriranganathan2601@gmail.com
(IN 9608) (14,17)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
P.உமாசங்கர் & வளவாளர்களின்
▸ SLAS,SLEAS (Open/Limited)
▸ நீதிமன்றபதிவாளர் (Open/Limited)
▸ புள்ளிவிபரவியலாளர் & அலுவலர்
▸ பாராளுமன்ற உத்தியோகத்தர்
▸ சிறைச்சாலை / புனர்வாழ்வு உத்தியோகத்தர்
▸ பட்டதாரி ஆசிரியர்
▸ சட்டக்கல்லூரி தெரிவு
P.உமாசங்கர் & S.நவநீதன் மற்றும் துறைசார் வளவாளர்கள்
பொது அறிவு, நுண்ணறிவு/ உளச்சார்பு, முகாமைத்துவம், முகாமை உளச்சார்பு சட்டம், ஆங்கிலம்
21.04.2019 ஞாயிறு
9am to 4.30 pm
நவீன மாற்றத்திற்கு அமைய முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்
தொடர்ந்து பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்
நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
076 166 1986, 077 741 7143, 077 394 2964, 071 813 0390

மாடி வீடு விற்பனைக்கு
யாழ். நகரின் மத்தியில் ரம்மியமான சூழலில் 3 1/2 பரப்பு விஸ்தீரணமும் 8500 சதுர அடியிலும் அமைந்த மாடி வீடு விற்பனைக்கு உண்டு. தனியார் நிறுவனங்கள், தனியார் வைத்தியசாலை மற்றும் விருந்தினர் விடுதிகள் அமைக்கக் கூடிய வகையில் 15 இற்கு மேற்பட்ட அறைகள், முகப்பு பூந்தோட்டம், 10 பேர் வரை உள்ளடக்கக்கூடிய மண்டபம் மற்றும் வாகன தரிப்பிட வசதிகளுடன் கூடியதாக இவ் வீடு அமைந்துள்ளது.
தொடர்பு - 0777 830 562

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.